ஓம் பரப்பிரம்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
விகடமும், அநுபவ விநோத நீதிகளும் நிறைந்த
உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.



ஒவ்வோரு மாத சஞ்சிகையும் 80-பக்கங்களுள்ளது.

***AMIRTHA GUNABODHINI***

*(The Largest Circulated High Class Tamil Monthly.)*

பத்திராசிரியர்:—திரிசிரபுரம்-எஸ்.ஜி. இராமாநுஜலுநாயுடு
பிரபல கிரந்த கர்த்தா. பிரசித்த அநுபவ ஞான சாஸ்திரி.

வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூபாய் 2.

## எட்டாவது கமலம்.

## Vol. 8.

**April 1933—March 1934.**

**ஸ்ரீமுக வருஷ வர்ல்யம்**

சித்திரைமீ முதல் பங்குனிமீ வரையில்.

[800-பக்கங்கள் கொண்டது.]

**"All our Knowledge is based upon Experience"—Vivekananda.**

"நம்முடைய ஸகல அறிவும் அநுபவத்தையே சார்ந்து நிற்கிறது."

**இ. மா. கோபாலகிருஷ்ண கோன்,**

"அமிர்த குணபோதினி" ஆபீஸ், 158-A, பிராட்வே, சென்னை.

 [காலிகோ பைண்டு ரூ. 1-6-0

பைண்டு செய்த வால்யங்கள் 2, 4, 5, 6, 7, 8-தனித்தனி விலை ரூ. 1-6-0

# அமிர்த குணபோதினி

இது தமிழ் அறிந்த ஒவ்வோருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் கீர்த்தி சிறந்த ஓர் உயர்தரத் தமிழ் மாதப் பத்திரிகை.

"அமிர்த குணபோதினி" எவ்வகைத் தொழிலுடையோருக்கும் அதிக பலனைத் தரும். படிக்கப் படிக்க விஷயமறிவதன்றிப் பேரானந்தமும் வித்வத்வமும் பெருகும்.

"அமிர்த குணபோதினி" ஸகலரும் அறியும்படி சுலப நடையில் எழுதப்படுகிறது. நமது நாட்டிற்கு நலமுண்டுபண்ணும் நல் விஷயங்களையே கொண்டிருக்கும்.

"அமிர்த குணபோதினி" ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், யாவர்க்கும் பிரியமான விஷயங்கள் உள்ளதாய் அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது.

"அமிர்த குணபோதினி"யின் முதல் பக்கத்தில் "ஆநந்த தரிசனம்" என்ற தலைப்பின் கீழ் எப்போதும் தத்துவஞான விஷயங்களும், ஈசுவர பக்தியைப்பற்றிய விஷயங்களும் நிறைந்திருக்கும். இவை யாவும் ஸர்வ மத ஸமரஸம். தேன்போல் இனித்துப் பால் போல் ருசிக்கும்.

"அமிர்தகுணபோதினி"யில்பிரதிதடவையும் உயர்தர ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்பத் தலையங்கம், உபஅங்கங்களும் தோன்றித் தேச நன்மையை நாடிய விஷயங்களும், ஆராய்ச்சிகளும் ததும்பி நிற்கும்.

"அமிர்த குணபோதினி"யில் தடவை தோறும் "பழமொழிக் குறிப்புகள்" என்ற தலைப்பின்கீழ் பல பழமொழிகளின் ஆழ்ந்த கருத்துகளையும் உலக ரகசியங்களையும் விவரிக்கப்படும்.

"அமிர்த குணபோதினி"யில் "பத்திரிகை ஆராய்ச்சி" என்ற தலைப்பில் எல்லாப் பத்திரிகைகளிலுமுள்ள சாரமான விஷயங்கள் காணப்படும்.

"அமிர்த குணபோதினி"யில் "பெண்கள் பக்கம்" எப்போதும் வெகு ஸ்வாரஸ்யமாய் இருந்துவரும்.

"அமிர்த குணபோதினி"யில் "பிரபஞ்ச தரிசனம்" என்ற தலைப்பில் சர்வ தேச சம்பந்தமான ஆராய்ச்சிகளுடன் இந்தியாவையும் ஒப்பிட்டு அருமையான குறிப்புகள் எழுதப்படும்.

"அமிர்த குணபோதினி"யில் ஒவ்வொரு தடவையும் "விகடப் பிரதாபன்" தோன்றுவான். மஹா விகடதூதன், விஜய விகடன் பத்திரிகைகளை யொப்ப விகடத் தலையங்கங்களும் ஹாஸ்யங்களும் தோன்றி, சலித்துப்போன மனதையும் உல்லாஸப்படுத்திவிடும். எல்லாம் உலக அநுபவ ஞானங்களே.

"அமிர்த குணபோதினி"யில் பிரதி தடவையும் "சென்ற மாதம்" என்ற தலைப்பின் கீழ் மாதாந்த விசேஷங்களைக் குறித்து ரஸமான சிறு சிறு குறிப்புகள் வரையப்படும்.

"அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்த தென்பதைப் பிறருடைய சிபார்சின்றி ஒவ்வொருவரும் தங்களுடைய அநுபோகத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம்.

"அமிர்த குணபோதினி" யின் சொற்ப சந்தாவையும் உற்று நோக்குங்கள். வருஷ சந்தா ரூபா ஒன்றே. அமிர்த குணபோதினி"ப் பத்திரிகைக்கு இணையாக வேறெந்தப் பத்திரிகையையும் சொல்ல முடியாது. உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரித்து ஆனந்த பரவசர்களாகும்படி வேண்டுகிறோம். இன்றே சேருங்கள். உடனே எழுதுங்கள். என்றும் ஆதரித்து இன்புறுங்கள்.

---

"அமிர்த குணபோதினி" ஆபீஸ், 158-A. பிராட்வே, சென்னை.

# அமிர்த குணபோதினி

## எட்டாவது கமலத்தின் விஷய அட்டவணை.

அடியிற் கண்ட இலக்கங்கள் பக்கங்களைக் காட்டுகின்றன.

☞ அன்பர்காள்! அட்டவணையை முற்றிலும் கவனித்தீர்களா? "அமிர்த குணபோதினி"யின் அருமை பெருமை உயர்வுகளைக் கண்டீர்களா? இன்னும் "அமிர்த குணபோதினி" யின் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் உலக அநுபவங்களைத் தன்னில் அடக்கிக் கொண்டுள்ள ரஸமான குறிப்புகளையும் உற்று நோக்குங்கள். "அமிர்த குணபோதினி"யின் நிகரற்ற மேன்மையையும், அதன் சிலாக்கியத்தையும் நன்கறிந்துகொள்ள இந்த அட்டவணையொன்றே போதுமானது. பத்திராசிரிய இராமாநுஜர் இந்த ஒரு வருஷ காலத்தில் தமது கடமையை எவ்வளவு தூரம் நன்குசெலுத்தி ஹிருதய பூர்வமாக உழைத்திருக்கிறரென்பதையும் அது தெரிவிக்கும். பழங்காலத்துப் பத்திராசிரியர்களின் திருக்கூட்டத்தைச் சேர்ந்த இராமாநுஜரின் முயற்சியை அன்பர்களாகிய நீங்கள்எல்லோரும் மனஸ்பூர்வமாக ஆதரித்து, "அமிர்த குணபோதினி"யின் ஒன்பதாம் ஆண்டுச்சந்தாவை உடனே மணியார்டர் மூலமாக அனுப்பி உதவுமாறுவேண்டிக்கொள்ளுகின்றேம்.என்றென்றைக்கும் நீங்கள் "அமிர்த குணபோதினி" யின் சந்தாதாரர்களாகவே விளங்கி, புகழுடன் ஆநந்தித்து, அதனைக் குடும்பப் போக்கிஷமாகக் கொண்டு பல்லாண்டு பல்லாண்டாக வாழவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கின்றேம். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக. நம் அன்பு வளர்க. வாழ்க. ஓங்குக. S. G. R.

ஓம் பரப்பிரம்மணே நம: 

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [REGISTERED.

| | | |
|---|---|---|
| கமலம்-8. | சென்னை ஸ்ரீமுகஞு சித்திரைமீ 1உ | இதழ் 85. |
| Vol. 8. | 1933--ம்ஞு ஏப்ரல்மீ 13உ | No 85. |

## ஆநந்த தர்சனம்



"ஒன்றேயென்றிரு, தெய்வமுண்டென்றிரு" பகவானுடைய அநந்த கல்யாண குணாதிசயங்களை சாமான்யர்களாகிய நாம் வர்ணித்து முடியுமா? இதுவரை கடவுளுடைய ரூப சாயைகளை யாராவது கண்டுபிடித்து வெளிப்படுத்திய துண்டா? அவருடைய நிலைமை இன்னவிதமென்றும், குறித்த இடத்தில் வஸிக்கிறாரென்றும், எவர்களாவது பார்த்திருப்பார்களா? பூர்வீக மகான்க ளால் வெளியிடப்பட்ட அற்புத ஸத்கிரந்தங்களை நாம் படித்தால் ஏதோ ஒரு ஆநந்தம் மனதுக்குள் உதிக்கிறது. அதை இன்னும் ஆராய்ந்து பார்த்தால் நமக்கு அநேக விஷயங்கள் தோன்றும். ஆங்காங்கு பெரியோர்கள் உபந்ய ஸிக்கும் விஷயங்களை யறிந்துகொள்வதால் ஞானத்தின் வன்மை தெரிய லாம். காட்டிலுள்ள நாகரிகமற்ற மனுஷ்யர்கள் கேவலம் உண்பதும் உறங்கு வதுமே தொழிலென்று எண்ணுவர். சிறந்த அறிவுடையோர்கள் புத்தி விருத்திக்கேதுவான கல்வியைக் கற்பது சிலாக்கியமென்பர். ஸதாசார ஸம்பன்னர்கள் ஸதா ஸத்கர்மங்களைச் செய்து மனதை அழுக்கின்றி வைத் துக்கொள்வதே ஆநந்தமென்பர். ஞானசிகாமணிகள் எப்போதும் ஆத்ம ஸ்வரூபத்தை யறிவதே பிரம்மானந்தமென்பர். இப்படி அவரவர்களின் பக் குவ நிலைமைக்கேற்றபடி மனிதர்களின் கொள்கைகளும் தொழில்களும் வித் தியாஸப்படுகின்றன. புத்திசாலிகளின் பெருமையைப் புத்திசாலிகளே யறியக் கூடும். சிறுவயதுமுதல் ஸன்மார்க்கத்திலேயே நடந்துவந்தால் அவர்களு டைய குணம் காலானுஸாரத்தில் நல்ல பழத்தைப்போல் ருசியைத் தரும். பகவான் நமக்கென்று கொடுத்துள்ள இவ்வுலக வாழ்க்கையைக் கெட்ட மார்க் கத்தில் உபயோகிக்காமல், அவரை மனஸ்பூர்வமாய் நம்பி, அவரைத் தியா

னித்து வழிபடுவதிலேயே செலுத்தவேண்டும். இவ்வுலகில் நமக்கு உறுதியான நம்பிக்கையொன்று வேண்டுமெனில், அது பகவத் கடாக்ஷத்தையன்றி வேறில்லை.

ஃ

"பெண்ணாய்ப் பிறந்தா ரெய்தும் பெருந்துயர்" ஸ்திரீயைப் புருஷன் நிந்தை செய்யலாமென்று எந்த சாஸ்திரமும் இடங்கொடுக்கவில்லை. ஸ்திரீ வர்க்கத்தை தேவதா ஸ்வரூபமாக நினையாதவன் பக்குவமற்றவனே. புத்திசாலித்தனம் எவ்வகையோருக்கும் உரியது. புத்தியானது ஸுவாஸனையுள்ளது. கஸ்தூரியை எங்கே வைத்தாலும் அதன் வாஸனை வீசும். அதுபோல் கல்வியும் ஞானமும் பெண்மக்களிடமிருந்தாலும் பிரகாஸிக்கும். வித்தியாவதியான ஸ்திரீரத்நத்தை அக்ஷரஞானமற்ற தன்னினத்து ஸாமான்ய ஸ்திரீகளைப்போலெண்ணி அலக்ஷியம் செய்வது அவிவேகம். ஸரஸ்வதி கடாக்ஷம் பொருந்திய அங்கனாமணியிடம் பகவான் ஸந்தோஷமாய் வஸிக்கிறார். சிலருக்கு தோஷாரோபணம் செய்வதே நித்தியவிருத்தி. உலகத்தில் யோக்கியர்கள் சிலர். அயோக்கியர்கள் பலர். இவ்வயோக்கியர்களின் காரியம் யோக்கியர்களுடைய பாபத்தைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு போவதேயாம். ஊரிலுள்ள நாய்கள் மலத்தைத் தின்று இடத்தை சுத்தம் செய்வதுபோல், அயோக்யர்கள் ஸாதுக்களின் பாபத்தை அவர்களை நிந்தை செய்வதால் ஏற்றுக்கொண்டுவிடுகின்றனர். ஸ்ரீராமபிரான் இராவண ஸம்ஹாரம் செய்து சீதையைக் கண்டவுடன் அவளுடைய நடத்தையைப் பற்றித் தமக்கு ஸம்சயம் உண்டாவதாகத் தெரிவித்துப் பின்வருமாறு சொன்னார் :—" ஸீதா ! கண் வலியுள்ளவன் தீபத்தைக் கண்டு ஸங்கடமடைவதுபோல் இராவணன் வீட்டில் வஸித்த உன்னைக் கண்டு அருவருப்புக் கொள்கிறேன் " என்றார். இதில் ஒரு விசேஷமுண்டு. ஸீதை ஸர்வோத்தமி, மகா பதிவிரதை. ஆகவே, இராமருடைய ஸந்தேகம் பிசகேயாம். கண் மீது தோஷமேயன்றி தீபத்தின்மீது தோஷமில்லை. ஸீதையின் கற்புக்கும் ஹானி இல்லை. இதைப்போல் விவேகிகளைத் தூஷிக்கும் துர்க்குணிகட்குத்தான் பாபமேயன்றி மற்றவர்க்கில்லை. தூஷிக்கும் சிந்தையுள்ளோருக்கு ஞான ஸம்பத்து கூடுவதும் அருமை.

ஃ

" அறப்பொருளை யறிந்தோராதார் " பெரியோர்கள் உபதேசிக்கும் ஸத்விஷயங்களை சிரத்தையுடன் உணராதவர்கள் கடைத்தேறுவது எங்ஙனம்? ஒருநாள் ஒரு நாய் தன் எஜமானிடமுள்ள பிரீதியால் ஒரு முழுத் தேங்காயை எவ்விதமோ வாயிற் கௌவிக்கொண்டுவந்து போட்டது. எஜமான் அதை உடைத்து இரண்டு மூடிகளாக்கி இளநீரை யருந்தி தேங்காயைத் தின்றார். அப்போது அந்த நாய்க்கு பூர்வ ஞானம் வந்தது. நாம் முன் ஜன்மத்தில் மனிதனாயிருந்தபோது ஒரு பெரியவர் தோன்றி அநேக உபதேசங்களைச் செய்தார். அவருடைய வார்த்தைகளைக் கொஞ்சமேனும் கவனியாதிருந்தோம். அப்போது அவர், " அடே ! என் உபதேசத்தின் ஸ்வாரஸ்யத்தை நீ அறியவில்லை. உன் அகந்தையே அதற்குக் காரணம்.

---

தனக்குப் புத்தியில்லை என்று தானே சொல்லிக்கொள்ளும்படியும் சில சமயங்கள் வருகிறது. அதைத் தன் நெஞ்சுமட்டும் அறியலாம். பிறர் அதை அறியாதபடி மறைக்கவேண்டும்.

ஆதலின், அடுத்த ஜன்மத்தில் நீ நாயாகப் பிறந்து உன் எஜமானனுக்கு அடிமைத் தொழில் செய்வாய். அப்போது என் பிரஸங்கத்தின் அருமை உனக்குத் தெரியும் ஸந்தர்ப்பம் நேரும்” என்றார். “அதுபோல், தேங்காயில் இளநீருண்டென்றும், சாயில் ருசியுண்டென்றும் அறியாமலும் அதை உடைத்து உண்ணும் வகை தெரியாமலும் விழித்தோம். இந்த அல்ப வஸ்துவில் இருக்கும் ஸாரம் நமக்குத் தெரியாமற் போனதற்கு நாய் ஜன்மமே காரணம். ஐயோ! பகுத்தறிவு நிறையப்பெற்றிருந்த மனுஷ்ய ஜன்மத்தில் பெரியவர் செய்த உபந்யாஸத்தின் ஸாரத்தை அறியாமற் போனேமே! அகந்தையன்றோ கெடுத்துவிட்டது” என்று வியஸனித்துக் கண்ணீர் விட்டது. இதைப்போல், நமது முன்னோர்களாகிய மகரிஷிகள் எழுதி வைத்துள்ள ஸத்கிரந்தங்களை நாம் படியாமலும், அவற்றின் ஸாரத்தை அறியாமலும் இந்த ஜன்மத்தை வீணாக்கினால், அடுத்த ஜன்மத்திலும் மனுஷ்யனாய்ப் பிறப்போமென்பது என்ன நிச்சயம்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். ஸமயம் வாய்க்கும்போதே ஸாரத்தைக் கவனிக்க வேண்டும். அப்பால் ஆகட்டுமென்றிருப்பது அறியாமையேயன்றி வேறில்லை. பசித்தவன் அன்னத்தைக் கண்டவுடன் புசிக்கத்தொடங்குவதுபோல், ஞானத்தை அடைய ஆவல்கொள்வோன் அதற்கேதுவான நூல்களைக் கண்டபோதே கற்பது சிலாக்கியம்.

ஃ

“அரிதரிது மானிடராதலரிது” என்றபடி மனிதஜன்மம் ஒரு விதத்தில் சிறந்ததாயினும், பலவிதத்திலும் துன்பத்திற்கு இடமாயிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் பல இடையூறுகளால் சூழப்பட்டிருக்கிறது. எந்தப் பக்கத்திலும் அபாயமே தென்படுகிறது. எண்ணிறந்த எதிர்பாராத் துன்பங்களால், வெகு ஜாக்கிரதையாக வாழ்ந்திருக்கும் மனிதனும் சுகத்தை யிழக்க நேர்ந்து துக்கத்தை யடைவான். பின்வரும் சுகதுக்காதிகளை முன்னறியவுஞ் சக்தியில்லை. அறிந்தாலும் அவைகளைத் தடுப்பதும் சுலபசாத்தியமல்ல. இவ்வளவு துன்பத்துக்கு ஆளாயிருந்தும், தம்மை வருத்தக்கூடிய ஸகல துக்கஹேதுக்களையும் நீக்க ஸர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவர் உண்டென்னும் நம்பிக்கையினாலல்லவோ நாம் நிச்சிந்தையாகச் சீவித்து வருகிறோம்.

ஃ

“பாரம் அவனுக்கு அன்னாய் நெஞ்சமே யஞ்சாதே நீ” என்றவாறு நாம் இவ்வுலகத்தில் அனுபவிக்கும் சுக சந்தோஷாதிகளுக்கு நமது கஷ்ட நிஷ்டூரங்களை யெல்லாம் அறிந்து, நம்மை இரக்ஷிக்கக் கடவுளிருக்கிறார் என்னும் நம்பிக்கையே யல்லவா முக்கிய காரணமாயிருக்கிறது. அளவிறந்த ஞானமும் நன்மையுங்கூடிய கடவுளிடத்து அற்ப மனிதராகிய நாம் செலுத்த வேண்டிய விசேஷித்த கடமை யாதெனில், அவரிடத்தில் சர்வதா நம்பிக்கை வைத்து நமது சுக சந்தோஷாதிகளின் சித்திக்கும், நமது கஷ்ட நிஷ்டூரங்

---

ஒரு வியாபாரத்தில் வேலைக்கு அமர்ந்து சமயம் நேர்ந்தபோதெல்லாம் கொள்ளை யடித்துப் பொருள் சேர்த்துக்கொண்டவர்கள் நல்லவர்களாகிவிட, அந்த வியாபாரியிடம் தன் சரக்குகளைக் கொடுத்து மோசம் போனவன்மட்டும் அந்த வியாபாரிக்குக் கெட்டவனாகத் தோற்றுகிறான்.

களின் நிவர்த்திக்கும், அவருடைய கிருபையே காரணமென்று மனோ நிச்சயஞ்செய்து நடந்துகொள்வதேயாம். இந்த மனோ நிச்சயமுடைய புருஷன் மற்றவர்களைப்போல மனித ஜன்மத்துக்கு உரித்தாயிருக்கும் தோஷங்களாலும் லோபங்களாலும் பீடிக்கப்படுவதில்லை. அவன் தன் குற்றங்களையும், பலஹீனத்தையும் பூர்த்தியாக அறிந்திருந்தபோதிலும், தன்னை இரக்ஷிக்கவும், தனது நன்மையைப் பாராட்டவும், கிருபை செய்யாநின்ற கடவுளுடைய கல்லியாண குணங்களைச் சிந்தித்துத் தைரியமடைவான். நாளை வருவதை இன்று அறியத் தனக்கு இயலாதிருந்தும், கடவுள் சர்வ வியாபகர் என்பதை நினைத்து ஊக்கம் அடைவான். தனக்கு ஆதரவாயிருப்பவர் கருணையங்கடலான பகவான் ஆதலால் தனது பலஹீனத்தையும் திக்கற்ற தன்மையையும் நினைத்து ஒருபோதும் துக்கம் பாராட்டமாட்டான். இவ்விதம் பரமாத்மாவிடத்தில் திடமான நம்பிக்கையுள்ள உத்தமன் அவருடைய திருஞானத்தால் தனக்கு ஞானமும், அவரது பரம சக்தியால் தனக்கு சக்தியும், அவருடைய ஆநந்தத்தால் ஆநந்தமும் தேடிக்கொள்கிறான். அவரது திருக்கல்யாண குணங்களின் ஒவ்வொன்றினது பயனையும் அடைந்து, அவரது சர்வபரிபூரணத்தை யுணர்ந்ததும் தனது அற்ப சரீரத்தை மறந்து விடுகிறான்.

ஃ

"எண்ணுராத் துயர் விளைக்கும்—உலகியற்கை" இத்தகைய துயரமான வாழ்க்கை நமக்கு சுகஹேதுவாயிருக்கும் பொருட்டும், நம் மனதுக்குள்ளாகவே ஒரு தைரியமுண்டாக்கிக் கொள்ளும்பொருட்டும் நம்மை ஆதரித்து இரக்ஷிக்கும் கடவுளை நம்புவதன்றி வேறொரு சாதனங்களுமில்லை. இந்த நம்பிக்கையான நிச்சயமில்லாவிடில் நமது வாழ்க்கை துக்க சாகரமாக முடியும். அல்லாமலும், கருணாநிதியாகிய கடவுளை நமக்குத் துணைக்கு வேண்டியவர்களில் முதன்மையானவராகக் கொள்வோமாகில் அது எவ்வளவு சகாயம்? சர்வ ரக்ஷகராகிய கடவுளிடத்தில் நம்பிக்கை வைப்பதினால் நமக்கு நேரிடும் துன்பங்களை நீக்கவும், தைரியத்துடன் சகிக்கவும், சக்தி யுண்டாகிறது. தன் பக்கத்தில் தனக்குச் சகாயம் செய்ய ஒரு சிநேகிதன் உண்டாயிருக்கும் பக்ஷத்தில், மனிதன் தன் சுபாவ சக்திக்கு மிஞ்சி முயற்சி செய்வான் என்பதும், அவ்வித சகாயமில்லாத பக்ஷத்தில், உள்ள தைரியத்தையும் இழந்து பலஹீனன் ஆவான் என்பதும் சத்தியம் அல்லவோ? தேவாநுகூலம் பெற்ற பல போர்வீரர் தங்கள் ஊக்கத்தினால் தானே வெற்றியடைந்திருக்கிறார்கள். அதுபோலவே, தெய்வத்தினிடத்து நமக்கு நம்பிக்கை, பொறுமை, ஊக்கம், உற்சாகம் முதலிய நற்குணங்கள் உண்டாகுமாகில், அது நம்மால் நிவர்த்தி செய்யக்கூடாத துன்பங்களின் பலத்தையும் ஒடுக்கிவிடும். இந்த சற்குணம் நமது தரித்திரதிசையிலும், துக்க தசையிலும் நமக்கு விசேஷ திருப்தியையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும். ஆதலின், நமது வாழ்நாள் முழுதும் நம்மைக் கருணையுடன் இரக்ஷித்தும், பிறகும் கைசோரவிடாமல் காலாந்தமளவும் துணைநின்றும் காப்பவராகிய கடவுளினிடத்தில் பூர்ண நம்பிக்கையும் திடமான பக்தியும் கொண்டு ஸதாகாலமும் அவரைத் தியானித்துவரக் கடவோம்.

---

அதிகக் கபடமான மனிதன் எவ்வளவு அன்பாக நடித்தபோதிலும், தன் கபட குணத்தை வெளியில் காட்டிவிடுகிறான்.

# நமது எட்டாவது ஆண்டு.

ஸர்வ வல்லபமுடைய கடவுளின் அருளால் நமது "அமிர்த குணபோதினி"க்கு இன்றுமுதல் எட்டாவது பருவம் ஆரம்பமாகின்றது. அதனை அன்புடன் ஆதரித்துவரும் நேயர்களனைவருக்கும் புது வருட சோபனம் கூறுகின்றோம். ஒரு பத்திரிகையின் அபிவிருத்தி அது தோன்றிய மறு வருஷத்தில் தெரிந்துவிடும். முதல் வருஷத்தில் சந்தா செலுத்தியவர்கள் அடுத்த ஆண்டிலும் ஆதரிப்பதற்கு அப்பத்திரிகையில் ஒருவித தனிச்சுவையும் வசீகரமும் இருந்தால்தான் முடியும். பத்திராசிரியரின் விருப்பங்களையும் அபிப்பிராயங்களையுமே தங்களுடைய விருப்பங்களாகவும் அபிப்பிராயங்களாகவும் பெரும்பான்மையும் அப்பத்திரிகா வாசகர்கள் கொண்டுவிடுவது இயல்பு. அதற்கேற்ற வித்வத் தன்மையும், நியாய முறையில் விஷயங்களை விவரித்துரைக்கும் ஆற்றலும், ஸமத்காரமும் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். ஒருவர் சென்ற வழியிலேயே மற்றவரும் சென்று ஒரு பத்திரிகையையோ, ஒரு நூலையோ அமைப்பது ஒருவிதம். மற்றவர் அனுசரிக்கும் வகையிலேயே தாமும் செல்லாமல், தமக்கென்று ஒரு நூதன அமைப்பைத் தொடங்கிக்கொண்டு, அப்புது முறையில் தமது சுதந்திர யூகத்துடனும் துணிந்துசென்று சுயமாய் ஒரு பத்திரிகையையோ நூலையோ அமைத்து, அதனையே உலகமும் வியப்புடனும் உத்ஸாகத்துடனும் ஏற்றுப் பாராட்டும் வண்ணமும், மற்றவரும் அவ்வழியையே ஏற்றுப் பின்பற்றுமாறும் செய்வது மற்றொரு விதம். இங்ஙனம் சுதந்திர யூகத்துடனும் மதிநுட்பத்துடனும் வரையப்படும் பத்திரிகைகளும் நூல்களும விசேஷித்த தன்மதிப்பும் சிறப்பும் பெற்று உன்னதம் கொள்கின்றன. இவ்வகையில் நமது "அமிர்த குணபோதினி"யும் சேர்ந்ததாகும். "அமிர்தினி" தோன்றிய நாள் முதற்கொண்டு, அது தனக்கென்று அமைத்துக் கொண்ட நூதன அமைப்பிலேயே இதுகாறும் சிறப்புடனும் நடைபெற்று வந்துள்ளது. இனியும் அவ்விதமே ஸர்வ சிலாக்கியமாய் ஜ்வலிக்குமாறு ஸர்வேச்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஃ

இப்புது வருஷத்தில் நமது அன்பர்களின் ஆதரணையைப் பெரிதும் விரும்பி நிற்கின்றோம். சுடர் விளக்காயினும் தூண்டுகோலின் துணையும் வேண்டும். நமது பத்திரிகாபிமானிகள் "அமிர்தினி"யின் அபிவிர்த்தியை நாடி கிஞ்சிற்று சிரமத்தை வகித்து, இதற்கு முன்னிலும் அதிகமான புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும்படி வேண்டுகிறோம். இந்தக் கடமை மற்றக் கடமைகளைவிட சிரேஷ்டமானதாகும். பொது நன்மையைக் குறித்த ஒவ்வொரு காரியமும் அழகாய் நடைபெறுவதற்கு ஆதரிப்பவரின் சிரத்தையே முக்கிய காரணம். சிரத்தையில்லாமல் எந்தக் காரியமும் சித்திக்காது. கடவுளை நோக்கித் தவம் செய்வோர் சிரத்தையை விட்டால் பயனடை

யார். கல்வியைக் கற்று வித்வானுக விரும்புவோன் படிப்பில் சிரத்தை கொள்ளாவிட்டால் பண்டிதனுகான். மந்திரம் ஜெபிப்போன் சிரத்தையை விட்டால் பயனடையான். ஒவ்வொரு தொழிலிலும் சிரத்தை இருக்க வேண்டியதவசியம். அதுபோல் "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையின் அபிவிர்த்தியை நாடும் உத்தமர்கள் பூரண சிரத்தைகொண்டு உழைத்து, தங்கள் பந்துமித்திரர்களுக்கும் சில ஸஞ்சிகைகளைக் காட்டி வாசிக்கும்படி செய்து அவர்களையும் புதிய சந்தாதாரர்களாகச் சேர்த்தனுப்புமாறு வேண்டுகிறோம். அவ்வாறு செய்யின் அதனுல் அவர்கட்கும் விசேஷித்த நன்மையுண்டாவதன்றியும், வழிநடப்பவனுக்கு வாகனம் கிடைத்ததுபோலப் பத்திரிகையை நடத்துவதற்கு அதிக உத்ஸாகமுண்டாகி, பத்திராசிரியரும் அதிக ஊக்கத்தோடு பாடுபட்டு, இப்பத்திரிகையை மேன்மேலும் மிக்க விநோதமாயும், உபயோகமுள்ளதாயும், உயர்நலஞ் சார்ந்ததாயும் சிறப்பித்து வருவதற்கு ஏதுவுமுண்டாமென்பது சொல்லாமலே விளங்கும்.

ஃ

ஒரு பத்திரிகையை ஆதரிக்கத் தொடங்கியவர்கள் தமது ஜீவகால முற்றும் தொடர்ந்து அப்பத்திரிகையை அபிமானித்துவருவது சிலாக்கியமாகும். அப்பத்திரிகைகளைச் சேர்த்துவைத்து வருட முடிவில் பைண்டு செய்துகொள்வது விலையில்லா மாணிக்கமாகவும், குடும்பத்திற்கு ஒரு பெரிய பொக்கிஷமாகவும், பிற்காலத்திய சந்ததியாரின் அறிவுக்கு உணவாகவும் இருக்கும். "அமிர்த குணபோதினி"யை ஆரம்ப முதற்கொண்டு ஆதரித்துவரும் அன்பர்கட்கும், இடையிற் சேர்ந்து அபிமானித்துவரும் நேயர்கட்கும் நமது நன்றியை ஹிருதயபூர்வமாய்த் தெரிவித்துக்கொள்கின்றோம். ஸர்வலோக சரண்யராகிய ஜெகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக. சுபம்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,
பத்திராசிரியர்.

# தேவை.

நமது அமிர்த குணபோதினிப் பத்திரிகைகளை எல்லா ஊர்களிலும் விற்பனை செய்யவும், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும், தக்க சாமர்த்தியம் வாய்ந்த ஏஜேண்டுகள் தேவை. முழு விவரத்துக்கு எமக்கு எழுதித் தெரிந்துக் கொள்ளலாம். நமது அமிர்த குணபோதினிக்கு ஏஜெண்டாகச் சேர்ந்து அதிக லாபம் அடைந்து திருப்திபெறுவீர்களாக.

மானேஜர்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுகவரு சித்திரைமூ 1உ

# சகிப்பின் தத்துவங்கள்.

தீர, அமர, நிதானித்துப் பொறுமைப்படுங் குணத்துக்கே சகிப்புத்தன்மை என்பர். எதிலும் சகிப்புத்தன்மையுடனிருக்கும் உயரிய சுபாவம் எல்லோருக்கும் எளிதில் வந்துவிடுவதில்லை. துன்பங்களிலும் சங்கடங்களிலும் உழன்று, 'உலகத்தின் தன்மை மனிதரை வருத்துவதே' என்று சங்கையற அறிந்துகொண்ட பின்பே அக்குணம் அமைகின்றது. பிறவியிலேயே சிலருக்கு ஒருவகைச் சகிப்புத்தன்மை,—மற்றவர் தம்மை எதுசெய்தாலும் கவனிக்காத தன்மை,—ஏற்படலாம். ஆனுல், அது பண்படுத்தப்பட்ட சகிப்புத்தன்மை ஆகாது. தீவிர புத்தியும் மானவுணர்ச்சியும் இல்லாத சிலர் தம்மை மற்றவர்கள் என்னதான் வைதாலும், மதிப்புக் குறைவாக நடத்தி இகழ்ந்தாலும் அவற்றை யறிந்துகொள்ளும் தன்மையின்றி, பின்னும் அவர்கட்கே உட்பட்டுக்கிடப்பர். இங்ஙனம் தன்மதிப்பு கெட்டு நிற்பதைச் சகிப்புத் தன்மையுடன் சேர்த்துக் கூறவொண்ணுது. சகிப்புத்தன்மையாவது, மற்றவர் நமக்குச் சூழும் கேடுகளைப் பொறுத்துக்கொண்டு இசைந்து, அனுசரித்து நின்று, நம் காரியங்களை மற்றவருக்குக் கெடுதியில்லாமல் நடத்திக்கொண்டு போவதேயாம். இயல்பாகத் தன்னில்தானே எழும் கோப ஆத்திரங்களை மனுேதிடத்துடன் அடக்குஞ் சக்தி வாய்ந்தால்தான் இந்தச் சகிப்புத்தன்மையில் பழக முடியும். இங்ஙனமாகக் கோபதாபங்களை நினைத்தபொழுதெல்லாம் அடக்கித் தணிப்பதென்பது எளிதான காரியமன்று. எத்துணையோ மகத்தான சகிப்புத்தன்மை வாய்ந்த மகான்களும் முனிவர்களுங் கூடச் சீறிச் சினந்த காலங்களுமுண்டு. பேய்போன்றுங் கண்டவாறு உழன்றிடுஞ் சிறுமனம் நம் சொல்லுக்கு என்றுமுதல் கட்டுப்பட்டு நிற்கத் தொடங்குகின்றதோ, அன்று முதற்கொண்டுதான் கோபத்தை அடக்குஞ் சக்தியில் நாம் வல்லவராதல்கூடும்.

ஃ

'சகிப்புத்தன்மை' என்பது ஆத்மபலத்தை அளக்கும் ஒரு பெரிய கருவியாகும். ஓயாப்பழிகளும், ஒழியாத நிந்தைகளும், ஒரு

வரை யொருவர் பழித்துத் தாழ்த்துதலும், வீணே குற்றங் குறை கூறுதலும், நன்றிமறந்த செய்கைகளும், துரோகச் சிந்தனைகளும், வஞ்சனை மோசங்களும், லோபங்களும், கண்ணீர்களும் நிறைந்த துயர ஸாகரமாம் இவ்வுலக வாழ்வினில் ஒருவன் சகிப்புத்தன்மை யைக் கொள்ளாவிடில் உயிர்கொண்டு வாழ்வ தெங்ஙனே? 'கடவுளை நினைந்து வாய் சொற்களைச் சொறிய, விதியினை நினைந்து கண்கள் நீரினைச் சொறிய' வருந்திடுங்காலந்தன்னில் சகிப்புத் தன்மையை யன்றி வேறு துணை எது? சகிப்புத்தன்மை யற்றோன் நட்பிலும், உறவிலும், உலகிலும் பிரிந்து எங்கும் பகைமையே காண்பான். நண்பர்களாயினோர் பல்லோர் தமது நலத்தையே நாடினோராவர். அன்னோரை நம்பிக்காத்து ஏமாறிய பொழுதுகள் எத்தனையோ உண்டு. அவர்தம் சுயநலங்கண்டு சிந்தை நொந்ததுமுண்டு. வஞ்சிக் கப்பட்டும், பல இடறுகட்காளாகியும் சோர்ந்ததுண்டு. உறவினரும் இங்ஙனமே தம் நலம் பேணுவோர்தான். செல்வம் இருந்தகாலத்து உடனிருந்து உண்ணுதலும், அச்செல்வம் பிரியுங்காலத்து அதன் முன்னரே பிரிதலுமுடையோராவர். இன்னோரின் தவறுகளையும், ஈனச்செயல்களையும் மன்னிக்கும் சகிப்புத்தன்மை யுள்ளவனே அன் னோருடன் கூடி வாழ்வதற்கு ஏற்றவனாவான். பிறருக்கு இட்டுத் தீய பெயரைச் சுமந்தவர்களே எங்கும் அதிகம். எவர் எவ்விதம் தூற்றிடினும், உண்மையைக் கடவுள் அறிவாரென்று தன்மட்டில் தான் பரிசுத்தமாக இருந்துகொண்டு சகிப்புத்தன்மையுடன் செல் வதே மனோ சமாதானம் தரும். கடவுளுக்கு முன்பாக உன் கட மையை நீ செய்து திருப்திபெறு; உன்னிடம் பலவித உபகாரங்க ளைப் பெறுவோர் விசுவாசிகளா—அல்லரா—என்பதை நீ கவனி யாதே. நன்றி மறந்த பாவத்தை அவர்களே சுமக்க விட்டுவிடு. உன் மட்டில் சகிப்புத் தன்மையுடன் உத்தமனாக நடந்துகொள்வதே பெரிய ஸமத்காரமான திறமையாம்.

ஃ

தான் மிக்க பலசாலியாயிருந்தும், தன்னை அறியாமையுடன் எதிர்ப்போனிடத்து ஆத்திரப்படாமல் அமைதியுடன் விலகுதல் சகிப்புத்தன்மையின் ஒரு பெருங்குணமாகும். தான் ஒரு காரியத் தின் லாபகரமான முடிவுக்கு எதிர்பார்த்திருக்கையில், இடையே எந்த அவமதிப்பு நேரினும் கருமமே கண்ணாகித் தனது காரிய முடிவிலேயே கருத்துடன் பொறுமைப்படுதலும் சகிப்புத் தன்மையைச் சேர்ந்ததே. தனக்குப் பிறர் செய்தது அநியாயமும் அதர்மமுமானதெனத் தெரியினும், தன் காலபேதத்தைக் கருதி

---

அது அருமையான விஷயமென்று இவர்கள் நினைத்து அனுப்பப் போக, அதைப் பெற்ற பத்திராசிரியர் அது உபயோகமற்றதென்று எண்ணி விடுகிறார்.

மனத்தைச் சாந்தப்படுத்தி நிற்றலும் சகிப்புத்தன்மையின்பாற் பட்டதே. தான் வாய் திறப்பின் வீண் கலகமோ, விரோதமோ நிகழுமென்று தனது மனோ உக்கிரகத்தை யடக்கி மௌனமாதலும் சகிப்புத் தன்மைக்குரியதே. உள்ளன்பு ததும்பப் பெற்றோரிடத்துச் சகிப்புத்தன்மை அதிகமாக விளங்கும். சகிப்புத்தன்மையற்றோர் ஒரு குடும்பத்திலோ, ஒரு வியாபாரத்துறையிலோ தலைவராயிருத்தற்குத் தக்கோராகார். சகிப்புத்தன்மை யில்லாதோர் பெரும் காரியமொன்றைச் செய்து முடிப்பதற்கு அருகரன்று. அவசர புத்தியும், ஆத்திரமும் எப்பொழுதும் அநர்த்தத்திற்கே கொண்டு செல்லும். எந்தத் தொழில் முறையிலும் சகிப்புத்தன்மை யிருந்தாலன்றி அதைச் செய்துமுடிக்க இயலாது. தன்னை யொருவன் அவதூறு செய்கிறானென்றும், தன்னைக் கெடுக்கச் சூழ்ச்சிகள் புரிகின்றானென்றும் தனக்குத் தெரிந்தபோதிலுங்கூட, அதைப்பற்றித்தான் முறையிட்டுக்கொள்ளவேண்டிய இடத்தில், தன் வார்த்தைக்கு அங்கு மதிப்பில்லை யெனவும், தன் சொல்லை அங்கு கவனியாரெனவும் அறியும் சமயம், கடவுளை நம்பி அவரிடம் தெரிவித்தவாறு சகிப்புத் தன்மையைக் கொள்வதல்லாது வேறு வழியில்லை. இவ்விதமே, உறவோ, நட்போ, தன் உத்தியோக பதவியோ, பிறரிடத்து ஊழியம் செய்து வயிறு வளர்க்கும் தன் ஜீவனமோ காத்துக்கொள்ள விரும்புவோனும், ஒருவரிடமிருந்து ஒன்றை இப்போதோ பிறகோ அல்லது அவரது அந்தியகாலத்திலோ பெறுதற்கு எதிர்பார்த்திருப்போனும் சகிப்புத்தன்மையைக் கொண்டால்தான் வெற்றிபெற முடியும். தான் கொண்ட காதலில், தெய்வீக அன்பில், கடவுள் பக்தியில்— சித்தி பெறவும் சகிப்புத்தன்மை தேவை. சகிப்புத்தன்மை இருந்தால்தான் குடும்பத்தினுள்ளும், சதிபதிகளினிடையிலும் சமாதானமும் அன்னியோன்னியமும் நிலவும்.

ஃ

தற்போது ஏதோ இயன்றவரை உத்தம குணங்களுள்ள நம்மைக் கோபமும் அதன் கொடுமைகளும் நம்முடைய பூர்வ மிருகத்தன்மைக்கு வலிந்து இழுக்கும் எமபாசங்கள் போன்றுள்ளன. நீண்டநாள் பயிற்சியின் பலனாக நாம் இப்பொழுது இருக்கும் சிரேயஸ்கரமான நன்னிலைமைக்கு எட்டியிருக்கிறோம். இதினின்றும் மீண்டும் திரும்பி அந்த நாறுகின்ற மூர்க்கமான மிருகத்தன்மைக்குப் போவது விரும்பத்தக்கதாகுமா? அது நமது மனிதத்

---

எது உத்தமமான புஸ்தகமோ அதை ஜனங்கள் தெரிந்துகொள்ள மறந்து விடுகிறார்கள். அதை எழுதிய ஆசிரியரையும் ஆதரிக்கத் தவறிப் போகிறார்கள். பிறகு எவ்விதமோ புஸ்தகம் விலையாகித் தீர்ந்தபிறகு அப்புஸ்தகத்தின் அருமை தெரிந்து வாயூறுகிறார்கள்.

தன்மைக்கழகாமோ? ஆத்மாவைப்பற்றிய அறிவால் மனத்தை யடக்குந் திறத்தைக் கொண்டோம். அந்தத் திறத்தால் மனுஷ்ய ஸமூகத்துள் முதற்படியான நிலைமையைப்பெற ஸமீபித்துள்ளோம். இதில் கோபமும் தாபமும் வந்துபுகின், நம்முடைய முன்னேற்ற மெல்லாம் ஒரே படியாய் அழிந்துபட்டுவிடுமே? ஒரு கலகத்தில் கொலையையோ, பெரிய காயங்களையோ தான் செய்து பின்னால் சிறைபடவேண்டி யிருக்குமென்பதை முன்னதாக நீள நினைத்துப் பார்த்துச் சகிப்புத்தன்மையுடன் தன்னை யடக்கிக் கொள்வதாகில், பிறகு துன்புறவும், சிறையில் அடைபடவும் நேராதன்றோ? ஒன்றை ஆத்திரத்தில் செய்துவிட்டுப் பிறகு வருந்துதலினும், முன்னதாகவே அதைச் செய்யாதிருக்கச் சகிப்புத்தன்மையோடும் தன்னைத் தடுத்து அடக்கிக்கொள்வதில் எவ்வளவோ நன்மைகளுள்ளன.

ஃ

எதிலும் நல்லதும் கெடுதலும் உண்டு. அவ்விதமே, சிற்சில சமயங்களில் இதே சகிப்புத்தன்மை கொள்ளக்கூடாத இடத்தில் மேற்கொண்டால் மிக்க கேடும் கேவலமும் பயக்கும். சிலர் சகிப்புத் தன்மை எப்பொழுதுமே இருக்கவேண்டியதென்று கூறுவர். தரும புத்திரரை அதற்கு உதாரணமாகக் காட்டுவர். தருமபுத்திரரின் சகிப்புத்தன்மைக்கும், நமது சகிப்புத்தன்மைக்கும் பேதமிருக்கின்றது. பாஞ்சாலி கண்ணன்பாற் கொண்டுள்ள பக்தி அமிதமானதென்றும், அதனால் கண்ணன் தோன்றித் திண்ணமாய்க் கைகொடுத்துதவுவாரென்றும் அவர் நன்கு அறிவர். அன்றியும், இறைவனே கண்ணனின் உருவாக அவதரித்துத் தர்மனுதியோரின் நண்பனாக வாழ்ந்துவந்த காலம் அது; அவர் காப்பாரென்ற உறுதியும் உள்ளத்துள்ளிருந்தது. அதனாலேயே, யாவும் அறிந்த தருமர் சகிப்புத் தன்மையுடனிருந்தார். தருமர் அத்தருணம் கலகம் விளைவித்திருப்பின் அப்பொழுதே நாடு அவர் வசமாயிருக்கும். அன்றியும், ஒரு வேளை தருமர் செய்தது அந்தக் காலத்திற்குப் பொருந்தியிருக்கலாம். ஆனால் இந்தக் காலத்தில்—பணமே தெய்வமாகக் கருதப் படுங் காலத்தில்—அதிகாரத்தில் ஆசை மிகுந்த காலத்தில்—முக்கியமாய்த் தன் மானத்துக்கும் மதிப்புக்கும் தாழ்வு சம்பவிக்கும் தருணங்களில் கோபத்தை ஓரளவு தோற்றிக்கொள்வதும் அவசியமானதே. அக்கோபம் தனக்கும் பிறருக்கும் கெடுதி பயக்காத தன்மையதாகவும் இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். பிறருக்குத் தீங்கு விளைவிப்பதாயின், அந்தத் தீங்கு வரையில் செல்லாதவாறு தன்னைத் தடுத்துக்கொள்ளவும் வேண்டும். தனக்காவது, தன் ஜீவனத்

---

பொழுது விடிந்ததும் தன் மோட்டாருக்குப் பெட்ரோல் எண்ணெய் இருக்கிறதா என்று பணக்காரன் கவலைகொள்ள, ஏழையோ காலையில் உண்பதற்குப் பானையில் பழயசோறு இருக்கிறதா என்று பார்க்கிறான்.

திற்காவது அக்கோபத்தால் அபாயம் நேருமெனில், அப்பொழுது கோபத்தை யடக்கி, தனக்கு ஒரு பாதுகாப்பும், தன் ஜீவனத்துக்கு வேறோரிடத்தில் புதிய ஏற்பாடும் செய்துகொண்ட பின்னர்—அக் கோபத்தைக் காண்பிப்பின், அப்பொழுது அது எவ்வித கெடுதியையும் விளைவிக்காது. கெடுதி நேரினும், ஜீவனத்திற்கு வழியற்றுப் போயினும், புதிய இடத்து ஏற்பட்டால் தன்னைச் சமாளித்துக் கொள்ளவும், தான் ரோசமுள்ளவனாய்த் தன்மதிப்பில் உயரவும் கூடுமானதாகிவிடும். இவ்வளவு முன்னேற்பாடுகளுடனேதான் அக் கோபத்தைத் தீர்க்காலோசனைக்குப் பின்னரே காட்டப்படவேண்டும். அப்பொழுது அக்கோபத்தையும் பிறர் மதிப்பாகப் பாராட்டுவர். இவ்வாறான, சாந்தமான கோபத்தினுள்ளும் சகிப்புத்தன்மை யென்பது ஒருவாறு மறைந்து காணப்படுதல் தெளிவு.

ஃ

சகிப்புத்தன்மை எப்பொழுது, எங்கெங்கே வேண்டுமென்பதுவினா? தனக்கு வரும் பொல்லாங்குகள் யாவற்றையும் அப்படியப்படியே சகித்துக்கொள்வதென்பது கஷ்டமான காரியமே. பிறருக்குக் கெடுதி பயக்காதிருக்குமட்டும் அதைச் சகிப்புத்தன்மையெனக் கொள்ளலாம். அதாவது அஹிம்ஸையாகும். அஹிம்ஸையும் சகிப்புத்தன்மையும் உண்மையில் வேறு வேறு ஆனாலும், காலத்துக் கேற்றபடி நம்முடைய சகிப்புத்தன்மை அஹிம்ஸையாகத்தான் இருக்க முடியும். அந்த அஹிம்ஸையின் எல்லையைக் கடந்து சகிப்புத் தன்மை செல்லும்பொழுது அது தன் உன்னதத்தை இழந்துவிடும். உலகத்தைத் துறந்த பெரியோர்கள் கலப்பில்லாத சகிப்புத்தன்மையைக் கைக்கொள்ளலாம். அவர்களது பரிசுத்தமான மனோநிடத்திற்கு அது கூடுமானதாகும். ஆனால், சோதனைமாயப் பிரபஞ்ச வாழ்வில் உள்ளோருக்குக் கலப்பில்லாத் பரிசுத்தமான சகிப்புத் தன்மையைக் காட்டுதல் முடியாததாகவே இருக்கும். உணவிற்காகத் தாவரங்கள் முதலிய உயிர் வாழ்வனவற்றைக் கொல்லாமல் பசியைச் சகித்துக்கொண்டிருக்க எவருக்காயினும் கூடுமா? அது முடியுங் காரியமல்லவே. உலக துன்பத் தொல்லைகளையும், மரணத்தையும், எல்லாவற்றுக்கும் மேலாகப் பசியையும் சகித்துக்கொண்டிருப்பதல்லவா உண்மையான கலப்பில்லாத சகிப்புத்தன்மை? இவ்வித சகிப்புத் தன்மை சாமான்யர்களால் சாத்தியமா? ஆகவே, வாழ்க்கைக்கு அவ

---

தான் அருகிலிருந்து வழக்கு நடத்த முடியாமல் வேறொருவரை வைக்கப்போக, அவர் வழக்கு நடத்தி ஒரு வீட்டை ஏலத்தில் தன்பேருக்கே பெறுகிறார். பணம்மட்டும் வழக்கு நடத்தச்சொன்னவர் தருகிறார். இவ்விதம் தந்தவர் அந்த வீட்டைத் தன்பேருக்கு மாற்றிக்கொள்வதற்குமுன் கண்மூடினால் அது போனது போனதே. வழக்கு நடத்தியவர் அந்த வீட்டை விழுங்கி விடுகிறார்.

சியமான சிற்சில காரியங்களில் பரிசுத்தமான கலப்பில்லாத தனிச் சகிப்புத்தன்மையைப் பிரயோகிக்க முடியாமற் போய்விடுகின்றது.

ஃ

சகிப்புத்தன்மை சிற்சில வேளைகளில் பழிக்கவும் படுகின்றது. தன் ஒரே குமாரன் கூடாவொழுக்க முடையவனுயிருப்பதை அறிந்தும், தந்தை அவனைக் கண்டித்துத் திருத்தாமல், 'அவன் வினைப் பயன்போல் நடக்கும்' என்று ஒருவித அசட்டுத்தனமான சகிப்புத் தன்மையைக் கைக்கொள்ளின் உலகம் அத்தந்தையைத் தன் கடமையிலிருந்தும் பிறழ்ந்தவனுகவே கொள்ளும். இதுபோன்றதான எத்தனையோ பழிப்புகள் உண்டு. தன்னுடைய பொருள்களை உரிமையில்லாத மற்ருெருவன் அனுபவிக்கப் பார்த்திருப்பது மனித லக்ஷணமல்ல. நீதிக்கும், உலக நடைக்கும் விரோதமாகத் தன் பொருள்களை ஆக்கிரமித்திருப்பவனிடமிருந்து மீட்டுக்கொள்வதில் சிந்தையைப் புகுத்துவதே செய்யத்தக்க காரியம். ஆயினும், அதிற் கனத்த தீங்கு நேராதவாறு ஆத்திரப்படாத விவேகத்தைச் சகிப்புத் தன்மையுடன் ஒரு சிறிது காட்டுவதும் அவசியமாகிறது. பொதுவாக, நம்முடைய சகிப்புத்தன்மையானது—நாம் செய்யத் தொடங்கிய காரியங்களின் இடையில் இயற்கையாகவோ, அன்றி மற்ற மனிதர்கள் மூலமாகவோ ஏற்படுகின்ற கெடுதிகளையும், மனே வியாகூலங்களையும், துன்பச் சுமைகளையும் சகித்துக்கொண்டு, நம்முடைய மனத்தை அலையவிடாமல் பொறுமையுடன் காப்பாற்றுவதிலேயே—அமைந்திருக்கின்றது.

ஃ

இந்தச் சகிப்புத்தன்மையை "ஊக்கம்" என்பதினேடும் சேர்க்கலாமென்று தோன்றும். அது பொருந்தாது. "ஊக்கம்" என்பது தான் தொட்ட காரியத்தை இடையிற் சோர்ந்திடாமல் மேல் நடத்திக்கொண்டு போவதில் மட்டுமே முனைந்து நிற்பதாகும். சகிப்புத்தன்மையோ தனக்குக் கேடு சூழ்ந்தவர்களையும், தன்னைத் துன்புறுத்தியவர்களையும்,—அவர்கள் தன்னிடம் வந்து மன்னிப்புக் கோருமுன்னதாகவே,—மன்னிப்பதில் நாட்டங் கொண்டதாகும். ஊக்கமானது கேடும் சூழும்; நன்மையும் செய்யும். தன் முயற்சிக்கு எதிராக நிற்போரை எவ்விதத்தும் தொலைத்துக் காரியத்தில் வெற்றி கொள்வது ஊக்கத்தின் தன்மை என்பது யாவரும் அறிந்ததே. ஆனல், சகிப்புத்தன்மையோ ஒருநாளும் கேடு சூழாது. கேடு சூழத்

---

சற்று ஏமாறினல் உடனே மோசம்தான். உலகம் அவ்வளவு கேடுபாடாயிருக்கிறது. விழிப்பா யிருப்பவனிடம் முன்மோசம் செய்தோர் மறுபடியும் நெருங்கிவர அஞ்சும்படி அவர்களின் மனமே அவர்களின் செய்கையைக் குத்திக் காண்பிக்கிறது.

தொடங்கியபின் அது 'சகிப்புத்தன்மை' என்ற பெயரையே முற்றி லும் இழந்துவிடும்.

ஃ

சகிப்புத்தன்மை வாய்ந்தோர் தெய்வத்தன்மையைப் பெற்றவ ராவர். எப்பொழுதும் எளிய தோற்றத்திலேயே அன்னோர் காணப் படுவர். ஆயினும், அவர்களது உள்ளமோ மகத்தான தன்மையுள் ளது. சகிப்புத்தன்மை யுள்ளோரை எதிர்த்துக்கொண்டோ, அவரை வஞ்சித்தோ, பரிகசித்துப் பொல்லாங்குகள் புரிந்தோ வாழ்ந்தவர்கள் இல்லை. ஒரு உதாரணத்தால் இதை விளக்கலாம். சோமுவுக்கு ராமு பெருங்கெடுதியைச் செய்கிறான். சோமு அதற்குப் பதிலாக ராமுவுக்குத் தீங்கு செய்வானாயின், அது சரிக்குச் சரியாய்விடும். அவ்விதமின்றி, சோமு சகிப்புத்தன்மை யுள்ளவனாய் ராமு செய்த வஞ்சனையைக் கடவுளுக்குத் தெரிவித்துவிட்டுச் சாந்தமாயிருந்து விடில், அந்த இடத்தில் தெய்வம் முன்னின்று ராமு செய்த கெடு திக்குப் பழிக்குப்பழி வாங்கிவிடுகின்றது. ராமு தான் செய்த வஞ் சனையால் இப்பொழுது சிலகாலம் பச்சென்று வாழ்ந்தபோதிலும், பின்னுக்கு அவன் காலத்திலோ, அவனது அடுத்த தலைமுறை யிலோ தெய்வகோபம் எதிர்ப்பட்டுக்கொண்டு முன் செய்த கெடு திக்குப் பதின்மடங்காகச் சோதனை காட்டிவிடுகின்றது. ஆகவே, சகிப்புத்தன்மை யுள்ளாரிடத்து, அவர்களைச் சாமான்னியமாகக் கருதாமல் அஞ்சி நடப்பது அவசியமாகும். சகிப்புத்தன்மை யுள் ளோர் ஹா! ஈசா! என்று மனம் நொந்துபடின், அவருக்குத் தீங்கு செய்தோர் விரைவில் அழிந்துபடுவதும் அநுபவமே. இதனை நாம் உற்றுணர்ந்து சகிப்புத்தன்மையுள்ள உத்தமர்கட்கு நம்மாலியன்ற வரையில் நலமே புரிந்து அஞ்சி நடந்துகொள்வது நன்றாகும். உலக வாழ்வில் வெற்றி கொள்வதற்குச் சகிப்புத்தன்மையைப்போற் சிறந்தது வேறொன்றில்லை. சகிப்பின் தத்துவங்களை யுள்ளபடி யுணர்ந்தோர் பிரபஞ்ச மாய்கையை வென்றோ ராவர்; தெய்வத் தன்மை கொண்டோருமாவர். சகிப்புள்ளவர்கட்கே எல்லா நன்மை யும் உண்டு.

---

பொடி கேட்டவர்களுக்கு முதலில் பொடி டப்பியை மரியாதையாகக் கொடுக்கிறார்கள். அவர்கள் ஒரு சிட்டிகைப் பொடிமட்டும் எடுத்துக் கொண்டு தருவோராயின் மற்றொரு சமயமும் பொடி டப்பியையே பெற முடிகிறது. ஆனால், பொடி டப்பியிலுள்ளதில் முக்காற் பங்கை ஒரே அமுக்கில் எடுத்து உறிஞ்சுகிறவர்களாகவாவது, பொடி டப்பியிலுள்ளதை எல்லாம் அப்படியே கொட்டிக்கொள்ளுகிறவர்களாகவாவது இருந்துவிடில், பிறகு அவர்களிடம் பொடி டப்பியைத் தராமல், ஒரு சிட்டிகைப் பொடியை மட்டும் எடுத்துக்கொடுத்து ஜாக்கிரதையாய்விடுகிறார்கள். இதை அவர்களும் ஜாடையாகத் தெரிந்து மவுனமாகிறார்கள்.

# மணமகளும் புது மோட்டாரும்.

'உண்மை விளம்பி' எழுதுவது.

"மணமகளும் புது மோட்டாரும்" என்றவுடனே, மாப்பிள்ளை மார்க்கட்டில் தங்கள் புத்திரரின் பட்டங்களுக்கேற்ப விலைகூறித் திரியும் தாய் தந்தையர்கட்கு நாக்கில்ஜலம்சொட்டுகிறது. ஆனால்; நம்மிடம் தற்காலம் மணமகளாவது, அவளுக்காக ஸ்ரீதனம் தரப் புது மோட்டாராவது கைவசம் இல்லை. தற்கால மணமகளுக்கும், புது மோட்டாருக்கும் உள்ள பல ஒற்றுமையான ஹம்ஸங்களை மாப்பிள்ளைகள் கவனிக்கவேண்டுமென்பதே நம் கருத்து.

ஃ

மோட்டார் கம்பெனிக்காரன், 'கார்' வாங்கவரும் கனவான்களிடம் அவர்கள் விரும்பும் காரின் விசேஷ குணங்களைப்பற்றியும், அதன் அழகான அமைப்பைப்பற்றியும் புகழ்ந்து அவ்வண்டியை மெதுவாக நின்ற விடத்திலேயே 'ஸ்டார்ட்' செய்து காண்பிப்பதைப்போல், பெண்பார்க்க மாப்பிள்ளை வீட்டார் போகும்போது, பெண்ணின் பெற்றோர் அவளை விசேஷமாய் அலங்கரித்து நிறுத்துவதுடன், பெண்ணின் சாமுத்திரிகா லட்சணங்களைப்பற்றியும், விசேஷ குணங்களைப்பற்றியும் அடுத்த வீட்டுப் பாட்டி மூலமாய்ப் புகழச்செய்து மாப்பிள்ளையைப் பக்கத்தறையில்உட்காரவைத்துப் பெண்ணை நாகரீகமான இரண்டொரு பாட்டுகள் பாடச் சொல்வதுமுண்டு. ("நாகரீகமான பாட்டுகள்" என்று நாம்சொல்வதற்காக வாசகர்கள் கோபப்படக்கூடாது. ஏனெனில், தெம்மாங்கு, தில்லானா, தங்கரத்தினம் முதலிய அநாகரீகப் பாட்டுகள் தெரியாத சகோதரிகள் வெகு குறைவென்பதே நமது துணிபு.)

ஃ

கண்ணாடி அறைக்குள் பூந்தொட்டிகளின் நடுவே தூசு படியாமல் துடைத்துவைக்கப்பட்டிருக்கும் புது மோட்டார்வண்டி கட்டிடத்தை விட்டுச் சாலையிலிறங்கிக்கூட இராதென்று எவரும் திட்டமாய் எண்ணுவதைப்போல், அன்னிய ஸ்திரீகளைக் கூடப் பார்க்க வெட்கப்பட்டுத் தலைகுனிந்தவண்ணம் இருக்கும் மணப்பெண்ணும் அல்லிராணியைப்போல் ஆண்வாடையைக்கூடக் கண்டிருக்கமாட்டாள் என்று மாப்பிள்ளை வீட்டார் நினைப்பதுடன், "தங்கள் வீட்டிற்கேற்ற பெண் அவளொருத்தியேதான்" என்றும் நிச்சயப்படுத்திவிடுகிறார்கள்.

ஃ

மார்க்கட்டில் பல மலிவான மோட்டார் வண்டிகளிருந்தபோதிலும், தங்கள் மனதிற்குப் பிடித்த

---

தன் குமாரனின் அடாத செய்கைக்குப் பிறர் கண்டித்துத் தூற்றியது மட்டும் தன் புத்தியில் ரோஷமாகப்படுகிறது.

மான காரை சில ஆயிர ரூபாய்கள் அதிகமாய்க் கொடுத்தாகிலும் சிலர் வாங்குவதைப்போல், சிலமாப்பிள்ளை வீட்டார் தங்கள் புத்திரருக்குப் பிடித்தமான பெண்ணைக் குறைந்த விலைக்குக் (வரதக்ஷணைக்கு) கொள்ளவும் நேருகிறது.

ஃ

கண்ணாடி அறையி லலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் புது கார்களைக் கம்பெனிச் சிப்பந்திகள் இராக்காலங்களில் உபயோகப்படுத்திவிட்டு காலையில் முதலாளி வருமுன்பே சுத்தமாய்க் கழுவித் துடைத்து வைத்துவிடுவதைச் சில முதலாளிகளறியாமலிருப்பதைப் போல், பால்மணம் மாறாத முகத்தையுடைய சில மணப்பெண்களும் அவ்வீட்டிலுள்ள சில்லரைத் தேவதைகளுடன் சரஸங்கள் புரிந்துளரென்பதை அவர்களின் பெற்றோர்கூடச் சந்தேகிப்பதில்லை.

ஃ

புதிய காரை விலை கொடுத்து வாங்கி வீட்டிற்கெடுத்துக்கொண்டு போனபிறகுதான் அதன் சில பாகங்கள் எங்கோ மோதுண்டிருப்பதையும், அது தெரியாமலிருக்கக் கம்பெனிக்காரர் சாமர்த்தியமாய்த் தட்டி வர்ணம் தடவித் தங்களை ஏமாற்றியதையுமுணர நேருகிறது. கம்பெனிக்காரரைக் கேட்டால் சீமையிலிருந்து வரும்போதே அப்படித்தானிருந்ததென்று பதில் சொல்வார்கள்.

ஃ

இவ்வொரு விஷயத்தில்தான் காருக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமுண்டாகிறது. காரில் சொட்டை ஏற்பட்டிருப்பதைப்பற்றிக் கம்பெனிக்காரரிடம் வாதாடியோ, விலை கொடுத்தோ அப்பாகத்தைப் புதுப்பித்துக்கொள்ளலாம். ஆனால், புதுப் பெண்ணைப்பற்றியோ...? ஈச்வரா!! மாப்பிள்ளை அவன் வயிற்றெரிச்சலை யாரிடம் சொல்லுவான்? இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தம்பதிகளுக்குள் எவ்வளவு அன்யோன்ய மேற்படுமென்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஃ

புதிய கார் வாங்க எண்ணும் கனவான்களே! புதிதான கார் வாங்க வேண்டுமானால், வருட ஆரம்பத்தில் புது மாடல்கள் வந்தவுடனே வாங்கினால்தான் கம்பெனிச் சிப்பந்திகளால் அதிகமாய்க் கையாளப்படாத புதிய வண்டியை வாங்கலாம்.

ஃ

உத்தமியை மருமகளாகக் கொள்ள எண்ணும் பெற்றோர்களே! நீங்கள் கொள்ள விரும்பும் பெண்மணியின் உண்மைக் குணங்களையும், நடத்தைகளையு மறிய விரும்பினால், நீங்களனுப்பியதாய்த் தெரியாமல் ஓர் புத்திசாலிக் கிழவியைப் பெண் வீட்டில் சில நாட்களிருக்கச் செய்து, பெண்ணிற்குத் தெரியாமல் அவள் நடத்தைகளைக் கவனிக்கச் செய்யுங்கள். ஆனால், நீங்களனுப்பும்கிழவிக்கு, நீங்கள் வேறு பெண்ணை வரிக்க வேண்டுமென்ற எண்ணம் மாத்திரமில்லாதிருப்பின், அவளுடைய அத்தாட்சியைத் திட்டமாய் நம்பி அதன்படி சமயோசிதமாய் நடந்துகொள்ளலாம். இதை உதாரணமுகத்தால் விவரிப்பதற்கே இங்கு மணமகளையும், புது மோட்டாரையும் குறிப்பிட்டதாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது மனச்சாக்ஷியே கடவுளாகும். மனச்சாக்ஷி என்பது ஞானத்தைக் கண்டுகொள்வதற்கான நாடியாகும்.




1. கால் நடையாக ரயிலுக்குச் செல்லுபவன் வண்டி புறப்படுவதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவே ஸ்டேஷன் சென்று காத்திருந்து குறித்த நேரத்தில் வண்டி ஏறிவிடுகின்றான். மோட்டார்க்கார் வைத்துக் கொண்டிருப்பவரோ வண்டிநேரத்திற்குப் பத்து நிமிஷம் முன்னால் சென்றால் போதுமெனக் கருதி அதுபோல் புறப்பட, சாலையில் அன்று அதிகமான ஜனக்கூட்டம் வண்டி முதலியவைகளைத் தாண்டிச் செல்லவேண்டியதிருந்தமையால் அந்தப் பத்து நிமிஷமும் வழியிலேயே கழிந்துபோய்விட, அவ்வண்டியில் போய் முடிக்க வேண்டிய அவசியமான காரியங்கெட்டு அல்லலுற்றுத் தவிக்கின்றார்.

2. ஒரு பெண் சில வடைகளைத் தாம்பாளத்தில் வைத்து எடுத்து ஏகினாள். அதை ஒரு பருந்தடித்து மேல் நோக்கிப் பறந்து சென்றது. இதனைப் பார்த்திருந்த ஒரு காக்கை விடாமல் தொடர்ந்தது. பருந்து வடைகளை நழுவவிடக் காக்கை அதனைப் பற்றிப் பறந்து ஒரு மரத்தின் மேலிருந்து கொண்டு தின்று மகிழ்ந்தது. வடையைப் பெண் தன்னுடையதாக நினைத்தாள். ஆனால், பருந்து தனக்குச் சொந்தமெனக் கருதி எடுத்துச்சென்றது. கடைசியாக, அது காக்கைக்கு உரித்தாகிவிட்டது. இப்படியே, மனிதர்கள் ஒவ்வொரு பொருள்களையும் தங்களுடையது, தங்களுடையது என்று எண்ணியிருக்க, யாருக்கோ அது சொந்தமாகி விடுவதுமுண்டு. இதில் மற்றொரு விஷயம்: பருந்தை விடக் காக்கை சிறு பிராணியே ஆயினும், தன்னுடைய தந்திர சாமர்த்தியத்தினால் வலிமையுள்ள பருந்தை ஏமாற்றிவிட்டது.

3. தன்னுடைய 18-வயதான குமாரன் சீட்டாட்டத்தில் மிகுந்த பிரபலயடைந்து விட்டானென வயது முதிர்ந்த ஒருவர் பெரிதும் வருந்துகின்றார். அவரையே இது யாரால் வந்த துர்ப்பழக்கமெனக் கேட்டபொழுது, தன்னுடைய புதல்வன் சிறுவனாயிருந்தகாலத்தில் பொழுது போக்குக்காக அவரே உடனிருந்து விளையாடியதால் வந்த வினைப்பயன்தானென மிகுந்த மனவருத்தத்துடன் ஒப்புக்கொள்ளுகிறார்.

4. நாம் நமது இல்லத்தில் நல்ல வார்த்தைகளைப் பேசி, நல்ல செய்கைகளைச் செய்து வருவோமாயின் அந்தப் பழக்கமே நமது சிறுவர்களுக்கும் படிந்து ஒழுக்க சீலர்களாவார்கள். பெரும்பாலும் பெற்றோர்களின் வழி பற்றியே பிள்ளைகளின் பேச்சும் செய்கைகளும் இருந்து வருவதை உலகில் காணலாம்.

5. ஒரு கடையின் காரியஸ்தர் தன்னுடைய முதலாளி அறியாதபடி ஆயிரம் ரூபாய்களைக் கைப்பற்றித் தனக்குச் சினேகிதரான மற்றொருவரிடம் கொடுத்து வைக்கின்றார்.

---

தனது பெருமைப் பிரதாபம் வெகு நீளமென்று ஒருவன் நினைத்துக் கொள்ள, அவனை இன்னொருவன் மதியாமலே போக, பெருமைப் பிசாசுக்காரனுக்கு அது அதிக ஆத்திரத்தை யுண்டுபண்ணுகிறது.

அவரோ அப்பணத்தை வாங்கிய அன்றே அது தன்னுடைய பொருளெனக் கருதித் தன்சொந்தப் பெயராலேயே கணக்கில் வரவுவைத்துக் கொள்ளுகிறார். பின்னர் சில காலஞ்சென்று பணம் வேண்டுமெனக் கொடுத்தவர் கேட்டபொழுது, உமக்கேது ஆயிரம் ரூபாய்கள், நீரோ இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் வேலை செய்கிறவர், வாங்கும் சம்பளம் சாப்பாட்டிற்கே போதவில்லையெனக் கூறி யிருக்கிறீரே என்று ஒன்றின் மேலொன்றான கேள்விகளை அடுக்கிச் செல்லுகின்றார். முன்னவரோ எந்த வழியாலும் அவரிடமிருந்து பணத்தைப் பெற முடியாதெனக் கண்டு மோசவழியாய்ச் சம்பாதித்த பொருள் மோச வழியானதென ஏகுகின்றார்.

6. பத்திரிகாசிரியர் உனது நண்பரானால், அதன் பொருட்டு நீ எழுதியனுப்புவதை யெல்லாம் பிரசுரித்து விடுவாரென எண்ணுவது அறிவீனம். சுவை யில்லாதவைகளைத் தள்ளிவிட அவர் தயங்காரென்பது உறுதி. நட்பு என்பது வேறுவிஷயம்.

7. வாவென்று அழைக்காத அவர் வீட்டிற்கு நீ என் அடிக்கடி செல்கின்றாய்; நீ அங்கு வருவதை அவர் விரும்பவில்லையே. அதை உணர்ந்து ஜாடையாக ஒதுங்கி விடுவதே கௌரவமும் புத்திசாலித்தனமுமாகும்.

சி. வீ. நா. நாராயணன்செட்டியார்,
நேமத்தான்பட்டி.

## பார்வையின் விசேஷங்கள்.

நாம் பார்க்கும் பார்வையை விவரித்துச் சொன்னால் வளரும். தாய் தந்தை, அண்ணன் தம்பி, அக்காள் தங்கைகளைக் கண்களால் பார்ப்பது ஒருவிதமாகும். அந்நியர்களை நோக்குவது ஸாமான்யமா யிருக்கும். ஜீவாத்மாக்களிடம் நேத்திரங்களைச் செலுத்துவது இரக்கமாகும். கோபத்தோடு பிறரைக் குரூரமாய்த் திருஷ்டிப்பது விசித்திரமாயிருக்கும். அன்புள்ள மனைவியை நோக்கும் பார்வையே மிக விசேஷமானது. மக்களைப் பார்ப்பதுகூட நாயகியின் மேலுள்ள நோக்கத்திற்குக் குறைந்ததேயாகும். ஈசுவரனை மனிதர்கள் கண்களாலும், ஹிருதயத்தாலும், ஸர்வேந்திரியங்களாலும், ஸகல விதங்களிலும் காணலாம். ஆனால், யாரும் அவரைப் பார்க்க இச்சை கொள்ளுகிறதில்லை. அவரைத் தரிசிக்க லக்ஷத்துக்கொருவர் முன்வருவதும் கஷ்டம். ஸ்தூலம் ஸ்தூல ரூபத்தையே கட்டியழும். ஸூக்ஷ்மம் தன்னினத்தையே தேடும். ஸூக்ஷ்மம் ஸ்தூலத்தை லக்ஷ்யம் செய்யாது. ஸ்தூலமோ ஸூக்ஷ்மத்தை நேசிக்கிறதில்லை. இவைகளை பேதத்துடன் அலையும்போது உண்மையான வஸ்துவின் ஜோதியை ஞானக்கண்களுடன் யார் ஆராயப்போகிறார்கள்?

# நன் மனைவிக்கு வேண்டல்.

1. செல்வர் குலத்துதித்த செந்தேனேயானாலும்
கல்வி அறிவில்லாத கன்னியவளாகாது.

2. அன்னமயில்போல அழகுடையாளானாலும்
தன்னழகை மெய்க்குமொரு தையல்எனக்காகாது.

3. மஞ்சள்மினுக்கும் மயிர்மினுக்குமேமினுக்காய்
மிஞ்சிமினுக்கும் மெல்லிஎனக்காகாது.

4. அன்னவள்தன்புருஷன் அழகனிவன்என்புருஷன்
என்னழகில்த்தாழ்வெனவே எண்ணுமவளாகாது.

5. மின்னேரிடையுடைய மெல்லிநல்லாளானாலும்
பொன்னேபெரிதாகப் புகழுமவளாகாது.

6. தங்கநகைவேண்டும் சரிகைநகைவேண்டும்
அங்கைவிரல்தோறும் அழகுநகைவேண்டும்.

7. என்றுதுயர்வருந்தி இனியகணவனுயிர்
கொன்றுதின்னுமந்த கொடுசூரிஆகாது.

8. நாணம்மரியாதை நல்லொழுக்கங்கல்லாத
வீணர்அறிவீன மெல்லிகுலமாகாது.

9. தன்னறிவைமேலதென்றும் தன்கணவன்கீழதென்றும்
தன்கணவர்மேலாளும் சந்ததிகளாகாது.

10. ஒன்றுசொல்லும்பர்த்தாவுக் கொன்பதுசொல்ச்சொல்லுகின்ற
வன்றுயரக்கானன வங்கிஷங்களாகாது.

11. வந்தவிருந்துதனை மனங்குளிரஒப்பாமல்
அந்தப்புரமுனங்கும் அரிவையவளாகாது.

12. வீடும்பொருளும் விருத்திபெறவொட்டாமல்
தேடும்பொருளையெல்லாம் தினம்அழிப்போர்ஆகாது.

13. தேகமுடன்உடையை தினம்சுத்திசெய்யாமல்
நாகரிகமற்றிருக்கும் நங்கைகுலமாகாது.

14. ஆபத்திலே எனக்கு ஆலோசனைக்காரி
கோபத்திலேஎனக்கு குணசீலமானகுன்று

15. வீட்டிலேஎந்தனுக்கு விளங்குகின்றபொக்கிஷமாய்
நாட்டிலுள்ளோர்க்கெல்லாம் நல்லமணித்தீபமதாய்

16. விளங்குமொருசற்குணத்தை மெல்லியர்சிரோமணியை
களங்கமற்றகண்மணியை கன்னிதனைத்தந்தருள்வாய்.

17. வல்லபராஏழையின்மேல் மனதிரங்கியிப்போது
நல்லகுணசீலமுள்ள நங்கையொருபெண்தருவாய்.

# மைகேல் பாரடே.

## ஒரு பிரபல சாஸ்திர விற்பன்னர்

1791—1867.

பிற்காலத்தில் விசேஷமான காரியங்களைச் செய்ய வல்லவர்களாயும், பெரியோர்களாலும் விவேகிகளாலும் நற்குண நற்செய்கையுடைய பிரபுக்களாலும் கொண்டாடப்பெற்று மரியாதை செய்யப்பட்டவர்களாயும் இருந்த பிரபலஸ்தர்களில் அநேகர் தமது இளமையில் கேவலமான வாழ்க்கையை நடத்தியவர்களாகவே காணப்படுகிறார்கள். மைகேல் பாரடே என்பவரும் அதில் ஒருவராவர். அவர் லண்டன் நகரில் 1791-ம் ஞு செப்டம்பர்மீ 22-ம் தேதி பிறந்தவர். அவர் தந்தை ஒரு கொல்லன். அவர் தன் குழந்தைகளை ஸம்ரக்ஷிக்கவும் சக்தியில்லாத பரம தரித்திரராக இருந்தார். ஸாமான்ய பள்ளிக்கூடமொன்றில் பாரடே முதற்பாட புஸ்தகம் வாசித்ததாகத் தெரிகிறது. ஆயினும், தரித்திரங் காரணமாக 13-வது வயதில் ஒரு புஸ்தகக்கடையில் கூலியாளாக அமர்ந்தார். இயற்கையிலேயே புத்திமானாதலின், கடையிலுள்ள புஸ்தகங்களை இடைவிடாது வாசித்து வந்தார். இரசாயனம், மின்சாரம் இவற்றைப் பற்றிய சாஸ்திர நூல்கள் அவருடைய மனத்தைக் கவர்ந்தது. தாம் வாசித்தவற்றை அனுபவத்தில் பரீக்ஷித்தறியவும் விரும்பி, ரஸாயன சாஸ்திரத்திற் படித்தவைகளைக் கைமுறையில் செய்து பார்த்தும் வந்தார். இதற்காகப் பிரதிவாரமும் சிறிது பணம் செலவிட்டு ரசாயன வஸ்துக்களைவாங்கிப் பரிசோதிப்பார். இதனிமித்தம் சில யந்திரங்களும் செய்தார். சிறு பருவத்திலேயே அவருக்கு இந்தப் பெரிய புத்தியுண்டாயிற்று. அத்துடனில்லை, தாம் அப்போதப்போது கண்டறிந்த அநுபவமான சாஸ்திரக் குறிப்புகளை ஒரு புஸ்தகத்தில் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டும் வருவதானார். இங்ஙனம் எழுதியவற்றையெல்லாம் திரட்டிப் பிற்காலத்தில் அச்சிட்டு வெளியிட்டபோது, அக்குறிப்புகள் மிக்க ரஸமாகவும், பரம பிரயோஜனத்தைத் தரவல்லதாகவும் இருந்தன.

ஃ

1810-ம் வருஷத்தில் ஒரு சாஸ்திரப் பிரஸங்கத்திற்குத் தன் தமயனிடம் எட்டணா பெற்று ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டு சென்று அந்தப் பிரஸங்கத்தைக் கேட்டார். அங்கிருந்தோர் சிலரது நட்பும் கிடைத்தது. அந்த நண்பர்களுக்குப் பாரடே எழுதி வந்த பல கடிதங்களைப் பிற்காலத்தில் ஒன்று சேர்த்துப் பதிப்பித்தபோது, அவை மகா சாஸ்திர விற்பன்னர் எழுதியவை போன்றும் அர்த்த புஷ்டியுடனிருந்தனவாம். பாரடே தமது சாஸ்திர பரீக்ஷையை முதலில் சமையலறையிற் செய்ததாயும், அதற்காக மின்ஸாரயந்திர

---

சிலருக்குச் செய்கிற தீங்கில், அதன் காரணமாக, எண்ணாத ஒரு புதிய விபத்தைத் தாங்கள் அடைந்துவிடுகிறார்கள். ஆனால், அந்தத் தீங்கின் பயன் இது என்று மட்டும் அவர்கள் அறிவதில்லை.

மொன்றை அமைத்ததாயும் தெரிகிறது. பாரடே தாம் கேட்கும் பிரஸங்கங்களை வீட்டிற்கு வந்ததும் எழுதி வைப்பது வழக்கமாம். இவ்விதமே தமது சாஸ்திர பரீக்ஷைகளையும் தொடர்ச்சியாக ஒரு புஸ்தகத்தில் எழுதி வருவாராம். யந்திரங்கள் முதலியவற்றையும் பட உருவமாக அப்புத்தகத்தில் வரைந்து வைப்பாராம். பிற்காலத்தில் இக்குறிப்புகளை நான்கு பெரிய புஸ்தகங்களாக வெளியிட்டார். இவர் வேலைக்கிருந்த இடத்தில் தங்கியிருந்த பிராஞ்சுக்காரரான சித்ரீகரிடம் சித்திரவேலைகளையும் படித்துக் கொண்டார். லண்டன் நகர சாஸ்திரசாலையில் டேவி என்பவர் செய்த நான்கு பிரஸங்கங்கட்கு ஒரு துரைமகனாின் உதவியால் பாரடே சென்று கேட்டுவந்து, அவ்விஷயங்களைத் தமது புஸ்தகத்தில் குறிப்பிட்டு. அவற்றைத் தெளிவுபடுத்துவதற்காகப் படங்களையும் எழுதிச் சேர்த்து, அதற்கு ஒரு அட்டவணையும் வரைந்தார். இவ்விதமான மதியூகம் எல்லோருக்கும் அமைந்துவிடுமோ? விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா?

ஃ

பிறகு புஸ்தகக் கடையில் புஸ்தகம் பயிண்டு செய்கிற தொழிலில் அமர்ந்தார். பிறகு டேவி என்ற சாஸ்திரவல்லுநரிடம் அவர் சொல்லும் சாஸ்திர விஷயங்களை எழுதும் வேலையில் அமர்ந்தார். பாரடேயின் மனம் சாஸ்திர விசாரணை செய்ய வேண்டுமென்பதில் சென்றிருந்ததேயன்றி வர்த்தகம் முதலியவைகளிற் செல்லவில்லை. சாஸ்திர விசாரணையால் கனத்த திரவியலாபம் கிடைக்காதென்று டேவி என்பவர் தெரிவித்தும் பாரடேயின் விருப்பம் கலையவில்லை. பின் சாஸ்திர சங்கத்தில் பன்னிரண்டரை ரூபாய் சம்பளமுள்ள வேலையில் நியமிக்கப்பட்டார். சில தினங்கட்குப் பிறகு தமது சாஸ்திர ஆராய்ச்சியின் மூலமாய் ஒரு வகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை எடுத்தார். இவ்வித பரிசீலனைகளில் போதிய திருப்தி ஏற்படவில்லை. இதனிடையே சோர்வின்றித் தமது கல்வியையும் அபிவிர்த்தி செய்து கொண்டு போதிய தேர்ச்சியடைந்தார்.

ஃ

டேவி என்ற சாஸ்திரியாருடன் பிரெஞ்சு, இத்தாலி முதலிய தேசங்களுக்கு யாத்திரை சென்றதில் பாரடேக்கு விசேஷ அபிவிர்த்தி ஏற்பட்டது. தான் கண்ட நூதனங்களையெல்லாம் பாரடே புஸ்தகத்தில் எழுதிவைப்பதானார். பிரஸித்த சாஸ்திரக் கலாசாலைகளில் வாசிக்கும் மாணவர்கள் பெறும் பயனைவிட அதிகமான பிரயோஜனத்தைப் பாரடே இந்தப் பிரயாணத்தினால் அடைந்தார். அநேக சாஸ்திர விற்பன்னர்களுடையவும், பண்டிதர்களுடையவும் நட்பு உண்டாயிற்று. பாரிஸ்நகரத்து வித்வசங்கத்தில் ஒரு சாஸ்திரியாராகவும் நியமன மடைந்தார். நிலக்கரிச் சுரங்கத்திற்கான அபாயமற்ற புது விளக்கொன்றை டேவி என்பவர் செய்தபோது, பாரடே மிக்க உதவியாக இருந்து அதை முடிப்பித்தார்.

ஃ

---

தம்பியும் தமயனும் ஒன்றாக இருந்தபோது வாங்கிய வீட்டை யார்பேருக்கு இருந்தாலென்ன என்று நினைத்துத் தம்பியின் பேருக்கே தமயன் எழுதி வைக்கிறான். தமயன் மரித்ததும் அந்த வீட்டைத் தம்பி தன்னுடையதென்று பாத்தியம் கொண்டாடிக்கொள்ள ஆரம்பிக்கிறான்.

பாரடேயின் முதல் பிரசங்கம் 1816-ம் வருஷத்தில் நடந்தது. அது பொருள்களின் இலக்ஷணங்களைக் குறித்து விவரிப்பதாயிருந்தது. பிறகு பாரடே பல சாஸ்திர சங்கங்களில் பிரசங்கங்கள் செய்யத் தலைப்பட்டு, பிரபலமான சாஸ்திரி என்ற கீர்த்தியை வகித்தார். ஒவ்வொரு பிரசங்கத்தைப்பற்றிய குறிப்பையும் தமது புஸ்தகத்தில் எழுதிவைத்தார். பாரடே தமது விருத்தாப்பியத்தில் சாஸ்திர சங்கத்திலிருந்து விலகிய பொழுது அவர் பெற்றுவந்த பெரிய சம்பளத்தை அவரது ஜீவகாலம் வரையில் கொடுப்பதென்று ஏற்பாடு செய்தனர். பாரடேக்கு சங்கீதத்தில் இளமை முதற்கொண்டே வெகு பிரீதியாதலின் அதில் மிகவும் தேர்ந்தவரானார். சாஸ்திர விஷயங்களில் அவரது சிந்தை சென்றதேயன்றி இராஜீய காரியங்களைக் கவனிக்கப் புத்தி போகவில்லை.

ஃ

பாரடே இயற்றிய நூல்களும் செய்த பிரசங்கங்களும் அச்சிடப்பட்டு வெளியாகவே எங்கும் அவரது புகழ் பரவியது. துரைத்தனத்தார் பாரடேக்குப் பிரதி வருஷத்திலும் மூவாயிரம் ரூபாய் ஸன்மானமாகக் கொடுத்து வருவதென்று ஏற்பாடு செய்தனர். மிக்க எளிய நிலையிலிருந்த பாரடே தமது ஓயாமுயற்சியினால் மேன்மேலும் உயர்ந்து ஜெகத் பிரசித்தராகி, மனைவி மக்களுடன் சுகமே வாழ்ந்துகொண்டிருந்து 1867-ம் ஆகஸ்டு மீ 25-ம் தேதி காலமானார். ஒருவருக்கு முன்னேறுதற்குத் தளரா ஊக்கம் இருக்க வேண்டும். அந்த ஊக்கத்திற்கேற்ப மேலே உயருவதற்கு சந்தர்ப்பங்களும், துணை மனிதர்களும், அவர்களின் சகாயங்களும் கிடைக்கவேண்டும். பாரடே தமது தந்தையின் கொல்லத்தொழிலில் புத்தியைச் செலுத்தாமல் சாஸ்திர விசாரணையிற் செலுத்தியது அவரது பிறப்புடன் அமைந்த அறிவின் தூண்டுதலால் போலும்.

## உமக்குத் துணை உமது மனைவியே.

உமது குமாரனுக்கு விவாகம் செய்தாய்விட்டது. அவனும் அவன் மனைவியும் ஒன்றானார்கள். உமது இரு புத்திரிகளுக்கும் திருமணம் நடத்தியதில் அந்தப் பெண்கள் தங்கள் கணவன்மாருடன் சென்றுவிட்டனர். உமக்கு ஏற்பட்ட கடமைகளை நிறைவேற்றிவிட்டீர். இப்போது உமக்குத் துணை யார்? நன்றாய் ஆலோசிப்பின், உமக்கென்று வந்த உமது மனைவிதான் உமக்குத் துணை. உமது மனைவியிடம் எந்த சங்கதியையும் தாராளமாய்ச் சொல்லிக்கொள்வதுபோல், உமது குமாரனிடமோ, குமார்த்தியிடமோ, மருமகளிடமோ, மருமகனிடமோ சொல்லிக்கொள்ள முடியாது. நீர் பாயிற் படுத்துக்கொண்டால் அசங்கிதமின்றி உமது சரீரத்தைக் காப்பவள் உமது மனைவியே தான்.

# பழமொழிக் குறிப்புகள்

## 3. இல்லறம்.

(7-வது வால்யம் 598-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 319. "புத்தி கட்டை, பெயர் முத்து மாணிக்கம்."

சீதை, சாவித்திரி, ருக்மணி என்று பெயர்களைமட்டும் மேன்மையானதாக வைத்துக்கொண்டு, குணத்தில் அவ்விதமில்லாமல் அதற்கு நேர் எதிரிடையாக நடந்தால், அந்தப் பெயர்களால் என்ன பிரயோஜனம்? செவ்வனே கற்றும், கணவனை அவமதிப்பதாயின், அக்கல்வியால் யாது பயன்? பெயருக்குத் தகுந்த குணமும், படிப்புக்குத் தகுந்த ஒழுக்கமும் இருக்கவேண்டும்.

### 320. "பிய்ந்த (கிழிந்த) சீலையும், பேச்சுக் கற்ற வாயும் சும்மாயிராது"

கிழிந்த சீலை இன்னும் அதிகமாகக் கிழிந்துகொண்டே சென்று கடைசியில் சீலையைக் கட்டிக்கொள்ள முடியாதபடி சின்னபின்னம் செய்துவிடும். பேச்சுக் கற்ற வாயும் எதிர்பேச்சுப் பேசவும், வம்பு வார்த்தைகளாடவும் தொடங்கிப் பட்டிவாயாகி ஒரு குடித்தனத்தை நாலாகப் பிரித்து, எங்கு போனபோதிலும் அங்கு வாய்ச்சண்டையை வளரவிட்டுக்கொண்டு மதிப்பை மண்ணாக்கிவிடும். ஆகவே, வாழுகிற பெண்ணுக்கு வாயடக்கம் முக்கியமான பெரிய சங்கதி. வாய் நல்லதானால் ஊரும் நல்லதே.

### 321. "பாவி கோடுமை பாலும் புளிக்கிறது."

'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்ற பழமொழிக்குக் கொள்ளவேண்டிய அர்த்தத்தைப்போல, இங்கும் பால் புளிப்பதாகத் தோற்றும்படியாக அவ்வளவுக்கு நெஞ்சைப் புண்ணாக்கி விடுகிறதற்கு இந்தப் பழமொழியைக் குறிப்பிடலாம். வீட்டுக்கு வந்தவர்களையும், வீட்டில் சேர்ந்து இருப்பவர்களையும் அன்பாய் ஆதரித்து நடத்தவேண்டியதிருக்க, அதற்கு மாறாகச் சிடு சிடுத்தும், அலக்ஷியப்படுத்தியும், சண்டையிட்டும், அவமதிப்பு செய்தும், பிறகு அவர்களுக்குப் பாலைக்கொடுத்து என்ன பிரயோஜனம்? நொந்து புண்பட்டுப்போன அவர்களுக்கு இவள் வீட்டில் இனி பால்கூடவா குடிக்கவேண்டும் என்று வெறுப்பேற்பட்டுவிடும். அதனால் அவர்கள் மனங்கசந்து "பாவி கொடுமை பாலும் புளிக்கிறது" என்று மறுத்துவிட்டு எழுந்து சென்று விடுவரென்பது இப்பழமொழியின் தாத்பரியம்.

---

நாவிதர்களிற் சிலர் வைத்தியர்களாக மாறிப் புது கௌரவம் பெற்றாலும், "நாவித வைத்தியர்" என்கிற பெயரே அவர்களுக்கு ஏற்படுகிறதாம். வேற்றூர் சென்றபோதிலுங்கூட, அந்த வைத்தியர் நாவிதர் என்று எப்படியோ தெரிந்துபோகிறதாம்.

322. "பாராத காரியம் பாழ்."

323. "பார்க்காத உடமை பாழ்."

எந்தப் பண்டத்தையும் கவனமாகப் பார்த்து வந்தால்தான் அதது சீராக இருக்கும். பெட்டியில் மடித்துவைத்த சேலையையும் அடிக்கடி எடுத்துப் பார்த்து சுத்திசெய்தும், வெயில்பட வைத்தும் பத்திரப்படுத்தினால்தான் உண்டு. கவனியாத குறைவால் கரையானுக்கும் எலிக்கும் கொடுத்து எவ்வளவோ பாழடைவதும் உண்டு.

324. "பனைமரத்தின்கீழே பாலைக் குடித்தாலும் கள் என்று நினைப்பார்"

சந்தேகமாக எவரும் எதிலும் எண்ணாதபடி அத்தனை ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். எப்பொழுதும் அன்னியருடனோ, அல்லது பந்துக்களில் ஆண்மக்களுடனோ பேச நேரும்போது, ஒரு மரியாதையின் எல்லையில் நின்று, அவ்வளவுடன் ஒதுங்கிக்கொள்ளவேண்டும். அதிகப்பேச்சு வைத்துக்கொள்வதும், தன்னிடம் எந்தப் பந்துவையும் அதிகமாக நெருங்க இடம் தந்துகொள்வதும் பின்னுக்கு விபரீதத்தில் முடிந்து பலர் சந்தேகச் சொல் கூறவும் வைத்துவிடும். பந்துக்கள் என்ற அளவிலேயே வேண்டியவர்கள் என்றெண்ணிவிடலாகாது. அதிலும் குலஸ்திரீகளைக் கெடுத்துவிடக் கூடிய சண்டாளர்கள் வெகு யோக்கியர்கள்போ லிருக்கக்கூடும். ஆதலின், தான் பரிசுத்த மனமா யிருந்தபோதிலுங்கூடப் பிறர் அப்படி இருப்பார்களென்று சொல்வதற்கில்லை யானதால், எவரிடமும் ஒரு எல்லை—அளவு—மரியாதையில் ஒதுங்கித் தன் மானம் காத்துக்கொள்ளவேண்டும். சுத்தமான பாலாயினும் பனைமரத்தடியில் குடிப்பது சந்தேகத்திற்கிடமே யாவதுபோல், உத்தம ஸ்திரீயும் சில சந்தர்ப்பங்களில் சந்தேகிக்கப்படக் கூடியவளாகும்படி, உலகம் கதை கட்டிவிடும். ஆதலின், ஊராரின் வாயில் விழாதபடி தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும்.

325. "பந்திக்கில்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித்தொங்குதாம்."

அப்படித் தொங்கி ஒரு பயனுமில்லை. அப்படியே புருஷனுடைய பணிவிடைகளுக்கு உதவாத மனையாள் இருந்தும் பயனில்லை. இருப்பினும் இல்லாவிடினும் இரண்டும் ஒன்றே. கணவன் நீராடுகையில் அவனுக்கு முதுகு தேய்த்தல், அவன் விருப்பப்படி நடத்தல் முதலியவற்றைப் புரிந்து அவனுக்கு உதவாமல், அந்த சமயத்தில் துடைப்பத்தை எடுத்துக்கொண்டு கூட்டவோ, குடத்தை எடுத்துக்கொண்டு குளத்திற்கு நீர் கொண்டுவரவோ, இவ்விதமே வேண்டிய அவசரத்துக்கு உதவாமல் விலகினால் அந்த மனையாளும், வெளியில் பந்தலிலே தொங்கும் வாழைக்காயும் இரண்டும் ஒன்றுதான். இரண்டினாலும் பயனில்லைதான். தாரமும் குருவும் தலைவிதிபோல அமையும்.

மூன்றாவது அதிகாரம் முற்றிற்று.

# என் பத்திரிகைப் பித்து.

பதினெட்டு வயதிலேயே பத்திரிகைக் 'கிருக்கு' என் மண்டையி லேறிவிட்டது. நாள் செல்லச் செல்ல, இக்கிருக்கும் விருத்தியாகிக்கொண்டே வந்தது. பாதையில் தினசரிப்பத்திரிகையின் கிழிந்த துண்டொன்று கிடப்பினும் அதையும் ஆவலோடு எடுத்துப்பார்க்கவைக்கும். நித்திய கடமைகளில் பத்திரிகை வாசிப்பும் ஒன்றெனக்கருதி அனுஷ்டிக்க என் மனசாட்சி தூண்டியது. தினசரி, வாரப்பதிப்பு, மாதாந்த சஞ்சிகை, இவைகள் வருகிற தேதியை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமா யிருப்பேன். குறித்த நாளில் தபாற்காரனைத் தேடி ஆபீசுக்கே. என்னை அறியாமலே என் கால்கள் செல்லும். பத்திரிகைகளை என்னிடந் தரா முன்னரே, என் கண்கள் அடுக்கிவைத்திருக்கும் கடிதக்கட்டுகளில் தாவும். பச்சை, சிகப்பு, உறைகளைக்கண்டவுடன் தானே சந்தோஷமடைவேன். அகங்குளிரப் பத்திரிகைகளை வாங்கி முதலில் விலாசங்களையும், சந்தா எண்களையும் பார்ப்பேன். விலாச உறை கிழிபடாமல் கழற்றி, முதலில் தினசரியையும், இரண்டாவது வாரப்பதிப்பையும், மூன்றும் முறையாக, மாதப்பதிப்பையும், அதனதன் தலையங்கங்களைமட்டும் ஒரு முறை வாசிப்பேன்; முக்கிய விஷயங்களை உருவகப்படுத்திக்கொள்வேன். பின் மற்றவைகளைப் படித்து இன்புறுவேன். இத்தருணத்தில் என் வாசிப்பைக் கெடுக்க, வெட்டிப்பேர்வழிகள் எவரேனும் வந்திடில் எனக்குக் கோபம் பொங்கும். பத்திரிகைகளை இரவல் தர நான் விரும்புவதில்லை. நானும் இரவல் கேட்பதுமில்லை. இரவல் கேட்கும் நண்பர்கள் அழுக்குப்படாமல் திருப்பித் தந்தால் சரிதான். அத்தகையோருக்குக் கொடுக்கலாம் தான். ஆனால், இந்தப் புத்தி எல்லோருக்கும் ஏற்படுவதில்லை.

ஃ

ஒரு தினம் ஒரு நண்பர், அப்போதுதான் தபாற்காரன் தந்த பத்திரிகைகளை நான் வைத்திருந்ததைக் கண்டு, அதைக் கொஞ்சம் தந்து வாங்குங்களேன் என்றார்.

நான் தரமறுத்து விட்டேன். அதுமுதல் இரவல் கேட்கும் வழக்கத்தை நண்பர் விட்டுவிட்டார். மாதமாகவும், வாரமாகவும், நாடோறுந் தானும் எனக்கு வந்துகொண்டிருக்கிற பத்திரிகைகளை வாசித்துப் பரமானந்தங் கொண்டபின், முன் கழற்றிவைத்திருந்த உறைகளிலேயே யிட்டு, விலாசம் மாற்றி என் மனைவிக்கு அனுப்பிவிடுவேன். அவள்

---

அந்தக் குழந்தை பிறந்தபோது அதிக வருமானம் வந்தது. இந்தக் குழந்தை பிறந்து உள்ள வருமானமும் சுருங்கிற்று என்று பல குழந்தைகளைப் பெற்றோர் சொல்லிக்கொள்ள. ஒரு குழந்தையுமே இல்லாதோர் தங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அதுவே பெரும் பாக்கியமாக நினைக்கிறார்கள்.

படித்தபின் இரவல் தராமல் பத்திரப்படுத்தி வைப்பாள். வெளியூர் விட்டு, உள்ளூர் சென்றனதும், பின்னுமொருமுறை வாசித்து இன்பக் கடலிலாழ்ந்திருப்பேன். மாத சஞ்சிகைகள் பன்னிரெண்டு சேர்த்துப் பைண்டு செய்து இரண்டு பீரோக்கள் நிறைய அடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது எனக்கு வயது 30. பன்னிரெண்டு வருடமாகச் சேர்த்த பிரதிகள் குவியல் குவியலாகக் கிடக்கின்றன. அவைகள் என் அரிய பொக்கிஷங்களாம். மனேவியாகுலம், கவலையாதிய தொல்லைகளால் நான் அல்லல்படும் வேளையில் அமிர்த சஞ்சீவியாய் உதவுகின்றன. மனேற்சாகத்தைத் தந்து, பிரபஞ்சத்தின் நுட்பங்களை அறிவித்துப் போதிக்கும் ஆசிரியர்களாயுமுள்ளது. அனுபவரகசியங்கள் பொதிந்துகிடக்கும் களஞ்சியமாகவும் திகழ்கின்றன. பத்திரிகை வாசிப்பு என் உடலோடு ஒட்டிய ஒரு வியாதியைப் போலாகிவிட்டது. பத்திரிகைப்பித்தின் உயர்வை அதையனுபவித்தோரே அறியவல்லார்.

முாதுமூடு—டி. எம். பிள்ளை.

## என் கடமையும் உங்கள் கடமையும்.

நான் அறிந்தவற்றை என் நண்பர்களுக்குக் கூற வேண்டுமென்ற ஆசை என் பிடரியைப் பிடித்துத் தள்ளுவதால், "அமிர்த குணபோதினி" என்னும் இப்பத்திரிகையில் என் மனத்தில் உள்ளவற்றையும், நான் தெரிந்துகொண்ட புது அறிவுகளையும், அனுபவங்களையும், சிறந்த அறிஞர்களின் வியாசங்களையும் வெளியிட்டு வருகிறேன். நான் நண்பர்களாகிய பத்திரிகாநேயர்களைவிட ஸாமர்த்தியவானே? இல்லை, இல்லை. இன்ன பாடம் படித்தேன் என்றும், இன்ன ஆச்சரியம் கண்டேனென்றும், முறையே குழந்தைகள் பெரியோர்களிடம் கூறுவதும், நேசர்கள் தங்களுடைய நண்பர்கட்குச் சொல்வதும் இயற்கை. அதில் ஒருவித சந்தோஷம் உண்டு. கண்ட ஆச்சரியத்தைச் சொல்வோனுக்கும் ஸந்தோஷம்; அதைக் கேட்போருக்கும் ஸந்தோஷம். இந்த நியாயத்தாலேதான் "அமிர்த குணபேதினி"ப் பத்திரிகையைப் பிரதிமாதமும் அலங்கரித்து அன்பர்களாகிய சந்தா நேயர்கட்கு அனுப்பிவருகிறேன். சிரத்தையுடன் எழுதி வெளியிடுவது என் கடமையாயிருப்பதுபோலவே, அதனை அன்புடன் ஏற்றுக் கௌரவிப்பதும் உங்களின் கடமையாகும். இதுகாறும் அபிமானித்துவந்ததுபோல், "அமிர்த குணபோதினி"யை என்றும் ஆதரித்துவருமாறு பிரார்த்திக்கின்றேன்.

இராமாநுஜன்.

# மத தாரதம்மியம்.

1-வது ஹிந்து மதத்தில்:—ஈசுவர பக்தி, ஆத்மஞானம், தத்துவஞானம், சத்தின் சத்தியம், மித்தையதிகம், அத்வைதம்,மாயை, கருமபலன், புனர் ஜனனம், சடங்குகள், பிதுர்பூஜை, தருமம், தானம், பரோபகாரம், ஜாதி பேதம், சமயபேதம்—இவை அதிகமாக வும் ; நீதி, தைரியம், ஆண்மை ஸம ரசஞானம், ஸகோதரவாஞ்சை, சுறு சுறுப்பு, தேசாபிமானம்—இவை குறை வுபட்டிருப்பவையாகவும் ;

ஃ

2-வது எகிப்து தேசமதத்தில்:—பூததத்துவம், சக்தி, விகற்பம், சடங் குகள் இவை அதிகமாகவும் ; ஈசுவர ஞானம், ஆத்மஞானம், தத்துவஞா னம், தருமம், தைரியம், மதாபிமா னம், தேசாபிமானம்—இவை குறைவு பட்டிருப்பனவாகவும் ;

ஃ

3-வது சீனதேசத்தின் மதத்தில்:—புராதனவழக்கம், பெரியோர் பிதா மாதா பூஜை, ஜனஸமூகவாழ்வு, தற் பெருமை—இவை அதிகமாகவும் ; ஈசு வர பக்தி, ஆத்மஞானம், ஆண்மை, ஸமரச ஞானம், நவநாகரீகம்—இவை குறைவுபட்டிருப்பனவாகவும் ;

ஃ

4-வது பௌத்த மதத்தில் :—புத்தி விருத்தி, புருஷாகாரம், புனர் ஜனனம், இயற்கைஞானம், நீதி, தரு மம், சமாதானம், பரோபகாரம், பச் சாதாபம்—அதிகமாகவும்; ஈசுவரபக்தி ஆத்மஞானம், ஆண்மை, தேசாபிமா னம் — இவை குறைவுபட்டிருப்பன வாகவும்;

ஃ

5-வது யூதமதத்தில் :— ஈசுவர பயம், நம்பிக்கை, பலிகள், சடங்கு கள்—இவை அதிகமாகவும்; ஆத்மஞா னம், தத்துவஞானம், தயை, தருமம், தேசாபிமானம் இவை குறைவுபட்டி ருப்பனவாகவும் ;

ஃ

6-வது கிறிஸ்து மதத்தில்:— ஈசு வரபக்தி, ஸமரசஞானம், ஸகோதர வாஞ்சை, சுறுசுறுப்பு, சக்தி, நீதி, சடங்குகள், ஆண்மை, தேசாபிமா னம் இவை அதிகமாகவும்; ஆத்மஞா னம், தத்துவஞானம்—இவை குறைவு பட்டிருப்பனவாகவும் ;

ஃ

7-வது இஸ்லாம் மார்க்கத்தில் :- ஈசுவர பக்தி, அதிர்ஷ்டம், அடக்கம், ஸகோதரவாஞ்சை, தருமம், ஆண் மை, மதவைராக்கியம், இவை அதி கமாகவும் ; தத்துவஞானம், சடங் குகள் இவை குறைவுபட்டிருப்பன வாகவும் ;

*   *   *   *

இவ்விதமே, ஒவ்வொரு மதத்தி லும் ஒரு அம்ஸம் குறைந்தும், மற் ெருரு அம்ஸம் அதிகப்பட்டும் இருக்கின்றன. இதிலிருந்தும் பூலோ கத்திலுள்ள எந்தப் பெரிய மதமும் இன்னமும் பூரணம் பெருதிருத்தல் பிரத்தியக்ஷமாகும். மேற்கூறியவற்றி லிருந்தும், ஆஸ்திக மதத்திலிருந்து உண்டான சில பெரிய மதங்களில் ஈசுவர பக்திக்கேற்றபடி மற்ற அங் கங்கள் குறைந்து இருத்தல் வெளி யாகும்.

S. P. நரசிம்மலு நாயுடு



# பெரியாரின் மொழிகள்



(526-ம் பக்கத் தொடர்ச்சி.)



## ஷேக்ஸ்பியரின் மொழிகள்.

What custom wills, in all things should we do't, the dust on antique time would lic unswept, and mountainous error be too highly heap'd for truth to o'erpeer.

வழக்கம் எப்படியுள்ளதோ, அவ்வாறே நாம் எல்லா விஷயங்களிலும் செய்யவேண்டும். ஏனெனில், பழய வழக்கங்களின் பேரில் மாசுபடிந்து, மலைபோன்ற பிழைகள் சுமத்தப்பட்டிருப்பதால் (அதிலுள்ள) உண்மைகள் வெளியில் தலைகாட்ட முடியவில்லை.

What cannot be avoided 'Twere childish weakness to lament or fear.

எதைத் தடுக்க முடியாதோ, அதற்காக வருத்தப்படுவதும், பயப்படுவதும் குழந்தைத்தனமாகும்.

I had rather had eleven die nobly for their country, than one voluptuously surfeit out of action

பெருமிதமாகப் புசித்து ஒன்றும் செய்யாதிருக்கும் மகன் ஒருவனைவிட தாய் நாட்டிற்காக மகிழ்ச்சியோடிருக்கும் பதினொரு பிள்ளைகளைப் பெற நான் விரும்புகிறேன்.

The miserable have no other medicine, but only hope.

ஏழைகளுக்கு நம்பிக்கையன்றி பிறிதொரு மருந்தில்லை.

What stronger breastplate than a heart untainted!

களங்கமற்ற ஹிருதயத்தைவிட வன்மை பொருந்திய மார்புக் கவசம் வேறு எது உளது?

To the noble mind rich gifts wax poor when givers prove unkind.

கண்ணியமான எண்ணமுடையவர்களுக்குக் கொடுப்பவர் மனது இரக்கமற்றதாக இருப்பின், உயர்ந்த பரிசுகள் தாழ்ந்ததாய் ஆகிவிடும்.

Our bodies are our gardens, of which our wills are gardeners.

நம் உடம்பு ஒரு தோட்டம், அதில் நம் ஆசைகள் தோட்டக்காரர்களாம்.

P. G. தலசேகரன்.

---

விதவையாய்விட்ட தன் தமயன் மனைவியோடும் வேறொரு ஊருக்கு வந்து கணவனும் கணவியும்போல வாழ்ந்துகொண்டிருக்கையில், அங்கு தன்னைத் தெரிந்தவர்கள்வந்து கண்டுவிட, அவர்கள் மூலமாக அந்தத்தெரு முழுதும் தெரிந்துவிட, பின் அவ்வூரிலிருக்க வெட்கி ஓடிவிடும்படியாகி விடுகிறது.

# செய்பாக முறையின் விசேஷம்.

கனம்—அக்கீம் பா. முஹம்மது அப்துல்லா சாகிபு அவர்கள்.

சில அவுடதங்களைப் பற்றிச் சிலர், இது நாம் உபயோகப்படுத்துகிற வஸ்துக்கள்தானே, இதற்கு இவ்வளவு குணம் எவ்விதம் உண்டாயின வென்று சந்தேகிப்பார்கள். அதற்கு உத்திரமாவது:—அந்த வஸ்துக்களைப் பக்குவப்படுத்தும் முறை யென்பதே யாம். ஆகையால், அவர்கள் சாதாரணமாய் உபயோகப்படுத்துவதிலும், அவற்றையே பக்குவம் பண்ணி உபயோகப்படுத்துவதிலும், பெருத்த வித்தியாசமுண்டு. இவை பின்வரும் உதாரணத்தால் நன்கு விளங்கும்.

ஃ

சாதாரணமாய்க் கடைகளிலெல்லாம் கிடைக்கத் தக்கதுவும், பெரும்பாலும் அநேகருக்குத் தெரிந்ததுவுமான கந்தகம், பொட்லுப்பு, சுண்ணும்பு, கரி ஆகியவைகளைப்பற்றி யோசிப்போம்.

ஃ

கெந்தகம், பொட்லுப்பு இவைகளைத் தனியாக ஒரு வராகனெடை வரையில் சாப்பிடலாம். இவைகளினுல் ஒரு தீங்குமுண்டாகாது. ஆனல், கந்தகம் ஒரு பங்கையும், பொட்லுப்பு மூன்று பங்கையும் சேர்த்து பாகஞ் செய்வதால் இரண்டுவித பதார்த்தங்களுண்டாகும். ஒன்று வாயுருபமானது. இதை ஆக்கிராணித்தவுடன் இருமலையும், மூச்சடைப்பையும் உண்டாக்கும். மற்றொன்று திரவரூபமானது. இந்தக் கந்தகத் திராவகம் மிகக்கொடியது. எல்லாவற்றையும் நாசப்படுத்திவிடும். ஆயினும், இவற்றை முறைப்பிரகாரம் உபயோகித்தால் நன்மை செய்யுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

ஃ

கெந்தகம் 1-பங்கு, பொட்லுப்பு 3-பங்கு, ஆகிய இரண்டுடன் சுண்ணும்பு 1-பங்கைச் சேர்ப்பதால் மத்தாப்பு மருந்து ஆகின்றது, சுண்ணும்புக்குப் பதில் கரி ஓர் பிரமாணம் சேர்க்க பாணமருந்தும், வேறொரு பிரமாணம் சேர்க்க ஆகாச பாண மருந்தும் ஆகின்றன. இவ்விதம் அநேக விநோத பாணமருந்துகள் ஆகின்றன. இன்னும் கந்தகம், பொட்லுப்பு, கரி ஆகியவைகளை இன்னேர் முறையாகச் சேர்க்க வெடிமருந்தாகி உயர்ந்த மலை முதலியவைகளையும் தவிடு பொடியாக்கிப் பலவித விபரீதங்களைச் செய்து விடுகின்றது. இவை எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

ஃ

ஆகையால், மேற்கண்டவை சாதாரணமான சரக்காயினும் அவற்றைச் செய்யும் பாகத்தால் இவ்வளவு சக்தியுண்டாய் விடுகிறது. ஆகையால், எல்லாவற்றையும் அவமதிப்பதும், அலக்ஷியம் செய்வதும் கூடாது. அதன் பாகங்களால் அதற்குண்டாகிய குணம் விசேஷமாவதும், அதற்கில்லாத குணம் புதிதாக உண்டாய் விடுவதுமுண்டு.

# ஜீவன மர்மங்கள்.

பாடுபடுவதற்குச் சித்தமாயிருப்பவனுக்கே இன்பத்தின் புதையல் கிடைக்கும். உழைக்கத் தயாராயிருப்பவனுக்கு எந்த வேலையாவது எங்கிருந்தாவது வரும். ஒரு வேலைக்கு அதைச் செய்யும் ஒழுங்கே முக்கியமாகும். ஒரு தொழிலோ, வியாபாரமோ தொடங்கலாம். ஆனால், கடன் படாமலே சொற்ப முதலானாலும் அதைக் கொண்டு ஆரம்பிப்பதே உத்தமம். முதலில் ஒரு காசு வியாபாரத்தைச் சரியாக நடத்தினால், பிறகு ஒரு பவுன் வியாபாரத்தையும் செய்யக் கூடிய விருத்திக்கு எட்டிப் பார்க்கலாம். புத்தி நுட்பமே எந்த வேலையிலும் தொழிலிலும் பிரதானமான பாகமாகும். ஆரம்பமுதல் நிதானச் செலவிலேயே செட்டும் கட்டுமாயிருந்து சிறு முதலைப் பெரிய முதலாக்கப் பார்க்கவேண்டும். எந்த வியாபாரமோ வேலையோ சரி, அதில் மிகத் தேர்ச்சி பெற்றுவிட்டதாகக் கர்வப்படுவதில் தான் கற்ற சொற்ப தேர்ச்சியுங்கூடத் தேய்ந்துபோகக் கூடும். தேர்ச்சி யடைந்துவிட்டதான கர்வ சிந்தையானது முன்னிருந்த சிறிது விவேகத்தையும் வீணாக்கி விடும். புதிதாக ஒன்று கற்றறியும் தன்மையை அந்தக் கர்வபுத்தி குறைத்துவிடும். தான் அதிகம் கற்றுவிட்டதாக நினைப்போன் அவ்வளவுடன் படிப்பைத் தொலைத்தவனே யாவான். அதற்கு மேற்பட்டு அவன் கற்கமாட்டான்.

ஃ

எப்பொழுதும் தன்னுடைய சிந்தை ஒரே காரியத்தில் இருக்க வேண்டும். ஏககாலத்தில் இரண்டு வேலைகளைச் செய்பவன் எந்த வேலையையும் சரிவரப் புரியான். புசிக்கும்போது அந்தப் புசிப்பிலேயே கவனம் கொண்டால்தான் அதன் ருசியை அறிந்து உண்ணுதற்குக்கூடும். நம்முடன் சேர்ந்து வேலை செய்வோருக்குத் திருப்தி யுண்டாகும்படியான கூலியை நாம் எவ்வளவுக்குத் தாராளமாகத் தருகிறோமோ, அதற்கேற்பவே வேலையின் திறமையும் இருக்கும். ஒருவேலை, அல்லது தொழிலில் தனது சிரத்தை எவ்வளவு இருக்க வேண்டுமென்பதை முன்னதாகக் கவனித்து வைப்பது முக்கியம். அதன் முக்காற்பாகச் சுமையையும் கவலையையும் தானே சுமந்துகொண்டு, கால்பாகத்தை மட்டுமே மற்றவர்கட்குப் பகிர்ந்துகொடுத்து முடிக்கும்படி செய்யவேண்டும். முதலிலேயே ஒரு திட்டம் அதாவது அமைப்பின் ஒழுங்கை மனதில் நிர்மாணித்துக் கொள்ளவேண்டும்.

ஃ

வேலையில் சுறுசுறுப்பும், வேகமும் வேண்டும். எதிலும் மூளையின்

---


இந்த வீட்டுப் பெண்ணும் பக்கத்து வீட்டுப் பெண்ணும் நெருங்கி நேசமாக, அதைப்போல இந்த வீட்டுக்காரனும் பக்கத்து வீட்டுக்காரனும் நட்பு குலாவுவதைக் காணோம்; அவர்களுள் ஒற்றுமையுங் காணோம். புருஷர்கள் மது வியவகாரங்களால் எப்போதுமே பிரிகிற சுபாவமுள்ளவர்கள்.

உதவியையும் பெற்றுக்கொள்வது அவசியம். தன் வழிமுறை மற்ற வர்கள் போகிறவழியிலில்லாமல் வேறு புதியதோர் பாதையில் செல்லுமாறு அமைத்து அதில் வெற்றி பெற்று, மற்றவர்களுக்கும் அதைப் பின்பற்றிச்செய்ய ஆவலுண்டாகும் படியிருக்கவேண்டும். நம்மிடம் வேலை செய்வோனுக்கு நாம் தருகிற சம்பளம் அவனது செலவுபோக மீத்துவைக்கவும் கூடுமானதாயிருக்கிறதா என்று கவனிக்கப் புகுந்து, அதில் தயாளத்தன்மை காட்டுவோமாயின், அப்பால் நமது தொழிலைப் பற்றிக் கவலைப்படத் தேவையேயில்லை. அது நமது ஏவுதலின்றித் தானாகவே அழகாக முடியும். தொழிலோ, வேலையோ செய்யாதவனுடைய புத்தி வீணாய் விடுகிறது. தொழிலும் வேலையும் செய்கிறவர்களிடையே கூட, அநேக யோசனைகள் சட்டென்று தோன்றினும், பிறகு அதைக் காரியத்தில் காட்டப் பின்னடைவதால் உண்டாகும் நஷ்டத்திற்கு அளவேயில்லை. எப்பொழுதும் தனது சக்திகளை அலக்ஷியம் செய்யாமல் நம்பிக்கையுடன் எதையும் செய்யப் பழகினால் அபிவிருத்தி என்பது தானே வந்துசேரும்.

## மரியாதையின் லக்ஷணம்.

ஒருவரோடு பேசும்போது அங்க சேஷ்டைகளில்லாமல் மிருதுவாய் வசனிப்பதே மரியாதையாகும். சிலர் தலையைச் சொறிந்து பேசுவார்கள். இரண்டொருவர் "நான் சொன்னது தெரிந்ததா? என்று அடிக்கடி எதிராளியைக் கேட்பது வழக்கம். தன்னை யொரு புத்திசாலியாயும், எதிராளியை ஒரு முட்டாளாயும் நினைப்பது அவிவேகமல்லவா? தன்னிடமுள்ள ஈன வழக்கத்தின் துர்க்குணத்தை வெளிப்படுத்துகிறது போலாகுமேயன்றி எதிராளியைப் பாதிக்காது. இவர்கள் அடிக்கடி "தெரிந்ததா" என்று கேட்கையிலெல்லாம் "உன் அவிவேகம் தெரிந்தது" என்று மறுமொழி கூறினால் அப்போது என்ன செய்வார்கள்? சிலர் பேசும் வாக்கிய ரசனையைப் பிரம்மதேவனே கேட்டு மகிழவேண்டும். சிலர் "இழவு—முண்டை—அறுத்தாப்போ விருக்கு"—என்று கோரமான பதங்களை வழங்கி ஸம்பாஷிப்பார்கள். மூக்கு நோண்டிகளுக்குக் கணக்கில்லை. மரியாதை யென்றால் பிறர் காலில் விழுவதல்ல. அது தவறு. தன் மதிப்புக்கு அது கெடுதி. பேசும்போது வார்த்தைகள் அர்த்தபுஷ்டியாயும், ரஸமுள்ளனவாயும், கம்பீரமான துவனியோடும், அதிக மரியாதையுடனும் உபயோகிக்க வேண்டும். மரியாதையைப் போன்ற மகோபகார வஸ்து வேறில்லை.

# நெபோலியனின் உயர்குணங்கள்.



பிரான்சு தேசச் சக்ரவர்த்தியாகிய நெப்போலியன் மனிதர்களின் குணங்களைத்தான் முக்கியமாய்க் கவனித்தாரேயன்றி ஜாதி உயர்வுகளை அவர் பொருட்படுத்தவேயில்லை. நன்றியும், விஸ்வாசமும், உபகார சிந்தையும் அவருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தன. தன்னுடன் வாசித்த ஒரு மாணவனை நெற்றியில் பலத்த காயம் படுமாறு சிறு பருவத்தில் நெபோலியன் அடித்ததுண்டு. பிறகு சக்ரவர்த்தியாய் விளங்கியபோது, முன் அடிபட்ட மாணவன் தன் வறுமையால் நெபோலியனின் அரச சமுகம் அணுகி, சிறு பருவத்தில் நெற்றியில் அடிபட்டவன் வந்திருப்பதாக சேவகர்கள்மூலம் தெரிவித்தான். நெபோலியன் பழயநாள் ஞாபகம் மறவாது அன்புடன் அவனை வரவழைத்து அவனுக்கு வேண்டியவற்றைச் செய்து உதவினார்.

ஃ

ஆடல் பாடல் முதலியவற்றில் நெப்போலியனுக்கு விருப்பமில்லை. அவ்விதமே நாவல்கள் போன்ற கற்பனைக் கதைகளையும் வெறுத்தவர். சரித்திரம், ரஸாயனம், இவை போன்ற நூல்களிலேயே ஆர்வம் அதிகம். நெப்போலியன் தனது இளமையில் ஒரு நங்கையுடன் ஸகோதர பாசத்துடன் குலாவியதுண்டு. பிறகு தான் சக்ரவர்த்தியாயிருந்த சமயம் அந்த நங்கையும், அவள் மணந்த கணவனும் மிக்க கஷ்ட நிலைமையிலிருப்பது கேட்டு, அப்பெண்ணின் கணவனை ஒரு உத்தியோக பதவியில் அமர்த்தி அப்பெண்ணையும் ஆதரித்தார். மாந்தர்கள் எவ்வளவு சான் சமர்த்துடனிருப்பினும், கல்வி கேள்வி அறிவுகளால் மேம்பாடு அடையினும், வறுமை எதிர்படுமாயின் அனைத்தையும் அழித்துவிடுமென்பது நெபோலியனின் வாக்கியம்.

ஃ

நெபோலியன் தன் ராணுவத்திலிருந்த சமயம் பிணியால் மிக்க பாடுபட, அச்சமயம் ஒரு பெண்மணி துணையிருந்து சிகிச்சைகள் செய்து குணப்படுத்தினாள். அந்த நன்றி மறவாமல் தான் இராஜ பதவியிலிருந்தபோது வறுமையால் நலிந்து கிடந்த அப்பெண்ணுக்கு 10000 பிரான்சு நாணயங்களைப் பரிசாகக் கொடுத்து உபகரித்தார். எப்போதும் நெப்போலியன் ஏகாந்தத்தையே நாடுவது வழக்கம். நெப்போலியன் சேனாதிபதியாக ராணுவத்துடன் ஒரு தெருவில் செல்லுகையில் ஒரு வீட்டினருகில் நின்று, இங்கு ஒருவன் சில வருஷங்கட்கு முன்பு குடியிருந்தானே, ஞாபகமிருக்கிறதா என்று அவ்வீட்டுக்காரியைக் கேட்க, அதற்கு அவள், ஆம், ஒரு சோம்பேரி

---

சிறிய உத்தியோகஸ்தர்களைப்பற்றிப் பெரிய உத்தியோகஸ்தர்கள் கோபங்கொண்டு தங்கள் பேனாவால் ஒரு கிறுக்கு கிறுக்கினால், உடனே சிறிய உத்தியோகஸ்தரின் நிலைமை ஒரு நிமிஷத்தில் மாறித் தாழ்ந்துவிடும். உத்தியோக வாழ்வு அவ்வளவு நிச்சயமற்றிருக்கிறது.

ஒண்டியாக ஒரு அறைக்குள்ளேயே தனித்து உட்கார்ந்துகொண்டிருந்த துண்டு என்று கூறினாள். அதற்கு நெபோலியன் நானேதான் அவன்; அவ்விதம் தனித்து யோசித்தவா றில்லாதிருந்தால் இப்பெரும் பத விக்கு உரியவனாதல் கூடுமோ என்று பதில் உரைத்தார்.

ஃ

கட்டுப்பாடுதான் இராணுவத்தின் முக்கியத்தன்மை என்பது நெபோலியனின் திடமான கொள்கை. தான் செய்யும் காரியங்களுக்கும், ஆக்ஞை களுக்கும் குறுக்கே ஒருவரும் சொல்லக்கூடாதென்பதும் நெபோலியனின் ஏற்பாடு. ஜெயம் பெறும்படி செய்யத் தயார். ஆனால், குறுக்கே பேசுவதாயின் தனக்கு ராணுவ உத்தியோகமே தேவையில்லை யென்று நெப்போலியன் கண்டிதமாகத் தெரிவித்ததுமுண்டு. ஒருவனது காரியத்தின் குறுக்கே விகாரமாய்ப் பேசுவதில், அது யதார்த்தமாய் அவ்வொருவனுக்கு உண்டாகக்கூடிய உற்சாகத்தையும், புதிய சுறுசுறுப்பையும், ஊக்கத்தையும், சுதந்திரத்தையும் பாழ்படுத்தி அவனது தன்மதிப்பையும் கெடச் செய்கிறதென்பது நெபோலியனின் அபிப்பிராயம்.

ஃ

நெபோலியன் ஒருகால் ராணுவத்தினின்று விலகியிருந்தபோது கொடிய வறுமையை அனுபவித்துத் தற்கொலை செய்துகொள்ள ஒரு ஆற்றின் பக்கம் செல்லுகையில் தன் பிரிய நண்பனைச் சந்தித்தார். அந்த நேயன் விஷயமறிந்து ஆயிரம் பவுன்களைக் கொடுத்து உதவினான். பிந்திய நாளில் சக்ரவர்த்தியாய் நெபோலியன் விளங்கியபோது அந்த நண்பனுக்குப் பெரிய உத்தியோகம் தந்து தன் நன்றி தெரிவித்தார். கஷ்ட காலத்தில் நண்பர்கள்தான் உபகரிக்கக்கூடியவர்கள் என்பது நெபோலியனின் அனுபவ வாக்கு.

ஃ

நெப்போலியனின் மனைவிக்கு 'ஜோஸபைன்' என்று பெயர். இந்நங்கை தன முதற் கணவனை யிழந்து ஒருகுமாரனுடன்வசித்திருந்தபோது, நெப்போலியனின் ராணுவ உத்திரவுப்படி பாரிஸ் நகர ஜனங்களின் துப்பாக்கி. கத்தி முதலியவைகளை ராணுவத்தார் கைப்பற்றிச் சென்றனர். ஜோஸபைனின் குமாரன் தனது தந்தையின் பட்டாக்கத்தியை அவரது ஞாபகமாக வைத்திருப்பதால் திருப்பித் தரும்படி நெப்போலியனைப் பிரார்த்தித்தான். அந்தப் பிதுர் பக்திக்கு நெப்போலியன் மகிழ்ந்து பட்டாக்கத்தியைத் திருப்பித் தந்தார். இதிலிருந்து ஜோஸபைனுடன் பழக நேர்ந்து, காதலாகிக் கனிந்து முடிவில் விதவா விவாகமாக அவளை மணந்துகொண்டார். ஜோஸபைன் ஒரு அதிர்ஷ்ட தேவதை போன்றும் நெபோலியனுக்கு விளங்கினாள். அம்மனைவியின் அதிர்ஷ்டத்தால்நெபோலியன் எந்தயுத்தத்திலும் வெற்றி பெறவும், சக்ரவர்த்தியாகவும் கூடியவரானார். பிற்காலத்தில் தனது மனைவியான ஜோஸபைனை ஆண் சந்ததி யில்லாமையால் விலக்கி விட்டபோது ஜோஸபைனுடன் நெப்போலியனின் அதிர்ஷ்ட தேவ

---

சிலர் முதல்தார வாழ்க்கையின்போது எந்தெந்த நண்பர்களிடம் ஞாபகம் வைத்தனரோ, அவர்களை இரண்டாம் தார வாழ்க்கையிலே மறந்து கைவிட்டு வேற்றுமனிதர்களாகி விடுகின்றனர்.

தையும் விலகிவிட்டது. பிறகு நெபோலியன் இரண்டாவதாக மணந்த மனைவியின்மூலம் ஒரு குமாரனைப் பெற நேர்ந்ததே யன்றி, யுத்தத்தில் வெற்றி பெறவோ, முன்போல் புகழ் அடையவோ முடியவில்லை. கடைசியாக, சக்ரவர்த்தி பதவியையும் இழந்து, ஆங்கிலேயரிடம் சிறைபட்டு, சிறையிலேயே உயிர் துறக்கும்படியானதுதான் இரண்டாவது விவாகத்தால் கண்ட லாபம்! பெரும்பாலும் மூத்த மனைவியின் பக்கமே அதிர்ஷ்ட தேவதையிருந்துவருவதும், அம்மூத்த மனைவியுடன் யாவும் மாயமாகி மறைவதுமே அநேக இடங்களில் காணும் அனுபவமாயுளது.

ஃ

'முடியாது' என்ற சொல் சோம்பேரிகளுக்கேயன்றி, புருஷத்துவமுள்ள ஒருவனுக்கு ஆகாதது எதுமில்லை என்று நெபோலியன் அடிக்கடி கூறுவார். வேண்டிய தனங்களை நான் தேடிவரத் தயார்; ஆனால், அவற்றை என் க்ஷேமத்துக்கென்றே பத்திரப்படுத்திக்கொள்வதற்கு நான் விரும்பமாட்டேன் என்று உரைத்து அவ்விதமே பிறருக்கு உபகரிப்பதிலேயே நோக்கமா யிருந்து வந்தார். ஒருநாள் இரவு தமது சேனைகளை ரகசியமாய்ப் பார்த்துவரச் சென்றபோது, அங்கு ஒருசார் காவல்காத்து நின்ற ராணுவ வீரன், அவரைத் தடுக்க, அதற்கு தாம் ஒரு ராணுவ வீரனாதலால் அப்பக்கம் விடவேண்டுமென்று அவர் வேண்ட, ராணுவ வீரன் அதற்கு இணங்காது கண்டிதமாய் மறுத்து, மீறிச் செல்லின் சுட்டுவிடுவேனென்று விளம்பினான். நெபோலியன் மௌனமாய்த் திரும்பிச் சென்றுவிட்டு, மறுதினம் அந்த ராணுவ வீரனின் கண்டிதமான பாராவுக்காகச் சிலாகித்து வேறொரு தக்க உத்தியோகம் கொடுத்து உயர்த்தினார்.

ஃ

நெப்போலியன் இராஜ்ய லக்ஷ்மியைப் பெற்றவராய்ப் பெல்ஜிய நாட்டின் வழியே செல்லுகையில், ஒருவன் எதிர்ப்பட்டுப் பழய நாளில் ஒரு இராத்திரியின்போது தன் ரொட்டியில் பாதி தந்ததாயும், தான் தற்சமயம் தரித்திர நிலையில் இருப்பதாகவும் விண்ணப்பித்துக்கொள்ள, நெப்போலியன் பழய ஞாபகம் மறவாமல் புன்னகை கூர்ந்து அவனுக்குத் தக்க உத்தியோகமும், அவனது தந்தைக்குப் பிரதி மாதமும் ஒரு குறித்த தொகையும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார். புது பதவி வந்ததும் முன்பு பழகியவரை மறந்துவிடுகிற இழிதன்மை நெபோலியனிடம் இல்லவேயில்லை.

ஃ

வெற்றி பெறுவதற்கு இனிய சொல்லேதான் தகுந்த தென்பதும், கொடுஞ்சொல் பகைகூட்டு மென்பதும் நெபோலியனின் அபிப்பிராயம். காலமே மனிதனைத் தோற்றுவித்ததாதலின், அவ்வக்காலங்களுக்கு இசைய மனிதனும் நடந்து சென்று தன் காரியவெற்றி காணவேண்டுமென்றும், ஆபத்திற்கும், சாவுக்கும் நடுங்குகிறவன் உலக ஜீவியத்திற்கே ஏற்றவனாகானென்றும், பளுவைக் கடவுளின்மீது ஏற்றிவிட்டு மனிதன் அச்சமற்றவனாகித் தன் கடமையைச் செய்துகொண்டு

---

உலகத்தில் புத்தி, யுக்தி, நன்னடக்கை, நட்பு, தைரியம் ஆகிய ஐந்து குணங்களால் மனிதர்கள் ஸகல போகபாக்யங்களையும் அனுபவிப்பர். அனுகூல தாம்பத்தியத்தால் பரம சுகமுண்டாகும். சிறு வயதில் செய்யும் நேசம் பிற்காலத்தில் பரம பிரயோஜனத்தை விளக்கும்.

செல்வதே தக்கதென்றும் நெப்போலியன் கருதி வந்தார். தனக்கு அகால மரணம் நேரிட வேண்டுமென்று தலையெழுத்திருப்பின் அது பிசகாதென்று கூறிவிட்டு, எப்பொழுதும் தைரிய சித்தராய் எவ்வித பாதுகாவலுமின்றி தனியே எங்கும் சென்று வருவார். பிரஜைகளுடைய அன்பே தமக்குக் காவல் என்பார். அந்த அன்பு இருக்குந்தனையும் அச்சமேயில்லை யென்பார்.

ஃ

கடைசியாக 'லீப்ஸிக்' யுத்தத்திற்கு நெப்போலியன் புறப்பட்டபோது, தனது இரண்டாவது மனைவியையும், மூன்றே பிராயமுள்ள மைந்தனையும் விட்டுப்பிரிய மனமில்லாது தவித்துக் கண்ணீருடன் குழந்தைக்கு முத்தம்தந்து, இல்லாளைக் கட்டியணைத்து உருகி நின்றார். என் இவ்விதம் அதிகமாகத் துயருற வேண்டுமோ—அது தெய்வீக சம்பவம்தான். இவ்விதம் அதிகமாய்த் துக்கித்ததற்கு ஏற்றவாறு பிறகு நெப்போலியன் திரும்பிவந்து தன் மனைவியையோ, பாலகனையோ காணவேயில்லை; காண முடியாமலே போயிற்று. ஹா! அதுவே கடைசி சந்திப்பாகித் தீர்ந்தது!! அதிர்ஷ்ட தேவதையான முதன் மனைவி ஜெயலக்ஷ்மியாய் விளங்கிக் கணவனுடன் சக்ரவர்த்தினியாக சுகமே வாழ்ந்தனளாக, பின்வந்த இளைய மனைவியோ காலமுற்றும் கஷ்டங்களும் தாழ்வுமே சுமந்து கண்ணீர் விடும்படியானது! நெப்போலியன் ஆண் சந்ததியை விரும்பி முதன் மனைவியான ஜோஸபைனை விலக்கிவிட்டபோதிலும், காலமுற்றும் பழய அன்பிலேயே நிலைத்திருந்தார். இந்த யுத்தத்திற்குப் புறப்பட்டபோது ஜோஸபைனுக்கும் கல்லும் கரையத்தக்க கண்ணீரான கடிதமொன்று எழுதியனுப்பிவிட்டே சென்றார். அக்கடிதத்தின் முடிவில், "என் அன்பின் மணியே! நின்னை யானும் மறந்திலேன்; என்னையும் நீ மறந்திடவொண்ணாது; நான் செல்கின்றேன்" என்று குறிப்பிட்டிருந்தார். தம் மனைவியரிடத்து நெப்போலியன் வைத்திருந்த உண்மை யன்பு போன்றே, தம்மை ஈன்ற அன்னையிடத்தும், தம் உடன்பிறந்தோரிடத்தும் அளப்பரிய வாஞ்சையுடன் இலங்கினர். அதே விதமான அன்பையே உலகத்தாரிடத்தும் காட்டிவரத் தம் வாணாள் முற்றிலும் முயன்றவாறிருந்தார். இளமையிலிருந்தே தெய்வபக்தியுடன் விளங்கி. அந்திய காலத்திலே சிறை வாசத்திலும் தெய்வத்தியானத்துடனேயிருந்து, பின்னர், ஸகல கஷ்டங்களினின்றும் நீங்கிக் கடவுளிடம் சென்றார். நெபோலியனை உலகம் எந்நாளும் மறவாது.

---

மருத்துவச்சிக்கு எந்தெந்த வீட்டில் பெண்கள் கர்ப்பமாயிருக்கிறார்களென்று கவனிப்பதே அவள் வேலை. சக்கிலியனுக்கு, எவர்களுடைய காலின் செருப்பு பழுதுபட்டிருக்கிறதென்று பார்ப்பது வேலை. வீடுவீடாய் க்ஷவரம் செய்யப்போகிறவனுக்கு எவர் தலையில் அதிகமாய் ரோமங்கள் வளர்ந்திருக்கிறதென்று கவனிப்பது வேலை. எல்லாம் ஒரு சாண்வயிற்றுக்கே இந்தப் பாடு!

---

ஆலயப் பிரவேச உரிமை யில்லாமல் தீண்டாமை ஹிந்து மதத்திலிருந்து நீங்கியதாகாது என நான் கருதுவதால், பொது ஜனப்பிரீதியையும் சற்று இழந்து வருகிறேன்.—மகாத்மா.

# இனியது துறவறமா? இல்லறமா?

எத்தனையோ சம்பத்துகளிருந்தும், உலக சுகத்தை வெறுத்துத் துறவறம் நாடிய பெரியோர்களுண்டு. இன்னோர் பெண்மணிகளை ஜெகன்மாதாவாகக் கருதிப் பூஜித்துள்ளார். எத்துணையோ அரும் பெரும் நூல்களையும் இவர்கள் இயற்றியுள்ளார். சரீரபலம், தீர்க்காயுள், தேஜஸ், ஈச்வரபக்தி, முதலியன நிரம்பப் பெற்றவர்களாய் விளங்கியிருந்திருக்கின்றனர். எத்தனையோ முனிவர்கள் ஏகாங்கிகளாய் ஆரண்யங்களிலும், நதி தீரங்களிலும் வாஸம் செய்தனர். ஆனால், இவ்வித அரிய மனோதிடமும் உறுதியும் சாமான்யர்கட்குச் சித்திப்பதரிது. பூர்வபலன் வரப்பெற்றவர்களே இந்தப் பிறவியில் இவ்விதம் துறவறம் தழுவி உண்மை ஞானிகளாதல் கூடும். இது நெருப்பாற்றை மயிர்ப் பாலத்தாற் கடப்பது போலுமாம்.

ஃ

பெரும்பான்மையோர் துறவி வேடம் தரித்திருப்பதேயல்லாது அந்தரங்கத்தில் முற்றிலும் காமிகளாகவே காலங்கழித்திருக்கின்றனர். துறவறக்கோலம் பூண்ட மடாதிபதிகளின் காமலீலைகளைத் தமிழ்நாடு நன்கறிந்ததே. வயிறு வளர்த்தற்கெனக் காஷாய வேஷ்டியைச் சுற்றிக் கொண்ட போலித் துறவிகளுக்கும் நம் நாட்டில் கணக்கில்லை.

ஃ

உண்மையாகவே துறவற நிலையுற்றோரைவிட, இல்லறத்திலிருந்தோர் நீண்ட ஆயுள்கொண்டவர்களாய் வாழ்ந்தனரென்று வைத்திய சாஸ்திரம் பகர்கின்றது. இல்லறத்தில் குடித்தன ஒழுங்குப்பாடுகளுடன் தெய்வபக்தி, ஞானம், விரதம், சத்தியம் முதலிய உத்தம நெறிகளுடன் ஜீவனோபாயம் தேடித் தம்மையண்டியுள்ள மனைவி மக்கள் பந்துவர்க்கத்தினராதியோரைக் காத்து சுகித்தவர்கள் நன்னெறி கமழ நலம்பட நீண்டு வாழ்ந்ததாக சரித்திரங்களால் தெரியவருகின்றது.

ஃ

இல்லற நியமத்தால் கொடிய காமம் சாந்திபெற்றுத் தணிவதன்றி, அதன் வழியில் புத்திரபாக்கியமும் குலவிருத்தியும் உண்டாகி, முதுமையில் திக்கற்றுப் போகாவாறு புதிய பரம்பரையைத் தோற்றுவித்துத் துணைக்கு உதவச் செய்கின்றது. காமத்தை வெல்வதென்பது எத்தகைய கல்விமானுக்கும், ஞானநிலை வாய்ந்தோருக்குங்கூட முடியாததாகித் தவறிவிடவே நேர்ந்துள்ளது. மேலும், யௌவன காலத்தில் விவாகமற்றிருப்போரிடத்திற் காணும் எத்துணையோ கொடிய ரோகங்கள் வைத்திய சிகிச்சையிலும் சாத்தியப்படாததாகி, விவாகமானதும் குணமடைந்திருக்கிறதென்பது அனுபவத்

---

முன்பு 4-ஆயிரம் தொழிலாளர்களை வைத்து மில் வேலைகளை நடத்திய பம்பாய் ஈ. டி. சாசூன் கம்பெனியார், ஜப்பானியச் சரக்கின் இறக்குமதிப் போட்டியால் தற்போதுள்ள 11-ஆயிரம் தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்தித் தமது 9-மில்களையும் மூடப்போகின்றனராம்.

திலுணர்ந்த விஷயம். தேகத்திற்குப் பிராணுதாரமாகிய சுக்கிலமானது தன்னளவிலும் மீறிய கழிவை வெளிப்படுத்த ஓயாது தூண்டுதல் தருவதனுல், அவ்விதம் அதை விவாகத்தின் மூலமாய் வெளிப்பட வைத்தால்தான் மூளை, ஹிருதயம், நரம்புகள் முதலிய இராஜகருவிகள் பல முற்றுத் திடப்படுவதற்குங் கூடுமானதாகின்றது. அளவுக்கு மீறிய மலத்தை வெளிப்படுத்திய பின்னரே சரீர ஆரோக்கியம் சித்திப்பதையும் இதற்கு உவமானமாகக் கொள்ளலாம். அவ்விதமே, அபரிமிதமாய்ப் பெருகும் இந்திரிய ஊற்ருனது விவாக சுகத்தின் மூலமாய்த் தன்னில் அதிகப்பட்டதை வெளிப்படுத்தித் தணியும்போது, ஆரோக்கிய லாபமும் அத்துடன் தோன்றுகின்றன. மேலும், விவாகத்தால், இயற்கையிலேயே கடவுளால் தோன்றப்பெற்ற காமம் ஒருவாறு அடங்கி, காமவிகாரம் ஒழிந்து, உலகில் மற்ற மாதர்களைச் சகோதர நோக்குடன் பார்ப்பதற்குக்கூடுமான நன்னெறிப்பக்குவத்தையும் நல்குகின்றது. தனக்கு ஒரு ஜீவதுணையாய் ஒரு பெண்மணியும் கிடைப்பது மானிட வாழ்வில் எத்துணையோ பெரிய ஆறுதலாகும். தாய்க்குப் பிறகு அந்தத் தாயைப் போலவே அன்பு பூண்டு ஒழுகும் உத்தம பத்தினியின் உயர்வைப் பேசுதலுங் கூடுமோ?

ஃ

விவாகமற்று ஏகாங்கியா யிருப்போரும், விவாகத்திற்கு வழியற்ரேரும் பெரும்பான்மையும் ரகசிய துர்க்கிரியைகளிலேயே காலங்கடத்திக் கொடிய பிணிகளின் வசமாகிக் காமத்தை முறைகெட்ட வழிகளில் அனுபவித்துப் பாவத்தைத்தேடி யழிவதையும் கண்டுதானிருக்கிரேம். எனவே, துறவறத்தில் ஏகாங்கியாய் வாழ்வதினும், இல்லறத்திலிருந்து, இல்லாளுடன் வாழ்ந்து, காம சாந்தி கொண்டு, வமிச விருத்திபுரிந்து, இல்வாழ்விலிருந்தும் அதில் ஒட்டாத நிலையிலும் நின்று, கடவுள் வழிபாட்டுடன் மேலோங்குதலே ஆரோக்கிய வாழ்வுக்கு வழியாகும். இல்லறத்தில் கிரமம் தவறினும் பரிகாரம் உண்டு. துறவறத்திலோ சற்று பிறழ்ந்திடினும் மீட்சியில்லை. அதோகதி தான். ஆதலின், துறவறத்தினும் இல்லறமே சாலச்சிறந்ததாகும். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ருர் பெரியோர்.

# ஸமஸ்கிருத நாடகங்கள்.

(7-ம் வால்யம் 721-ம் பக்கத் தொடர்ச்சி.)

8. "முத்ரா ராக்ஷஸம்" விசாக தத்தரால் வரையப்பட்டுள்ள ராஜீய சம்பந்தமானதோர் சிறந்த நாடகம். இதை வாசிப்போர் கண்களுக்குமுன் வாசிக்கப்படும் விஷயங்கள் உண்மையில் நடப்பதுபோன்று தோன்றக் கூடிய, ராஜீய சூழ்ச்சிகளும், வீரம், தைரியம், புத்திசாதுர்யம், இவைகள் மானிட ரூபத்துடன் தோன்றுவது போலும் விளக்கும் உயர்ந்த க்ரந்தம். நந்தகுப்தனின் மந்திரியான ராக்ஷஸன் என்பவன் நந்தகுப்தனைத் துரத்தி அரசாண்டுவரும் சந்திர குப்தனை வஞ்சம் தீர்க்கத் தேடும் பல சூழ்ச்சிகளும், அவைகளை மதியால் வெல்லும் மறையோன் சாணக்கியன் என்னும் சந்திரகுப்தனின் மந்திரியின் இந்திரஜால தந்திரங்களும் படிப்போரின் மனதைக் கவருமென் பதிலையமில்லை. (இதுவும் தமிழில் ஆநந்தககதாகல்பகம் ஐந்தாம் வால்யத்தில் இருக்கிறது.)

ஃ

9. "வீணி ஸம்ஹாரம்" ஆறு அங்கங்களுடன் "பட்ட நாரரயணன்" என்பவரால் எழுதப்பட்டது. இதன் கதா சாராம்சம் மஹாபாரதத்தினின்று எடுக்கப்பட்டுள்ளது. துர்யோதனனின் சபை நடுவில் அவன் சகோதரன் துரௌபதையின் சிகையைப் பிடித்து இழுத்துவந்து மானபங்கம் செய்யவே, அத்தருணம் தன்னை சிகையைப் பிடித்து யிழுத்து வந்தவனை வதம் செய்தாலன்றி அவிழ்ந்த சிகையை முடியேன் என்று சபதம் செய்ய, பின்னர் பாரத யுத்தத்தில் அவன் கொல்லப்பட்டு அவன் உதிரத்தினுல் நனைக்கப்பட்ட தன் சிகையை துரௌபதி முடிகின்ருள். இதுவே இந்நாடகத்தின் கதாம்சம்.

ஃ

10. வித்த சாலபஞ்சிகா.

11. கற்பூர மஞ்சரி.

12. பாலராமாய்ணம்.

13. பிரசண்ட பாண்டவா அல்லது பால பாரதம்.

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு நாடகங்களும் சுமார் 900 கி. பி.-யிலிருந்த ராஜசேகரன் என்பவரால் எழுதப்பட்டன. இவைகளின் அழகிய நடையும் இனிமையான பதங்களின் சப்தமும் போற்றத்தக்கது.

ஃ

14. "சண்ட கௌசிகா", அல்லது "கோபமுள்ள கௌசிகை" என்னும் நாடகம் பத்தாம் நூற்ருண்டிலிருந்த லக்ஷ்மீச்வரன் என்பவரால் வரையப்பட்டது.

ஃ

15. "ஹனுமான் நாடகம்" அனுமானின் சரித்திரம் முழுமையும் அழகாய் "தாமோதர மிச்ர"னுல் எழுதப்பட்டுள்ள நாடகம். சில கதைகளின் மூலமாய் இந்நாடக கர்த்தா பதினேராம் நூற்ருண்டில் போஜ மன்னனின் வித்வத் சபையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. பதினன்கு

---

சிசுவானது பிறக்கும்போதே இருபது பற்களை யுடைத்தாயிருக்கினும், அப்பற்கள் தாயின் மெல்லிய மூலையிற் படாதபடி தந்த ஜவ்வு எனும் போர்வையால் மூடப்பட்டிருக்கின்றன.

அங்கங்களுடன் கூடியதேயாயினும் முதல் அங்கத்திற்கும் பின் தொடங்கும் அங்கத்திற்கும் சம்பந்தமில்லாமல் வரையப்பட்டிருக்கிறது.

ஃ

16. "பிரபோத சந்திரோதயம்" கிருஷ்ண மிச்ரனுல் வரையப்பட்டுள்ள ஆறு அங்கங்களுடன் கூடிய நாடகம். பதினோராம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வரையப்பட்டுள்ளது. பல நீதிகளை முதலினின்று கடைசிவரையில் போதிக்கும் அரிய நாடகம். (இது தமிழில் செய்யுளாகவும் வசனமாகவும் வந்திருக்கிறது.)

ஃ

17. "ரத்னுவளி" ஸ்ரீ ஹர்ஷ மகாராஜனுல் வரையப்பட்டுள்ள "முத்து மாலை" என்ற மறுபெயரையும் உடைய இனிய நாடகம். காளிதாஸரின் மாளவிகாக்னிமித்திரம் என்ற நாடகத்தையொத்து வரையப்பட்டுள்ளது.

ஃ

18. "மிருச்சகடிகம்" அல்லது "மண் வண்டி" இது "சூத்திரகா"வினுல் எழுதப்பட்ட காதல் ததும்பும் நாடகம். (தமிழிலும் வந்துள்ளது.)

ஃ

19. ஸ்வப்னவாஸவதத்தம்

20. பிரதிக்ஞா

21. சாருதத்தம் முதலிய நாடகங்கள் பாஸன் எழுதியவை. இவைகளிலுள்ள வசன நடையும் பாஸனுடைய காலத்திலுள்ள "பிராக்ரத" நடையையும் நோக்கின் இவைகள் அவரால் எழுதப்பட்டிருக்கவேண்டுமென நிச்சயமாய்க் கூறலாம்.

ஃ

22. அலிபுத்ர பிரகரண:— சில நாடகங்கள் தற்கால ஆராய்ச்சி நிபுணர்களின் பரிசோதனையால் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் அரைகுறையாகவிருக்கும் அலிபுத்ர பிரகரண என்பது புத்த மத சம்பந்தமானது. இது அஸ்வகோஷரால் எழுதப்பட்டது என்பது பலருடைய நம்பிக்கை. இது அலிபுத்ரன் என்பவன் எப்படிப் புத்த மதத்தைத் தழுவினுனென்பதைப் பற்றிக் கூறுகிறது. காளிதாஸரின் நாடகமான மாளவீகாக்னிமித்திரத்தில் "பாஸன், ஸௌமில்லிகன், கவிபுத்திரன் முதலிய நாடக க்ரந்த கர்த்தாக்கள்" என்று வரைந்திருப்பதினின்று மேற்குறிக்கப்பட்டுள்ள மூவரும் சில நாடகங்கள் வரைந்திருக்கிருர்களென நன்கு விளங்குகின்றது. ஆயின், இப்பொழுதோ ஸௌமில்லிகனுலும் கவிபுத்திரனுலும் எழுதப்பட்டுள்ள ஒரு நாடகமும் கிடைக்காதிருப்பது நம் துரதிர்ஷ்டமே.

ஃ

தற்காலத்தில் தோன்றும் நாடகங்களுக்குக் கணக்கில்லை. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வோர் நாடகம் எழுதப்படுகிறது. அவைகளைப்பற்றி வரைவதெனில் சாத்தியமில்லை. எவ்விதம் காவ்யங்களில் மிக்க சிறந்தது காளிதாஸரின் ரகுவம்சமோ, அவ்வாறே ஸமஸ்கிருத நாடகங்கள் யாவற்றினும் மேன்மையானது காளிதாஸரின் சாகுந்தலமே.

K. V. S. வாஸ்.

---

எல்லோரும் ஆசிரியர்களாயினுங்கூட, சிலரே மதிக்கப்பட்டுத் தனிப் புகழ் அடைகின்றனர்.

# குழந்தைகள் பக்கம்

## ஒரு பழய தொப்பியின் பெருமை.

பிரான்சு தேசத்தில் ஒரு குடியானவன் ஒருநாள் தனது பழய தொப்பியை ஒரு கடைக்காரனிடம் கொடுத்து, அதற்குப் பதிலாக ஐந்துரூபாய் தரும்படி வேண்டினான். கடைக்காரன் உன் தொப்பி ஒருகாசுகூடப் பெறாதென்று சிரித்தான். குடியானவன், "அந்தத் தொப்பியை என் கஷ்ட காலத்தால் உன்னிடம் வைக்கக்கொண்டு வந்தேனே யொழிய, இல்லாவிடில் இங்கு வரேன்; எனக்குப் பணம் தரவேண்டியவனின் வீட்டில் மரணதுக்கம் நேரிட்டதால் அவனைப் பணம் கேட்க இந்த சமயம் முடியாது; நாளைக்கு நான் வீட்டுவரி செலுத்தவேண்டி யிருப்பதால் என் அருமைத் தொப்பியுடன் இங்குவந்தேன்" என்றான். கடைக்காரனோ மனம் இரங்கவில்லை. இந்த சம்பாஷணையை அருகிலிருந்து கேட்டு நின்ற ஒரு கனவான், குடியானவனுடைய உண்மையான அவஸ்தைக்கு இரக்கப்பட்டு, அவனுக்கு இனாமாகப் பத்து ரூபாயைக் கொடுத்துத் தனது முகத்தை அதிகம் காண்பியாமலே விரைந்து சென்றார்.

2. கடவுளே கொண்டுவந்து தந்தாரென்று குடியானவன் மகிழ்ந்தவனாய் வீடு சென்றான். சில தினங்களுக்குப் பிறகு, அவனுக்கு வரவேண்டிய பணமும் கிடைத்தது. அதிலிருந்து பத்து ரூபாயை எடுத்துக்கொண்டு தனக்கு முன்பு உதவியவருக்குத் திருப்பிக்கொடுக்க அவரை வெகு நாளாகத் தேடியபடி யிருந்தான். அவர் அகப்படவே யில்லை.

3. ஒரு தினம் ஒரு வண்டியில் அவர் முகத்தைக் கண்டுபிடித்து ஓட்டமாய் ஓடித் தொடர்ந்தான். அவன் ஓடி வருவதைக்

---

இராம நாடகத்தில் இராமர் வேடத்தைச் சரியாக நடித்துப் புகழ்பெற்றவர்களில் முதலாவதாக விளங்குபவர் தி. நாராயணசாமி பிள்ளை. இவருக்குச் சமமாக எவரையும் சொல்லவொண்ணாது. அதற்குப் பிறகு K. ஸ்ரீநிவாசப் பிள்ளை. மூன்றாவதாக இராமச்சந்திரம் பிள்ளை. அதற்கு பிறகு எவரையும் குறிப்பிடுவதற்கில்லை.

கண்டு அந்த கனவானும் வண்டியை நிறுத்தி, என்ன சங்கதி யென்று கேட்டார். அதற்கு அவன், "ஐயனே! நீங்கள் அன்று எனக்குக் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க வெகு நாளாய்த் தேடி வாடினேன்; இதோ இப்பொழுது கொடுக்க வந்திருக்கிறேன்" என்றான்.

4. அந்தக் கனவான் அவனுடைய யோக்கியதைக்காக ஆச்சரியப்பட்டு சந்தோஷித்தவராய், "அந்தப் பணத்தை நீயே வைத்துக்கொள்; அது உனக்கு நன்கொடையாகக் கொடுத்தது" என்றார். அதற்குக் குடியானவன், "நான் தேடாத பொருளை என்னுடையதென்று ஒருபொழுதும் பெற்றுக்கொள்ளுகிறதில்லை; நான் தங்களுக்கு ஒரு நன்றியும் செய்யவில்லை; தாங்களே எனக்கு ஏற்றசமயத்தில் பொருளை யுதவினீர்கள்; அந்தப் பொருளை இப்பொழுது தாங்கள் பெற்றுக்கொள்ளும்படி வருந்திப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

5. அதற்கு அந்தக் கனவான், "அப்பா! நண்பனே! அந்த ரூபாய் உன்னுடையதுமன்று, என்னுடையதுமன்று; அந்தப் பணத்திற்கு உன் மக்களுக்கு வேண்டியனவற்றை வாங்கிக்கொடு. நான் மனதார நன்கொடையாய்த் தந்து மறந்தும்போனதைத் திரும்பிப் பெற முடியாது" என்றார். குடியானவனும் வணங்கி ஒப்புக்கொண்டான்.

6. மறுபடியும் அந்த கனவான் அவனை நோக்கி, "அப்பா! நாம் ஒருவருக்கொருவர் பிரிந்துபோவதற்குமுன்பே உன்னைக் கேட்க வேண்டுவதொன்றுண்டு; அந்தப் பழய தொப்பியைபற்றி அந்தக் கடைக்காரனிடம் அவ்வளவாக மதித்துப் பேசினையே; அதன் விருத்தாந்தமென்ன?" என்றார்.

7. குடியானவன் கூறியதாவது:—ஒரு பிரபுவினுடைய குழந்தை அகழிக்குள் விழுந்துவிட்டான். ஜலம் நிறைந்திருந்த அதில் உடனே நான் என் உடுப்புகளையும் கழற்றாமல் குதித்துக் குழந்தையை எடுத்துக் காப்பாற்றினேன். அதற்கு அந்தப்பிரபு வெகுவாய் சந்தோஷித்து, என் சாப்பாட்டுக்கு உதவும்படி வயலும் நிலமும் கொடுத்து, வீடு கட்டிக்கொள்ளவும் விவாகம் செய்துகொள்ளவும் ஒரு சிறு முதலையும் வழங்கினார். என் தலையிலிருந்த தொப்பி தண்ணீரில் விழுந்துவிட்டதால், அதற்குப் பதிலாய் அவர் தமது தொப்பியை என் தலையில் வைத்து, உன் சிரசில் மகுடம் வைத்தால் எனக்குத் திருப்தியாயிருக்கும், ஆயினும் பொன் வைக்குமிடத்தில் பூவைக்கிற

---

தன் மனைவியிடத்தில் தன் மாற்றாந்தாயின் குமாரன் அதிக வார்த்தை வைத்துக்கொண்டதைக் கண்டித்து, இனி நீ இவ்வீட்டின் பக்கம் வராதே என்று விலக்கிவிட, மாற்றாந்தாயும் என் குமாரனை வரவேண்டாமென்றவன் வீட்டை மிதிப்பதில்லை என்று ஒதுங்குகிறாள். எப்போதுமே ஒதுங்கிக் கொள்ளநினைக்கும் குணத்திற்கு ஏதாவது ஒரு சாக்கு அகப்பட்டால்போதும்.

துபோல என் சக்திக்கேற்றபடி இதை வைத்தேன் என்று சொல்லி வாழ்த்தினர். அவரது உபகாரத்தை மறவாமல் இந்தத் தொப்பியை நான் என் உயிருக்குச் சமமாய்க் காப்பாற்றி வருகிறேன் என்றான்.

8. அதைக் கேட்ட அந்தக் கனவான் முன்னைவிட அதிகமான அன்பு பாராட்டினர். தமது விலாசத்தை அவனிடம் கொடுத்து, உனக்குத் துணை எப்போதெப்போது வேண்டுமோ அப்பொழுதெல்லாம் என்னிடம் வா, உனக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கிறேன் என்று கூறி விடைபெற்றுச் சென்றார். குடியானவனும் சந்தோஷமாய் வீட்டுக்குப் போனன். நன்றியறிகிற உத்தமகுணமுள்ளவனுக்குக் கடவுளின் அருளால் எல்லா நன்மையும் உண்டாகும்.

## இரண்டும் கெட்ட பெண்.

விஷ்ணுப்பிரஸாத், ஹரிப்ரஸாத் என்னும் இருவர் ரஜபுத்திர ஸமஸ்தானத்திலிருந்து பம்பாய்க்கு வந்தனர். ஹரிப்ரசாத் பணக்காரனாயிருந்தான். அவன் வசித்த வீட்டுக்கருகே யிருந்த ஸ்திரீயினிடம் மோகங்கொண்டு தன் போஷணையில் வைத்துக்கொண்டான். அந்த ஸ்திரீயின் புருஷன் தர்க்கம் செய்யவே, அவனுக்குச் சில தொகைகளைப் பரிகாரமாய்க் கொடுத்தான். சிலநாள் இவர்கள் அந்யோந்ய பாவனையோடு வஸித்து, பிரம்மஸமாஜிகளைப்போல விவாகமும் செய்துகொண்டனர். இச்சங்கதிகள் ஹரிப்ரஸாதின் மனைவிக்கு எட்டி அவள் இந்த ஸ்திரீயைத் திட்டினாள். ஹரிப்பிரஸாதும் தன் மனைவியின் பக்கமாகித் தன் புது ஸ்திரீயுடன் சண்டையிட்டு திரஸ்காரம் செய்தான். ஏமாறிய ஸ்திரீ கோர்ட்டில் வழக்காடினாள். ஜட்ஜிகள் இந்த விவாகம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவெனத் தீர்மானித்தனர். "ஹரிப்பிரஸாதுக்குப் பெரிய மனைவி யிருக்கிறாள். அவள் உயிருடன் இருக்கையில் இவன் வேறொரு ஸ்திரீயை பிரம்மஸமாஜ ஆசாரப்படி மணந்துகொண்டது தவறு. ஆகவே, இந்த அன்னிய ஸ்திரீ ஹரிப்ரஸாதினிடம் எவ்வித பாத்தியமும் கொண்டாட முடியாது" என்றனர். புத்திகெட்ட இந்த ஸ்திரீ உள்ள பொருளையும் வியாஜ்யத்தில் தொலைத்து, சொந்த புருஷனையும் இழந்து, ஹரிப்ரஸாத்தாகிய புதிய பர்த்தாவையும் துறந்து, திக்கற்று ஏகாங்கியானாள். பதியைத் துறந்து பரபுருஷ விகாரங்கொள்ள நினைக்கும் தூர்த்தைகள் இந்த ஸ்திரீயின் கதியைச் சிந்திக்கக்கடவர்.

# உயிர் கொடுத்த பொம்மை.

"எவ்வளவு காலந்தான் ஏழையாயிருப்பது? கையில் இரண்டு பணமாவது மிச்சப்படுத்தி வைக்க வேண்டாமா? இதுவரையில் பொம்மை செய்து விற்றதில் வயிற்றுக்கே சரியாக இருந்தது. இனி ஏதாவது அதிக பணம் கிடைக்கும்படி உயிருள்ள பொம்மைபோல் பெரியதாக ஒரு பொம்மை செய்து பார்க்கவேண்டுமென்று சின்னான் தனக்குள் சொல்லிக்கொண்டான். அவன் பொம்மை செய்வதில் வெகு சாமர்த்தியவான். தான் உத்தேசித்தபடியே ஆறு மாதம் உழைத்து ஒரு பெரிய பொம்மையை அழகாகச் செய்து முடித்தான்.

ஃ

சின்னான் இருந்த வீட்டில் ஒரு கைம்பெண் குடியிருந்து வந்தாள். அவளுக்கு மரகதம் என்று ஒரு சிறு குமார்த்தியுண்டு. அவள் இந்தப் புதிய பொம்மை செய்யத் தொடங்கிய நாள் முதல் அதன்மேல் ஆசைவைத்து அருகிலேயே இருந்துவந்தாள். அவளுக்குத் திடீரென்று வியாதிவந்து படுக்கையில் விழுந்தாள். மூன்று மாதமாக வைத்தியர் மருந்துகளைக் கொடுத்தும் குணமடையவில்லை. பிறகு அவர் அந்தச் சிறுமியே தனக்குள் உற்சாகப்பட்டுக்கொண்டு எழுந்தால் தான் பிழைக்கலா மென்று சொல்லி. அவளுக்குப் பிரியமான விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கித் தந்தார். ஆயினும், அச்சிறுமியின் மனம் அந்தப் பெரிய பொம்மையின் மீதே இருந்தது. பொம்மையின் வேலையும் முடிந்து, பொம்மை வெகு சுந்தரமாய் அமைந்தது.

ஃ

சின்னான் அதை விற்றுவரத் தன் வாடிக்கைக்காரனிடம் சென்றான். அந்தப் பொம்மைக்கு அதிக விலை கூறியதால், முதலில் கடைக்காரன் ஐந்து ரூபாய்க் கொடுத்து, பிறகு பாக்கியைத் தருவதாகச் சொல்ல, அவ்விதமே ஒப்புக்கொண்டு பொம்மையைக் கொடுத்துவிட்டுத் திரும்பினான்.

ஃ

அவன் சென்றபிறகு சிறுமிகண் விழித்துப் பொம்மையைப் பார்க்க நினைத்தாள். பொம்மை காணாமலிருக்கவே, அதுவே ஏக்கமாகிப் பிராணன் போகக்கூடிய நிலைமைக்கு வந்து மூர்ச்சையானாள். இந்த சமயத்தில் சின்னான் ஐந்து ரூபாயுடன் அதிக சந்தோஷமாய் வீட்டிற்குள் வந்தான். சிறுமி பொம்மையைக் காணாமல் தத்தளித்து அபாய நிலைக்கு வந்துவிட்டாளென்று அறியவே, மனம் பதைத்து மறுபடியும் கடைக்கு ஓடினான். தன் வாடிக்கைக்காரனைக் கண்டு அவன் தந்த ரூபாயைத் திருப்பிக்கொடுத்து, ஐயா, தயவுசெய்து பொம்மையைத் திருப்பிக் கொடுங்கள், அதை மிகவும் நேசித்த சிறுமி அதைக் காணாததால் உயிர் போகக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டாள்; முன்பே அவள் அதிக நோயாகி எலும்பும் தோலுமாய் இருக்கிறாள். அவள் பிராணனைக் காப்பதற்காகப் பொம்மையைக் கொடும். இந்தப் பொம்மை செய்து பழகிவிட்டதால் இதைப்போல் வேறொரு பொம்மை செய்து உமக்குக் கொடுக்கிறேன்

என்று கெஞ்சினன். வாடிக்கைக் காரனும் இந்தப் பொம்மைக்கு ஒரு சிறுமியைப் பிராணன் போகாமல் காக்கும் சக்தி எற்படும்படி அவ்வளவு அழகாய்ச் செய்து முடித்த அருமை சிலாகிக்கத்தக்கதே என்று சொல்லி, அந்தப் பொம்மைப் பணத்தை வாங்காமலே திருப்பிக் கொடுத்தான்.

ஃ

சின்னன் வெகு சந்தோஷத்துடன் அந்தப் பொம்மையை எடுத்துக் கொண்டுவந்து அச்சிறுமியின் அருகே வைத்து மெதுவாகத் தட்டி எழுப்பினன். சிறுமி கண்ணைத் திறந்ததும், தனது ஆசைக்குரிய பொம்மை அருகில் இருக்கவே ஆவலோடும் எழுந்து அதை எடுத்துக் கொண்டு முத்தமிட்டாள். சின்னன், குழந்தாய், இந்தப் பொம்மையை நீயே எடுத்துக்கொள் என்ருன். சிறுமியும் அதிக பரவசமடைந்தாள். அந்த ஆநந்தமே காரணமாகப் புதுப் பலம் உண்டாகி ஒரு வாரத்தில் குணமடைந்தாள். வைத்தியர் மிகவும் சந்தோஷித்தவராய், என் மருந்தை விட, உன் பொம்மையே வியாதியைக் குணப்படுத்திப் புது உயிர் வரச் செய்ததென்று சின்னனைக் கொண்டாடி வேண்டிய பொருளுதவி செய்தார். சின்னனின் பிரஸித்தி ஊர்முழுதும் பரவி, அவனும் அநேக பொம்மைகள் செய்து ஐசுவரியவானனன். அச்சிறுமி பெரியவளான பின்பும் அந்தப் பொம்மையை ஒருவருக்கும் கொடுக்க அவள் சம்மதிக்கவில்லை.

## ஏழ்மைத்தனத்தில் முதல் அந்தஸ்து.

முற்காலத்தில் இந்தியாவில் உத்தியோகம் செய்ய வந்த பிரிட்டிஷார் தங்களுடைய உத்தியோக காலம் முடிந்து சீர்மைக்குத் திரும்பிப் போனதும், அங்குள்ள ஜனங்களால் நவாப்கள் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். இந்தியா முதலிய தேசங்களில் நவாப்கள் எவ்வளவு செல்வமும் போகமும் உள்ளவர்களாக இருப்பார்களோ, அவ்வளவு செல்வமும் போகமும் அந்த உத்தியோகஸ்தர்களும் அனுபவிக்கக் கூடியவர்களாக இருந்தனர். அந்தக் காலத்திற்குப் பிறகு உயர்தர உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்கள், படிகள் முதலியன பெருகியே யிருக்கின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பணப்புஷ்டியுள்ள தேசங்களில் உத்தியோகஸ்தர்கள் பெறும் சம்பளங்களைக் காட்டிலும் இந்தியாவில் உத்தியோகஸ்தர்கள் அதிகமாகவே பெறுகிருர்கள். ஆனல், இதர தேசங்களின் அந்தஸ்துக்கும், இந்தியாவின் அந்தஸ்துக்கும் உள்ள வித்தியாஸம் மலைக்கும் மடுவுக்கும் ஸமமாகும். அத்தேசங்கள் செல்வத்தில் முதல்தர அந்தஸ்தை வகிப்பதற்கு நேர் எதிரிடையாக, இந்தியாவோ ஏழ்மைத்தனத்தில் முதல் அந்தஸ்தை வகித்துவருகிறது.




# ஆலய தரிசனப் போக்கு !

படபடவென்று வெடிப்பன !
பளபளவென்று ஒளிர்வன !
அடடாவோ ! எத்தனை தினுசுகள் !
அற்புத வாணங்கள் காணவும்
உடன்வரும் ஆட்டங்கள் பார்க்கவும்
உற்சவத்திற்குச் செலல் அலால்,
கடவுள் திருவருள் தன்னிலே
கருத்தைச் செலுத்துவோர் அரியரே ! (1)

தரிகிட ததிங்கண தோமென
தாசிகள் ஆடலைப் பார்க்கவும்,
பெரியநன் மேளக் கச்சேரியில்,
பேசு நாகசுரங் கேட்கவும்,
உரிய தோழர்களைச் சந்திக்கவும்
உற்சவம் முன்னிட்டுக் கூடுவோர் !
அரி சிவ சமயப் பிணக்குகள்
ஐயகோ ! மலிந்தன எங்குமே ! (2)

விரும்பிய பொருள்களை வாங்கவும்
வேடிக்கைகள் பல காணவும்
கரும்பும் மிட்டாய்களும் தின்னவும்
கடைகள் சிறப்பினைப் பார்க்கவும்
அரும்பும் மலர்களும் சூடவும்
அமை உற்சவங்கட்குக் கூடுவோர்,
பரம்பொருள் அருளை நினைக்கிலார்,
பக்தியை மறந்தனர் முற்றுமே ! (3)

ஆசையெனும் பெரும் பேயினை
அகற்றி மன அகங்காரத்தை
நாசமுறுவித்து பக்தியை
நாளும் வளர்த்திட வல்லதாம்

---

*பிரிகிற நாள் பின்னுக்கு நிச்சயமாகவே உண்டு. அதற்கு இடையிலும் பிரிவினை ஏனோ?*

ஈசன் திருக்கோயில் இந்நாளில்
எண்ணிலா ஆசைகள் வளர்ப்பதாய்
'தோசை வடைக்கடை ஆயதே!
தூய மெய்ப்பக்தி மறைந்ததே! (4)

நெஞ்சொருமைப் பாட்டை நேர்விக்க
நிமலன் அருளினைப் பெற்றுய்ய
சஞ்சலம் மாறி அமைதியைச்
சார்ந்து மகிழ்ந்து துதித்திட
அஞ்சல் என்(று) அருள்செயும் ஆண்டவன்
ஆலயம் முன்னர் அமைத்தனர்!
நஞ்சனையார் செய் வினைகளான்,
நன்னோக்கம் மறந்தனர் பலருமே! (5)

நிகழும் குறைகளை நீக்கியே
நேர்மை பெறச் செவ்விதாக்கியே
திகழும் திருக்கோயில் தன்னிலே
தெய்வ மணம் கமழச் செய்தால்,
இகழ்பவர் புன்வாய் அடங்கிடும்;
இன்பமே கோயிலில் பெருகிடும்;
புகழ் திருக்கோயில் வழிபாடு
புனித மெய்யன்பை வளர்க்குமே! (6)

பாவங்கள் யாவையும் போக்கலால்
'பரமபாவனன், என்பர் இறைவனை;
கேவலப்படுத்திய கொடுமையால்
கீழ்மை யடைந்த எளியவர்,
ஆவல் மிகுதியால் அருள்மிகும்
ஆண்டவன் கோயிலில் புகுந்திடில்,
மேவும் அங்கே பெருந் தீட்டென
விளம்பல் சிரித்தற்(கு) உரியதே! (7)

இன்புருவாகிய ஆண்டவன்
அனைவர்க்குமே தந்தை அல்லவோ?
துன்பந் துடைப்பது கோயிலாய்ச்
சொல்லின், எளியவர் படுகிற

---

நண்பர்களாக நெருங்குவோர் மிக உத்தமர்கள்தான். ஆனால், நூலாசிரியரின் நூல்களை இலவசத்திலேயே பார்த்துவிட வழி கிடைக்குமா என்று ஆராய்கிறவர்களாக இருக்கிறார்களே தவிர, பணம் கொடுத்துப் பெற்று ஆதரிக்கிற புத்தியைக் காணோம். சும்மா வரக்கூடியதற்கு என் பணம் தர என்று நினைக்கிற எண்ணங்களும் வேறே!

வன்பெருந்துயர்களைக் கோயில்கள்
மாற்றற் (கு) உரியன அல்லவோ?
இன்புற இறைவனைப் போற்றவும்
எளியவர்க் (கு) உரிமையே இல்லையோ? (8)

சாதி மதங்கள் கடந்த நற்
சன்மார்க்க நன்னெறியின ரேனில்,
நீதியின்றிச் சில எளியரை
நீசரேனப் பழித்து ஒதுக்காமல்,
ஆதிமுதல்வன் அருள் பெற
அனைவர்க்கும் உரிமையுண்டென்று முன்
ஓதிய (து) உணர்ந் (து) அனைவர்க்குமே
உள்ளன்பையே இனிக் காட்டுவீர்!

ஆரியூர் வ. பத்மநாப பிள்ளை

## அருகிலிருப்பவருக்கு அருமை தெரிவதில்லை.

தன் குமாரனின் பரவிய புகழ் அன்னைக்கு ஒரு பெரிதாகப் படுவதில்லை. தன் நாயகனுக்கு வெளியிலிருக்கும் மதிப்பை நாயகி ஒரு அருமையாகப் போற்றுவதில்லை. பக்கத்து வீட்டுக்காரனுக்கு அடுத்த வீட்டுக்காரனின் சிலாக்கியங்களை யறியப் புத்தி போவதில்லை. இவ்விதமே ஒரு விசேஷித்த ஸ்தலத்தின் அருகிலாயினும், ஒரு புண்ணிய தீர்த்தத்தின் ஸமீபத்திலாயினும் வசிப்போர் அதன் அருமையை அதிகம் பாராட்டுவதில்லை. வெளியிலுள்ளோர் மிக்க மதிப்புடன் அந்த ஸ்தலத்தையும் தீர்த்தத்தையும் போற்றிக் கொண்டாடி அங்கு வரத் தொடங்கியதும், உள்ளூரிலிருப்போருக்கும் ஒரு மதிப்பு தோன்றிக்கொண்டு, தாங்களும் வெளியூராரைப்போலப் பக்தி சிரத்தை கொள்ளத் தொடங்குகின்றார்கள். இதுவே எந்த தீர்த்த க்ஷேத்திரத்தின்கண்ணும் ஸாதாரணமாகக் காண்பதாகும். கும்பகோண வாசிகளால் அத்தனை சிரத்தையாகக் கவனிக்கப் படாமல் சாதாரணமாக இருந்த மகாமகக் குளம் மகாமகத்தின்போது பெற்ற பெருமையை என்னென்று வர்ணிப்பதோ; பத்து லக்ஷம் யாத்ரீகள்போல் வந்து மகாமகக் குளத்தில் நீராடினராக, கும்பகோணத்திலேயே வாசமாயிருந்தவர்களிற் சிலர் மகாமகத்தன்று அக்குளத்தில் ஸ்நானம் செய்யப் போகவேயில்லை!

# மதம் வேறு ! குருக்களின் கட்டுப்பாடு வேறு.

ஸமயம் (மதம்) வேறு; குருக்களின் கட்டுப்பாடு வேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும் சாம்பரும் போலாம். மதத்தை மீறிக் கட்டுப்பாடு செல்லும் போது, நதியை மணல் மூடுவதுபோல் ஆகிறது. அங்கு நீர் கெட்டுப் பாலைவனம்போல் தோன்றும். இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சி யடைவோர் மிகக்கேடு கெட்டவர்களென்பது வெளிப்படை.

ஒருவன் மற்றொருவனைக் கஷ்டப்படுத்தினால், இருவருக்கும் கெடுதி யென்று ஸமயம் (மதம்) சொல்லுகிறது. மகள் விதவையாய்ப் பட்டினி கிடக்கும்போது, இன்ன திதியில் அவளுக்குத் தாகத்துக்கு ஜலம் கொடுத்தால் பெற்றோர்களுக்குப் பாவம் என்று குருக்களின் கட்டுப்பாடு சொல்லுகிறது.

பச்சாத்தாபத்தாலும், ஸத்கருமத்தாலும், ஒருவன் பாவத்தைக் கழுவலாமென்று மதம் சொல்லுகிறது. கிரகணத்தன்று ஒருவன் இன்ன நீரில் முழுகினால் தன் பாவம் தீர்வதுடன், பதினான்கு தலைமுறை பிதிர்க்கள் செய்த பாவமும் தீருமென்று குருக்களின் கட்டுப்பாடு சொல்லுகிறது.

மலைகளையும் கடல்களையும் கடந்துபோய், இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக் கண்டு களிக்கவேண்டு மென்று மதம் சொல்லுகிறது. கடலைக் கடந்தவன் மண்ணில் புரண்டு பிராயச் சித்தம் பண்ணவேண்டுமென்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

எக்குடி பிறந்தாலும், உண்மை யுடையவன் தொழத் தக்கவனென்று மதம் சொல்லுகிறது. பிராமணனாகப் பிறந்தவன் மஹா பாபங்கள் செய்தவனாக இருந்தபோதிலும், அவனுடைய பாத தூளைப் பிறர் சிரத்தில் தரிக்கலாமென்று கட்டுப்பாடு சொல்லுகிறது.

சுருக்கிச் சொன்னால், மதம் விடுதலையைப் போதிக்கிறது. குருக்களின் கட்டுப்பாடு அடிமை நிலையைப் புகழ்ந்து கீர்த்தனம் பாடுகிறது.

ஸர். ரவீந்திரநாத தாகூர்.

# பாடுபட்டால் பலன் உண்டு.

"ஓய் விருத்தனே! நினது சிங்காரம் பொருந்திய இச் சோலையின் கண்ணுள்ள செடிகள் எல்லாம் செழித்துச் சிரிப்பதுபோல நிற்க, இதோ உன் தளர்ந்த காலத்தில் இன்னும் இடைவிடாது இவ்விளஞ் செடிகளை நடுவது யாது காரணத்தினால்?" என்று அந்தத் தோட்டத்தின் வழியே சென்ற அரசன், அங்கிருந்த கிழவனை நோக்கிக் கேட்டான்.

அதற்குக் கிழவன் "மேன்மை பொருந்திய மன்னனே! ஒவ்வொருவனும் முன்னே தனது வேலையைச் செய்து, பின்னே தான் புசிக்கவேண்டியவனாவான். ஆனதால், நானும் உழைக்கிறேன்" என்றான்.

அரசன்:—நீ உன்னைப் பலசாலியாகப் பாவித்துக் கொள்கிறாயோ? உன் வயது என்ன?

கிழவன்:—என் வயது எண்பத்து மூன்று.

அரசன்:—இந்தத் தள்ளாத வயதில் இப்போது நடுகிற செடிகளின் கனிகளைக் காதலோடு காண ஆவல் கொண்டிருக்கிறாயோ?

கிழவன்:—மகிமைப் பிரபுவே! கடவுளுக்குச் சித்தமிருந்து நான் இன்னும் ஜீவித்தால் இப்பொழுது நடுகிற செடிகளின்கனிகளையும் நான் உண்ணக் கூடுந்தான். அதற்கு முன் நான் மரித்தாலும் என் பின்வரும் எனது பிள்ளைகள் புசிப்பார்கள். எனது முன்னோர் நான் அனுபவிப்பதற்கென்று இந் நளின மலர்ச்செடிகளையெல்லாம் நட்டுப் போயிருக்க, நானும் எனது பின்னடியாருக்கு நடாது விட்டுப் போனால் அது சரியாமோ?

அரசன்:—களங்கமற்ற பெரியோய்! நீ புகன்றது என் மனதை மிகவும் குளிரப்பண்ணிற்று. நீ விரும்பியவாறே இந்தச் சிறு செடிகளின் கனிகளை நீ நுகர நேரிட்டால் உனது அரசனாகிய எனக்கு அன்புடனே தெரிவிக்க மறந்து போகாதே. என்னையும் உன் நினைவில் வை.

என்று கூறி அரசன் சென்றான்.

ஃ

இதற்குப் பின் கிழவனும் நெடுநாள் ஜீவித்திருந்தான். அவன் நட்ட செடிகளும் செழித்துப் பெரு மரங்களாகிச் சிறந்த கனிகளை ஈந்தன. முதிர்ந்த கனிகளில் முதல்தரமானதைப் பொறுக்கியெடுத்து ஒரு கூடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு அரசனின் அரண்மனைக்குச் சென்றான். அரசன் பழைய விஷயத்தை மறந்து விட்டதால், எதற்காக வந்தீர் என்று வினவினான். அதற்கு விருத்தன் முன் நடந்த வரலாற்றைக்கூறி நானும் ஜீவித்திருந்து பழங்களை ஸமுகத்திற்குக் கொண்டு வந்தேனென்றான். அரசன் அத்தியந்தபரவசனாய் அக்கிழவனைத் தழு

---

முன்பு ஏமாற்றிப் பறித்த இடத்தில் இப்போது முடியாதுபோகவே, அதுகண்டு மறுபடியும் அந்த இடத்துக்கு வராதிருந்துவிடுகிறார்கள்.

விக் கொண்டு, பழங்களை இருகைகளாலும் வாரி எடுத்து வைத்துக் கொண்டு, என் பிரிய தோழனே! என்னை இன்னும் மறவாததற்கு நான் சந்தோஷிப்பது போலவே, நீரும் என்னைக் காண்பதற்கு ஆயுள்பெருகி யிருந்ததில் சந்தோஷப் படுவீரல்லவா என்ருன். பிறகு அக்கூடையிலிருந்த அத்திப்பழங்களுக்குப் பதிலாய்ப் பொன் நாணயங்களை நிறையவைத்து வயோதிகரிடம் கொடுத்து, கடவுள் என் மூலமாக உமக்கு இந்த வெகுமதியை அனுப்பியிருக்கிருர் என்று கூறி வாழ்த்தியனுப்பினுன். விருத்தன் சுகமாய் வீடு சேர்ந்து, தான் பெற்ற பரிசுகளை அனைவருக்கும் காண்பித்து மகிழ்ந்தான்.

ஃ

இதைக் கேட்ட அயல் வீட்டுக்காரி, தன் கணவனிடம் அத்திப் பழங்களைக் கூடை நிறைய வைத்து எடுத்துக்கொண்டு அரசனிடம் சென்று கிழவனைப் போலத் தங்க நாணயங்கள் பெற்று வரும்படி தூண்டினுள். அவனும் அவ்வாறே பழக் கூடையுடன் அரசனிடம் சென்ருன். அரசன் அவனது பேராசைக்குப் புன்னகை புரிந்து, அவனை அரண்மனை வாயிலில் நிறுத்தி ஆளுக்கொரு அத்திப்பழத்தை அவன் கூடையிலிருந்து எடுத்து அவன் முகத்தில் எறியும்படிக் கட்டளையிட்டு, அவ்விதம் செய்தபிறகு அவனை வெளியே துரத்தி விட்டான்.


ஃ

நாயகன் வர அதிக நேரம் சென்றதால் சுவர்ண மயமாகவே திரும்புவார் என்று நம்பிக்கொண்டிருந்த அயல் வீட்டுக்காரி, தனது கணவன் வந்ததும், அவன் பட்ட அவமதிப்பைக் கேட்டுப் பதில் பேசாமல் வாயடங்கினுள். பிறன் உழைத்து அடைந்த லாபத்துக்குத் தாங்கள் உழைக்காமலே பெருமைப்பட நாடுவோர் கடைசியில் கெட்டழியவே நேரும்.

## அச்சுக் கலைப்பு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜ | ா | த | ரி | ஹ | ஷ | | | |
| ம | ஏ | ர | ா | ன் | த | ஆ | | |
| ப | த் | ய | ப | வ | ப | ரு | த | |
| ர் | ஹ | ம் | தி | ப | ஸ | ை | ர | ா |
| ை | பூ | ட | ஹ | ஙா | ஸ்ரீ | ய | க | |

இந்தியாவின் பெயர்களை அச்சுக் கோர்த்து வைத்திருந்ததில், அஜாக்கிரதையாய்க் கை தவறி இடறியதில் இப்படிக் கலந்து போய்விட்டது. இந்த எழுத்துக்களை ஒன்ருகச் சேர்த்துக் கிரமப்படுத்தினுல் ஆறுவிதமான பெயர்களாகும். சீட்டாட்டத்தைவிட இது நல்ல பொழுதுபோக்கு.




கம்பருக்கு அவ்வளவு நல்ல பேரு எப்படி வந்துது, அவர் எதுவரைக்கும் இங்கிலீஷ் படித்தாரு என்று ஒருவன் விகடனைக் கேட்டானம் !

ஃ

"சிறந்த ஆசிரியர்கள்" என்ற பேர் தூரத்திலிருக்கிற ஆசிரியர்களுக்குத் தானம் ! அருகிலிருக்கும் ஆசிரியர்களை மதிப்பதுமில்லை, எட்டிப் பார்ப்பதுமில்லையாம் !

ஃ

வீட்டுக்காரன் எவ்வளவு பணம் செலவிட்டு வாங்கிவந்து போட்டாலும், சமையல் நன்ருயிருக்கிறது என்ற பேர் மனையாளுக்குத்தானம் !

ஃ

கும்பகோணத்து மகாமக தரிசனம் கண்டோர்களுக்கு இப்போது புது அதிர்ஷ்டங்களும், புதுபுது வருமானங்களும் தோன்றிக்கொண்டிருக்கின்றனவாம் !

ஃ

சுவிகாரம் எடுத்துக்கொண்டவர்கள் எப்போது சாவார்களோ, அவர்களின் சொத்துக்களெல்லாம் நமக்கு எப்போது கிடைக்குமோ என்று சுவிகாரமாய்ப் போன குமாரர்கள் அதே நினைவாய் எதிர் பார்க்கிருர்களாம் !

ஃ

நாட்கள் போகுதே, போகுதே, இன்னும் கல்யாணம் ஆகவில்லையே, கல்யாணம் வேண்டுமென்று வெளிப்படையாய்ச் சொல்லவும் வாய் வரவில்லையே, வீட்டிலிருப்பவர்களும் ஜாடையாகத் தெரிந்து கொள்ளவில்லையே ! சித்திரைமாதம் பிறந்துவிட்டதே என்று கண்ணுல மில்லாதவர்கள் விகடனிடம் வந்து ஏங்கி வீங்கிஞர்களாம் ! ஃ

பொருமையும் எரிச்சலும் அலக்ஷியமும் அதிகமானுல் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பினுலுங்கூடப் பதில் வராதாம் !

ஃ

என்னதான் ஒருவன்மேல் ஆங்காரப்பட்டாலும் அவனைப்போல அப்படியே ஆகிவிட முடியாதாம் !

ஃ

அதிக அழகுக்குத் தகுந்தாற்போல ஆபாச நடத்தையும் கொஞ்சம் கொஞ்சம் ஒட்டிக்கொண் டிருக்கத்தான் செய்யுமாம். !

ஃ

பேர்பெற்ற நாடக இராஜபார்ட் ஜி. எஸ். முனுசாமி நாயுடு தமது "சுதேச நாடகக் கம்பேனி" யை நடுவிலே நிறுத்திவிட்டார். அவருக்குப் பிறகு பேர்வாங்கிய ஆரியகான செல்லப்பா, வகையினர் ஆரியகான சபை"க் கம்பெனியை நிறுத்திவிட்டார்கள். அது என் என்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு, ஒவ்வொரு அதிர்ஷ்டத்திலும் ஒருபெரிய-மூச்சு-குறை - சொட்டு ஒட்டிக்கொண்டிருக்குமென்று பதில் சொன்னனம் !

ஃ

பணக்காரப்பெண்ணு நல்லவளா ? குணக்காரத் தரித்திரப் பெண்ணு நல்லவளா ?—என்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு, பணம் வேண்டுமானுல்குணத்தைப்பார்க்காதேகுணம் வேண்டுமானுல் பணத்தைப் பார்க்காதே என்று பதில் சொன்னனம் !

ஃ

அடக்கி நடத்துகிறதிலேயே கவனிப்பாயிருக்கிறவன், வெகு நல்லவனுய் ஏதோ ஏமாந்தவன் போலவே தன்னைக் காண்பித்து நிற்பானம் !

ஃ

எல்லா வீடுகளுக்கும் கதவுகள் ஒன்றுபோலவே இருந்தாலும், அந்தக் கதவுக்குப் பின்னே நடக்கிற ஸம்சார—சச்சரவுச் சங்கதிகள் வெவ்வேறு தினுசுகளா யிருக்குமாம் !



# ஹாஸ்ய சஞ்சீவினி



தணிகாசலம் பிள்ளை ஓர்நாள்: டாக்டர் விகடபூஷணம் அவர்களுக்கு, "ஆபத்து, உடனே வரவும்" என்று டெலிபோன் செய்தார். 10-நிமிஷத்திற்கெல்லாம் டாக்டர் விகடபூஷணம் காரில் வந்து இறங்கி உள்ளே சென்றார். தணிகாசலம்பிள்ளையவர்களைப் பார்த்து: 'மிஸ்டர் பிள்ளையவாள் என்ன விசேஷம்:' என்றார். தணிகாசலமும் தன் கையைக் காண்பித்து 'என் உடம்பு எப்படியிருக்கிறதென்று முன்பு தெரிவிக்கவேண்டியது' என்றார். உடனே டாக்டரும் அவருடைய கையைப் பிடித்துப் பார்த்துக் கூறத் தொடங்கினார். 'உமக்கு சூட்டைப்பற்றின வாய்வு வீட்டைப்பற்றிக்கொண்டது, வீட்டைப்பற்றின வாய்வு காட்டைப் பற்றிக்கொண்டது, காட்டைப் பற்றின வாய்வு காலேஜைப் பற்றிக்கொண்டது, காலேஜைப் பற்றிக்கொண்ட வாய்வு கோட்டைமைதானம் பற்றிக்கொண்டது, கோட்டைமைதானம் பற்றின வாய்வு லேட்டவுஸ் பற்றிக்கொண்டது. இப்படியே ஒன்றை ஒன்று பற்றிக்கொண்டே போகிறது. அந்த சூட்டினால் உமக்கு உடம்பு நடந்தால் கூடகூட வரும், பலகாரம் கண்டால் சாப்பிடச் சொல்லும், கட்டிலைக்கண்டால் கால்மாடு தலைமாடு தெரியாமல் படுக்கச்சொல்லும். பிள்ளையவாள் சரிதானா நான் சொல்வது' என்றார்.

'ஆமாம் ஸார். அப்படித்தானிருக்கிறது; அதற்கென்ன செய்யலாம்' என்றார் தணிகாசலம்பிள்ளை. மறுபடியும் டாக்டர் சொல்லத்தொடங்கினார். முன்பு, இந்த உஷ்ணத்தைத் தணிக்கவேண்டும்; அதற்குத் தகுந்த மருந்து இதோ தருகிறேன் என்று தமது கைப்பெட்டியிலிருந்து எடுத்துக்கொடுத்தார். தணிகாசலம் அதைப் பெற்றுக்கொண்டு, இந்த மருந்தும் விகடமாயிராதே என்றார். அதற்கு டாக்டர், என் வார்த்தை மட்டுமே விகடமாயிருக்கும்; அது என் பிறவியின் போக்கு. ஆனால், மருந்து நல்ல குணத்தையே தரும் என்று கூறிச்சென்றார்.

ஃ

கோதை:—ஒரு பாட்டு பாடு.

காந்தா:—நான் இப்போதுதானே சாப்பிட்டேன். பாட்டெல்லாம் வயிற்றின் அடியிலிருக்கு. சாப்பாடு மேலே இருக்கு. நான் எப்படிப் பாடுவேன்?

R. கோமளவல்லி அம்மாள்.

ஃ

மாமி:—ஏண்டி, இந்தப் பெட்டி மூட்டைகளெல்லாம் ஏது? உன் தாய்வீட்டுக் கூட்டம் வந்துவிட்டதா?

மருமகள்:—இல்லை மாமி; உங்கள் பெண்ணும் மாப்பிள்ளையும் வந்தார்கள். மாடியில் இருக்கிறார்கள்! வென்னீர் வைக்கப்போகிறேன்.

---

*தன் அவசரத்திற்கு அவரும், அவரது அவசரத்திற்குத் தானும் வீட்டிலிருப்பதில்லை.*

மாமி:—அப்படியா, என் கண்ணு தன் துணையோடு வந்துவிட்டாளா!

ஃ

கக்ஷிக்காரன்:—ஐயோ! அப்போதே பிராமண வக்கீலை வைத்திருந்தால் என் பக்கம் தீர்ப்பாகியிருக்குமே?

பிராமணரல்லாத வக்கீல்:—உமது எதிரி வைத்த பிராமணவக்கீல் என்ன வெட்டிச் சாய்த்துவிட்டது? போங்காணும் போம்!

கக்ஷிக்காரன்:—அந்த வக்கீல் உம்மை வெட்டிச் சாய்த்துவிட்டதை இப்போதுதானே பார்த்தீர்?

ஃ

உபாத்யாயனி:—அக்கா பெரியவளா? தங்கை பெரியவளா?

பள்ளிக்கூடப்பெண்:-இப்போது என் அக்காதான் பெரியவளானாலும், இன்னும் மூன்று வருஷம் போனால் நானும் அக்காவைப்போலப் பெரியவளாய்விடுவேன்.

ஃ

நாடக நடிகர்:—தாங்கள் தற்கால நாடகத்தைப்பற்றிக் குறைகள் கூறுவதில், மறைமுகமாகவேனும் நான் அகப்பட்டுக்கொண் டிருக்கிறேனோ என்னவோ?

நண்பர்:—தலை குப்புறக்கவிழ்ந்து உருவழிந்துவரும் மானக்கேடான ஜீவனார்த்த நாடகக் குழுவினின்றும் நாகுக்காய்த் தங்களைத் தனியாகப் பிரித்துக்கொண்டிருக்கிறோம்.

ஃ

மனைவி:—இன்று வடை சுட்டதில் கையில் எண்ணெய் சிதறி அப்படியே கொப்பளங்களாய்விட்டது.

கணவன்:—வடை சுட்டதற்கு ஒரு நல்ல ஞாபகம் இருக்கவேண்டுமென்று அப்படிச் செய்தாயா?

ராமு:—எப்போது பார்த்தாலும் இங்கிலீஷிலிருந்து மொழி பெயர்த்துவிட உன் புத்தி போகிறதே தவிர, சொந்தமாய் யோசிக்கப் புத்தி போகிறதில்லையே என்?

சோமு:—யோசித்து சுயமாய் எழுதிக் கஷ்டப்படுவதைவிட மொழி பெயர்ப்பது சுலபமாயிருக்கிறது. தமிழை மட்டுமே கட்டிக்கொண்டு அழுகிறவன்தான் யோசித்து எழுதும்படியிருக்கும். எனக்கு அந்தக் கஷ்டமே கிடையாது.

ஃ

சேஷி:—நான் குளிக்கையில் உன் குமாரன் எட்டி எட்டிப் பார்த்தான்.

குப்பு:—அவன் வரட்டும் கண்டிக்கிறேன்.

சேஷி:—பெரியவனல்ல, சின்னவன்தான் எட்டிப்பார்த்தது. எனக்கு முதுகு தேய்த்துவிட்டு, உள்ளேயிருந்து சேலையும் கொண்டுவந்து கொடுத்தான்.

ஃ

அவர்:—சென்ற தடவை நான் கடன் கேட்டதும், உடனே முப்பது ரூபாயைக் கையில் கொடுத்தீர்களே? அதை நான் குறித்ததினத்தில் தந்துவிட்டேனே. அப்படியிருக்க, இப்போது என் எனக்குக் கடன்தர முடியாதென்கிறீர்கள்?

இவர்:—நீ எப்போதும் என்னிடம் கடன் கேட்டதில்லையானதால் முதல்தடவையென்று அன்போடு கொடுத்தேன். இப்போது நீ மறுபடியும் வந்து கேட்பதால், நான் அடிக்கடி கடன்கொடுக்கிற வழக்கக்காரனல்ல வென்பதை உனக்குத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

# சென்றமாதம்

## பிராணி ஹிம்ஸையா? மனித ஹிம்ஸையா?

சென்னை ஜீவஹிம்ஸ நிவாரண சங்கத்தின் 52-வது வருஷக்கூட்டத்தில் தலைமை வகித்த மேன்மை தங்கிய கவர்னரவர்கள் பின்வருமாறு கூறினர்:—'ஒரு எளிபவனுக்கு அபராதம் விதிப்பதில், எந்த மிருகத்திற்காக அபராதம் போடப்பட்டதோ அதுதான் கடைசியில் அவஸ்தைப் படும். முக்கியமாக இத்தகைய துன்பங்கள் சரியாக நினைக்காமலும், ஏழ்மையினாலும் செய்யும் காரியங்களால் உண்டாகிறது. ஒரு ஏழைக்குடியானவனிடம் இரண்டு காளைமாடுகள் தான் இருக்கின்றன. அவைகளுக்கு என்ன நோயாக இருந்த போதிலும் தன்னுடைய ஏழ்மையின் காரணமாக அவைகளைத் தன் விவசாயத்திற்கு உபயோகிப்பான்' என்றார். கவர்னரவர்கள் தெரிவித்தது முற்றிலும் உண்மை. இந்த ஜீ. ஹி. நி. சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் சில சமயங்களில் நடுவழியில் வண்டியைமறித்துக் கொண்டு, அந்த சமயம் அவ்வண்டிக்காரன் படுகிற பரிதாபத்தைச் சற்றும் நினையாமல் அவனைப் போலீஸ் ஸ்டேஷன்வரை வரச்செய்து விடுகிறார்கள். மாட்டின் கழுத்தில் சற்று புண் இருந்தும் வண்டியிற் கட்டியது அவன் செய்த குற்றம். அவனுக்கு அந்த மாட்டின் மீது அக்கரை யில்லாமலில்லை. சாமான்யத் தவறுகளை எச்சரித் தனுப்புவது நலமாகும். பிராணி ஹிம்ஸைக்குப் பதிலாக மனித ஹிம்ஸையைக் காணும்படியாகிறது. இந்த சங்கத்தார் முன்பு தமிழில் மும்மாத சஞ்சிகையை வெளியிட்டது போல் இப்போதும் நடத்திப் பிரசாரத்தை அதிகமாகக் கொண்டு மனித ஹிம்ஸையைக் குறைக்கப் பார்க்கவேண்டும்.

ஃ

## புது அரசியல் அறிக்கை:—

மகாத்மா ஸ்வராஜ்யம் கேட்கப் புகுந்ததின் காரணமாக, ஸர்வ கட்சி மகாநாடுகள் தோன்றி மும்முறைகூடி ஆலோசித்தபின் வெளியிடப்பட்டுள்ள அரசியல் அறிக்கை எப்போதும்போலுள்ள இராஜீய ஸமத்காரத் திறமையுடனும், தேச அரசியலில் ஸர்க்காரின்பாதுகாப்புகளுக்கு வேண்டிய பலத்த ஆதரவுகளைக் கொண்டதாயும் வெளிவந்துளது. ஜனபாதுகாப்புக்கு இதில் ரக்ஷணை மிக ஸ்வல்பம். அரசுக்கும் குடிகளுக்குமுள்ள பரஸ்பர பிரீதி ஸ்நேகங்களை அதிகமாய் விருத்தி செய்வதாகவேனும், பின்னுக்கு ஸ்வராஜ்ய சக்தியை வகிப்பதற்கு யோக்கியதா ஸித்தியை உண்டு பண்ணுவதாகவேனும் இருக்கும்படியாக இந்த அறிக்கை திருத்தப்படுமாயின் அது இந்தியாவுக்கு ஒரு ஆறுதலா யிருக்கும்.

---

சுற்றிலும் மக்கள் நிற்க, மனைவியும் அருகிலிருக்க, எல்லா சம்பத்தும் கூடியிருக்க, வந்த சம்பளம் தீர்ந்துபோய்க் கையில் காசு இல்லாமல் தவிக்கும் நிலையில், குழந்தைகள் பக்ஷணத்திற்குக் காசு கேட்கும்போது வீட்டுக்காரனுக்கு அது சகிக்கொணாத சோதனையாய்த் தோன்றுகிறது. உடனே கடன் வாங்கப் புறப்படுகிறான்.

காலஞ்சென்ற திவான்பகதூர் கேசவப் பிள்ளை:—

பழங்காலத்தில் எவ்வித ஆரவாரமுமின்றி உண்மையான மனதுடன் பொது ஜனவாழ்வில் கலந்துழைத்த பெரியார்களில் ஸ்ரீமான் பிள்ளையவர்களும் ஒருவராவர். சென்னைச் சட்ட சபையில் அவர் ஸ்தானம் வகித்தது முதல் ஏழைகளின் நண்பராயிருந்து வந்தார். சிறைச்சாலைகளின் சீர்கேடுகளைப்பற்றி அவர் எடுத்துக் கொண்ட உழைப்பினால் பல நன்மைகள் உண்டாயின. காட்டிலாக்காவின் ஊழல்களையும் அவர் வெளியிட்டு அனுகூலங்கள் செய்தார். தம் காலமுற்றும் பொது வாழ்வில் சம்பந்தங் கொண்டவராய் உழைத்து வந்தார். மார்ச்சுமீ 28-ம் தேதி காலையில் திடீரென்று கடவுள் பதமடைந்தனர். அவரது பிரிவு தமிழ்நாட்டுக்குப் பெரிய நஷ்டமேயாகும்.

கல்கத்தா காங்கிரஸ் :—

இது இம்முறை அரசாங்கத்தினரால் தடுக்கப்பட்டு, அதைக் சேர்ந்தோரும் கைதுசெய்யப்படுவதாயினர். ஒரு பக்கம் புது அரசியல் அறிக்கையின் தொனி! மற்றொரு பக்கம் காங்கிரஸ் தலைவர்கள் சிறைப்பட்டுப் பிறகு விடுதலையான சப்தம்! சட்ட மறுப்பிலிருந்தும் காங்கிரஸ் விலகினால்தான் சமரஸம் ஏற்படும் அது எப்போதோ!

22—3—33-ல் நடந்த

## கெடியாரப் பரிசு பந்தயத்தில்

கீழ்கண்ட சந்தாதார்களுக்கு கெடியாரப் பரிசு வந்திருக்கிறது. இதில் குறிப்பிட்டுள்ள சந்தா எண்ணுள்ள நண்பர்கள் தபால் சிலவுக்காக இந்தியா (ஸ்டாம்பாக) அணா ஐந்தும். சிலோன் நண்பர்கள் அணா ஏழும் சிங்கப்பூர் பீஜி, தென்ஆப்ரிகா நண்பர்கள் $1\frac{1}{2}$ ஷிலிங் போஸ்டல் ஆர்டரும் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

302, 3075, 675, 510, 488, 2780, 1765, 4765, 570, 456, 1760, 1542, 1601, 1449, 1783, 1907, 2286, 5672, 498, 117, 6707 7456, 4794, 2845, 4675, 840, 950, 786, 876, 676, 768, 1200, 1004, 907, 641, 1240, 2312, 1786, 3879, 4036, 6034, 4364, 6002, 28, 475, 2991, 1392, 1765, 1815, 1745.

---

இரவில் அப்படா! பொழுது போயிற்று, ஒரு நாள் எப்படியோ முடிந்தது என்று நிம்மதியாய் உறங்கின வீட்டுக்காரன் மறுதினம் பொழுது விடிந்ததைக் கண்டு; இன்றைக்குச் செலவுகள் நடத்தவேண்டுமே யென்ற கவலையோடு பணம் குறைந்து நிற்கிற தன் பணபபையைக் கொட்டி அன்றைய செலவுக்குக் காசுகள் சில்லறைகள் இருக்கிறதா என்று எண்ணிக் கணக்கு பார்க்கிறான். இன்றைக்கு எங்கே கடன் வாங்கலாமென்றும் யோசிக்கிறான். இந்தக் கஷ்டத்தின் தன்மையைப் பணக்காரர்கள் அறியார்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# வஞ்சனை தொட்டவர்களுக்கு வாழ்வு—?



**ஆமடா அப்பா!** தலை கீழாகக் கிடக்கிற இந்த உலகத்திலே நன்றாகச் செல்வமும் சீருமாய் உயர்ந்த வாழ்வில் குந்தி கோபுரத்தில் ஏறவேண்டுமானால், அதற்காகப் பீ. ஏ. பரீக்ஷையில் தேறிப் பயனில்லையாம்! எம். ஏ. பட்டம் பெற்றும் பயனில்லையாம்! உண்மையாக உழைப்பவனுக்கு உப்பு இல்லாத பருக்கைகூடக் கிடைப்பது கஷ்டமாம்! வஞ்சனையில் கைவைத்தால்தான் வாழ்வு வருமாம்! நாற்பது, முப்பது ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகஸ்தர், தான் சாகுங் காலத்தில் வீடும் வயலும் ரொக்கமுமாகப் பதினாயிரம் ரூபாய்க்கு மேலாகச் சொத்துக்களை வைத்துவிட்டுப் போகிறார்! அறுபது ரூபாய் சம்பளம் பெற்ற உத்தியோகஸ்தருக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் சொத்திருக்கிறது! எப்படியப்பா இவ்வளவு பணமும் அவருக்குக் கிடைத்தது? அவர் வாங்கிய சம்பளம் அவருடைய பெரிய குடும்பத்தின் தினசரிச் செலவுகளுக்கே சரியாகிப் போயிருக்குமே! இன்னும் உத்தியோக டம்பத்துக்குத் தக்கபடி உடுப்புகள், வாகனாதிகள் போன்றவைகளில் வேறே செலவு பண்ணவேணுமே! இவ்வளவு பெரிய செலவுகளும் செய்து, கடைசியில் ஐம்பதினாயிரம் ரூபாய்ச் சொத்துக்கள் இருக்குமானால், அது உண்மை பேசித் தேடியதாயிருக்குமா என்பதை என் நஞ்சான் குஞ்சான்களே! கொஞ்சம் நீள யோசித்துக் கொள்ளுங்கள்!

ஃ

**இ**ரண்டு ரூபாய் அதிக சம்பளம் உயர்த்தவேண்டுமென்று பலசரக்குக் கடையிலே தன் எஜமானனைப் பல்லெல்லாம் திறந்து ஒரு காலத்தில் கெஞ்சிக்கேட்ட முத்தப்பனார் இப்போது தன் எஜமானனின் கடைக்கு எதிரே ஒரு பெரிய மளிகைக் கடையை வைத்துக்கொண்டு, இன்னும் அந்த இடத்தில் ஒரு முனிசிபல் கௌன்சிலருமாகி மோட்டாரில் சவாரி விடுவதென்றால், அவ்வளவுக்குப் பொருள் திரட்டியவழி எப்படி? அந்த முத்தப்ப முள்ளங்கியாரையே விகடன் கண்டு கேட்டதற்கு; அவர்

---

ஒவ்வொருவனுக்கும் ஒரு தைரியம் இருக்கிறது. இன்னாரின் உதவி தனக்கு ஒரு பெரிய பலம் என்று நம்புகிறான். அந்த நம்பிக்கையே அவனை வாழவைக்கிறது. எதையும் சகித்து சமாளிக்கப்பண்ணுகிறது.

"என்னடா! விகடா! இது கூடவா உனக்குத் தெரியாது; கடையிலே தினத்துக்கு இரண்டு ரூபாய் வீதம் பல சில்லரையாகச் சுரண்டினால் மாதம் 60-ரூபாய் ஆகி, அது வருஷத்திலே 720-ரூபாயாகி, அதற்கு வட்டி சேர்ந்து ஆயிரம் ரூபாய் கொண்ட ஒரு பையாகி விடுகிறது. இப்படி எட்டு வருஷத்திற்குச் சுரண்டினால் வட்டியும் முதலுமாகப் பதினாயிரம் ரூபாய் சுலபத்தில் சேர்ந்து விடுமே! இன்னும் அதை வியாபாரத்திலிட்டுப் பெருக்கினால் 12, 13, 14, 15-ஆயிரமாகவும் உயர்ந்து விடுகிறது! நான் எஜமானனிடம் சம்பளம் உயர்த்தும்படி கேட்டது இரண்டே ரூபாய்தான்! அதற்கு அவர் ஒப்பாமல் வேறு கடையைப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டார்! அதன் பிறகு தான் சுரண்டுகிற வேலையில் இறங்கி இந்த உயர்வுக்கு வந்தேன். திருடிச் சேர்த்ததல்ல, சுரண்டி வஞ்சித்துச் சேர்த்தது; திருட்டுக்கே சிறை தண்டனை; வஞ்சனைக்குத் தண்டனையில்லை" என்றார்.

ஃ

மூன்றுபேர் கூட்டு வியாபாரம் செய்கிறார்கள். அதில் ஒருவன் கை உயர்ந்துபோய் முக்கியஸ்தனாகி, மற்ற இருவரும் அவனுக்கு உட்பட்டு நடப்போராயிருக்கிறார்கள். உயர்ந்து போனவன் இவர்களைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு, வருகிற லாபத்தையெல்லாம் பிரித்துக்கொடுப்பதை விட, தான் தனியாகப் பிரிந்து வியாபாரம் செய்துகொள்வது மேலென்று வஞ்சனையாய் நினைத்து அப்படியே பிரிந்துவிடுகிறான். முழு வியாபார ரகசியமும் அவன் கையிலேயே இருப்பதால் அவன் பக்கமே முழு வியாபாரமும் ஆகி, மற்றவர்கள் தங்களுக்குக் கிடைத்த சொற்பத்தோடு ஒதுங்கவேண்டியிருக்கிறது! ஆகவே, வஞ்சனை செய்தால்தான் வாழலாமாம் வெகுகாலம் உலகமீது!! இது உண்மையா? உண்மையென்றே உலகமும் சொல்லுகிறதப்பனே!

ஃ

ஏதோ வெகுதூரத்து உறவு என்று ஒருவன் வீட்டு வாசலிலே வந்து நிற்கிறான். ஐயோ! பாவம் என்று இரக்கப்பட்டு அவனை வீட்டுக்குள் சேர்த்துக்கொண்டு தன் கடையிலேயே ஒரு வேலை கொடுத்து ஆதரிக்கப் புகுந்ததில் கடைசி முடிவு என்ன? அவன் வீட்டிலுள்ள பெண்களை வசப்படுத்திக்கொண்டு குடும்பத்தையே இரண்டாகப் பிரித்து, அப்படிப் பிரிந்துபோன குடும்பத்திற்குத் தான் தலைவனாகி, முன் தன்னை ஆதரித்த வீட்டுக்காரனுக்கு நேர் விரோதியாகிக்கொண்டு பெரிய பிரபு ஸ்தானத்துக்கு உயர்ந்து விடுகிறான்! இவன் இந்த மேன்மையான நிலைக்கு வந்தது எப்படியப்பா? வஞ்சித்தா? உண்மையாக நடந்துகொண்டா?

ஃ

குமாஸ்தாவாக இருந்து குஞ்சுராயர் இப்போது பெரிய அதிகார ஸ்தானத்தில் தடபுடல் செய்து தாண்டவமாடுகிறாரே! இளையாளாக வந்த இரங்கம்மா, சொத்துக்குப் பாத்தியஸ்தனான மூத்தாளின் குமாரன் திடீரென்று பாயில் படுத்து மறுபடி எழுந்திருக்காமலேபோக, அவள் கணவனும் அந்தப் புத்திர சோகத்தால் சாக, முழுச்சொத்து முப்பதினாயிரம் ரூபாய்க்கும் இப்போது சொந்தக்காரியாகிவிட்ட

---

மொத்தமான தொகையாய் வட்டிக்கு விட்டுள்ள தொகையில் கையிடாமலே ஜாக்கிரதைப்படவேண்டும். தப்பித்தவறி அதில் ஒரு காசு எடுப்பினும், பிறகு பல ரூபாய்கள் எடுக்கும்படியாகி அடியோடு தீர்ந்துவிடலாம்.

அதிர்ஷ்டம் எப்படி வந்தது? தன் அண்ணன் சொற்படி மூத்தாள் மகனுக்கும் தன் கணவனுக்கும் மருந்து வைத்ததில் வந்த வாழ்வல்லவா இது! விசுவாசக்காரனுக்கு வென்னீரும் பருக்கையும்கூடக் கிடைப்பது கஷ்டம்! எல்லாம் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டவனுக்குத்தான் ஒன்பதாமிடத்திலே ராஜா! இந்தப் பக்கமும் இளித்து, அந்தப் பக்கமும் வேண்டியவன்போலப் பேசி, நடுவிலே பறிப்பவர்கள்தான் வெகு நல்ல மனிதர்களென்று பேர் வாங்குகிறார்கள்! நேருக்கு ரொம்ப அன்பாகச் சிரித்துப் பேசிக் கொஞ்சுகிறது! உள்ளுக்கோ அடியோடு கெடுக்க வேலை செய்கிறது! அப்படிப்பட்டவர்களுக்குத்தான் நல்ல வாழ்வும் சம்பத்துகளும் உண்டாகிறது! எந்த சங்கதியிலும் தனக்கு ஒரு வருமானம் கிடைக்கும்படி ஆராய்கிறதே சிலருக்குத் தொழில்! எவரிடமிருந்து எதைப் பிடுங்கிப் போகலாமென்று பார்ப்பதே சிலருக்கு வேலை! பிறன் கைச் செலவிலேயே தன் செலவையும் சரிப்படுத்திவிடுகிறது சிலரது போக்கு! ஏமாந்த இளிச்சவாயன் வீட்டிற்கே திரும்பத் திரும்பப் போய்க் கூண்டோடு குந்திக்கொண்டு தன் வீட்டுப் புசிப்புச் செலவைக் குறைத்துக்கொள்வது சிலரது வழக்கம்! இப்படியாக வஞ்சித்து மேல்படிக்கு உயருகிறவர்களைப் பற்றியும், லாபம் தேடிக்கொள்ளுகிறவர்களைப் பற்றியும் விகடன் எவ்வளவோ வண்டிக்கணக்காய் விரித்துச் சொல்லக்கூடும்! எவ்வளவு சொன்னாலும், கடைசியில் அது கசுமாலச் சாக்கடையாய் நாறுவதாகத்தானிருக்கும்! ஃ

வஞ்சனை தொட்டவர்களுக்கே வாழ்வு என்றால், அப்படியே அவர்கள் நன்றாக வாழ்வதையும் கண்ணுக்கு நேரே பிரத்தியக்ஷமாய்க் காண்பதானால், பின் எதற்காக உலகத்தார் உண்மையான வழியிலே நடந்துகொண்டு தரித்திரப்படவேணுமோ? இங்கேதான் இருக்கிறது சிக்கலான சங்கதி? அது என்னவென்றாலோ, வஞ்சித்தவன் பக்கம் உலகத்தின் புகழும், பூலோகத்தின் சம்பத்துக்களும் இருக்கின்றன; வஞ்சிக்கப்பட்டவனின் சார்பிலோ எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் துணையாயிருக்கிறார்! இப்படியாகத் தெய்வத்துணை யிருப்பது முதலில் தெரியாமல் கடைசியில்தான் தெரிகிறது! அதுதான் உலக வாழ்வினுடைய ஒரு பெரிய மர்மமான திரை மூடிய இரகசிய சங்கதி!

ஃ

பெரிய வேதாந்த வியாக்கியானங்களுக்கு விகடன் எப்போதுமே போவதில்லை! எதிரிலேயே இருக்கிற அற்ப சொத்தைச் சரக்குகளைக் கொண்டும், சின்னஞ்சிறு சாமான்ய சங்கதிகளைக் கொண்டுமே பெரிய ஞானங்களைப் பிளந்து காட்டுவது விகடனுக்கு வழக்கம்! இதோ பாருங்களேன்! ஒருவன் ஒரு கடைக்காரனை வஞ்சித்துக் காலணா கொண்டுவந்துவிடுகிறான்! இவன் வீட்டுக்கு வந்ததும் நடப்பதென்ன? இவனுடைய மனைவிக்கு நெஞ்சு அடைத்துக்கொண்டு அதற்காக இரண்டு சோடா புட்டி வாங்கக் கடைக்கு ஓடும்படியாகிறது! அவன் வஞ்சித்துக் கொண்டுவந்த காலணாவுக்குப் பதிலாக இப்போது ஆறு பங்கு அதிக

---

நெடுநாளைய அனுபவத்தால் தூண்டப்பெற்றுச் செய்யும் மூளையின் கூர்மையான வேலைக்கும், சாதாரணமாக ஒருவன் செய்யும் வேலைக்கும் மலைக்கும் பள்ளத்திற்குமுள்ள பேதம் இருக்கவே செய்யும்.

மாய் ஒன்றரையணு சோடாபுட்டிகளுக்காகச் செலவிடும்படியாய்விட்டது! இப்படி வஞ்சித்ததின் முடிவை உடனுக்குடனே கடவுள் காட்டிவிடுவது சில சமயங்களில்மட்டும்தான் உண்டு. அதாவது யோக்கியமாயிருந்த ஒருவன் தப்பான செய்கையில் முதலிலே தலையிடும்போது உடனே அவனைச் சிக்ஷித்து, தான் செய்த தகாத செயலுக்குக் கிடைத்த நஷ்டத்தையும் தண்டனையையும் உணரவைத்துத் திருத்திவிடுகிறார்! எப்போதும் தவறு வழியிலேயே செல்லும் பெருச்சாளியப்பனையோ கடவுள் ஒன்றுமே செய்வதில்லை! அவனும் வஞ்சனைக்கு மேல் வஞ்சனையாய் அநேக சங்கதிகளை நடத்திப் பெரிய மனிதனாகிவிடுகிறான்! கடைசியிலேதான் கடவுள் அவனுக்குச் சோதனை காட்ட எதிர்ப்படுகிறார்! இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு லாபமான சங்கதியில் வேலை செய்கிறபோது, முதல் மனிதன் எவ்வளவு அதிகம் வந்தும் கொஞ்சம் வந்ததாகவே காண்பித்து, இரண்டாவது மனிதனுக்குச் சொற்பமான லாபமே தந்து, மற்றதையெல்லாம் தான் விழுங்கி ஏப்பம் விடுவதானால், சீக்கிர காலத்திலேயே அந்த முதல் மனுஷன் திடீரென்று ஒரு கொள்ளை நோயிற் போய்விட, அவன் சேர்த்தவைகளைத் தாயாதிகள் சுருட்டிக்கொண்டு கம்பிநீட்ட, அவன் மனைவி மக்கள் ஏங்கி உண்ணச் சோறற்று நடுத்தெருவுக்கு வந்துவிடுகிறார்கள்! சொற்பக்கூலி சம்பளங்களைக் கொடுத்துப் பெரிய வேலைகளை முடித்துக்கொண்டு, பாக்கிக் கூலி சம்பளங்களைத் தராமலே ஏமாற்றுவோரும் பின்னுக்குத் தொப்பென்று கீழே விழுந்து போகிறார்கள்! உடன்பிறந்தவனை வஞ்சித்துச் சேர்த்த சொத்துகளைக் கொண்டு அண்ணன் பெரிய வீடு கட்டி மகிழ்ந்தாலும், ஆடி பதினெட்டில் வருகிற வெள்ளத்திலே அந்த வீடு அடியோடு சாய்ந்து உட்கார்ந்துவிடுகிறது! இன்னொரு குடும்பத்தை வஞ்சித்துத் தன் குடும்பத்தை உயர்த்தப் பார்க்கிறவனின் சங்கதியோ, சில நாளில் அவன் குடும்பத்தார் முழுதுமே மரணதேவதைக்குப் பலியாகிப் போய்த் தனி மனிதனாகி ஊரார் இகழ ஏங்கும்படியாகிவிடுகிறது!

ஃ

வஞ்சித்துச் சேர்த்து வாழ்வுகண்ட சிலரைப்பற்றி விகடன் மேலே சொல்லியிருக்கிறேனல்லவா? அவர்களின் பிற்காலச் செழிப்பையும் இங்கே பிளந்து காட்டிவிடுகிறேன்! முதலிலே நாற்பது முப்பது ரூபாய் சம்பளத்தில் பதினாயிரம் ரூபா தேடியவரை எடுத்துக்கொள்கிறேன்! இவர் வஞ்சித்துச் சேர்த்த சொத்துக்கள், இவரது மூன்று குமாரர்களுக்கும் பாக சொத்து வகையில் வியாஜ்ஜியங்களுண்டாகி, வக்கீல்களுக்கு வாரி யிறைக்கப்பட்டுக் கடைசியிலே மிச்சப்பட்டதில் மூவரும் பாகித்துக்கொள்கிறார்கள். மூத்த குமாரனுக்குப் பிறந்த இரு புத்திரர்களும் முட்டாள்களாகிச் சொத்துக்களை யழித்து வீட்டை விற்றுத் தெருத்திண்ணைக்கு வந்துவிடுகிறார்கள்! இரண்டாவது குமாரனுக்குப் பெண் குழந்தைகளே பிறந்து அவர்களின் விவாகத்திலே சகல சொத்துக்களும் தீர்ந்துபோகிறது! மூன்றாவது குமாரன் விவாகமில்லாமலே கிடந்து துன்மார்க்கத்தில் யாவற்றையும் தொலைத்துச் சாகிறான்! வஞ்சித்துச் சேர்த்ததின் முடிவைக் கண்டீர்களா?

---

"பொருளை நினைத்தல்ல, பிறர் நன்மையை நினைத்தே பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுகிறேன். அப்படி எழுதுவது எனக்கு ஒரு இன்பமான —ஆத்மதிருப்தியான பொழுதுபோக்காக இருக்கின்றது."

அறுபது ரூபாய் சம்பளத்தில் ஐம்பதினுயிரம் ரூபாய்கள் தேடியவரின்வாழ்வோ, எழைகளின் வயிற்றில் அடித்துச் சேர்த்த சங்கதியாகும். அவருடைய மூத்த குமாரனுக்குச் சந்ததி யில்லை. அவருடைய புத்திரியோ மலடியானுள். அந்தப் புத்திரியை மணந்தவனே வீட்டோடு உட்கார்ந்து தின்பவனுய்ச் சொத்துக்களில் முக்கால் பாகத்தை யழித்துத் தீர்த்துப் பெரிய வீடும் எலத்தில் தொலைந்து, இப்போது எல்லோரும் வாடகை வீட்டில் வாழப்போய்விட்டார்கள்! ஊராரை வஞ்சித்துச் சேர்த்ததில் பின்னுக்குக் குடும்ப விருத்தியிருக்கிறதா? ஃ

இரண்டு ரூபாய் வீதம் சுரண்டி அதிலிருந்து உயர்ந்தவரின் சங்கதியோ, அவரது மனைவியும் மாள, மகனும் போக, அவரது மோட்டார் வண்டியே மோதி அவரைப் பரலோகம் அனுப்ப, கடைசியில் அவ்வளவு சொத்துக்களும் எங்கிருந்தோ முளைத்த ஒரு தூரமான தாயாதியின் கைக்குப் போய்ச் சேர்ந்தது! வஞ்சிக்கப்பட்ட எஜமானனே நாளைக்கும் நன்ருகவே வாழ்ந்து வருகிருர்! இப்படியே கூட்டு வியாபாரத்திலிருந்தும் வஞ்சகமாய்ப் பிரிந்தவனும் பின்னுக்கு வியாபாரத்தில் நஷ்டமடைந்து தாழும்படியாகிவிட்டது! வீட்டுக்கு அன்னிய தூர உறவாய் முதலில் குந்திக் குடும்பம் பிரித்துப் பிரபுவானவன். கடைசியில் எல்லாச் சொத்துக்களையும் குடியிலும், சூதிலும், புது வீடு கட்டிக் கடனில் முழுகியதிலும் தொலைத்து எங்கோ வேற்றூருக்குக் கண்காணுது ஒடி மறையும்படியாகிவிட்டது! புருஷனுக்கு மருந்திட்டு எல்லாச் சொத்துக்களையும் அடைந்த ரங்கம்மாள் தன் செல்வத் திமிறினுல், தன் அண்ணன் முதலியவர்களைப் பகைத்து விலகி, வேருேரிடத்தில் ஒரு பையனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்போக, இப்போது அந்த சுவீகாரக் குமாரனே பெரியவனுகிச் சகல சொத்துக்களையும் தன் வசப்படுத்திக்கொண்டு ரங்கம்மாளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான்! விட்டேனு பார் என்று ரங்கம்மாள் வியாஜ்யத்திற்குப்போகப் போகிறதாய்ச் சொல்லித் திரிகிருள்! மருந்திட்டுச் சொத்துகள் சேர்த்து இவள் என்ன வாழ்வு கண்டதோ!

ஃ

இவ்விதமே வஞ்சித்தும், பிறர் வயிறு எரியச் செய்தும், மற்றவர் கதறிப் புலம்பும்படி வைத்தும் பெரிய வாழ்வு தேடுகிறவர்களின் சங்கதிகளெல்லாம் பின்னுக்குப் பெரிய சோதனையாகவே முடிகின்றது! கடவுளுக்குப் பயந்து தர்ம மார்க்கத்தில் நடப்போருக்கு எந்த நாளும் குறைவில்லை. அவர்கள் தரித்திரமாய் வாழ்ந்தாலும் தெய்வம் அவர்களுக்கு வேண்டிய மனே சமாதானத்தைக் கொடுத்து என்றைக்கும் அபிவிர்த்திக்கே வழி காட்டுகிறது! வஞ்சித்தவனுக்கோ மனேசமாதான மில்லை! அவன் நெஞ்சே அவனைக் குத்தித் தொளைக்கிறது! எந்தக் காலத்திலும் பிறர் மனதைக் குளிரச் செய்து உத்தமனுக நடந்துகொள்பவனுக்கு ஊராரின் துணையும் உண்டு, உலக வாழ்வும் உண்டு, தெய்வமும் அவன் பங்கிலிருக்கும். எதோ விகடக் கிழவன் உளறினேன்! உங்களின் மனப்போக்குகள் எப்படியோ—முடிவும் அதற்குத் தகுந்தபடிதான்! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

---

நமது நண்பனுக்கென்று நாம் சில புஸ்தகங்கள் தரப் போக, அந்த சமயம் அங்குவந்த மற்ருெரு பெரிய தடபுடல் பிசினுரி மனிதன் அதைக் கொண்டுபோய் விடுகிருன். நமது மனம் படும் வேதனையோ—?

# சித்திர விநோதங்கள்.

## கணிகையரது கபட ஜாலம் :—

ஒரு கணிகைக்கு இரு ஆசை நாயகர்களிருந்தனர். அவர்களுள் ஒருவனுடன் ஸல்லாபித்து நிற்குஞ் சமயம் அவன் இருப்பதறியாத இன்னொருவன் இவர்களிருக்கும் அறைக்குள் வருகிறான். அவனது காலடி ஓசையைக் கவனித்த விலைமாது, தன்னுடன் ஸரஸித்துக்கொண்டிருந்தவனின் கண்களை ஒரு கையால் மூடிக்கொண்டு, இன்னொரு கையால் அங்கு வந்தவனுக்கு மிக்க பிரியமானவள் போன்ற சைகையை உணர்த்திக் கட்டிலின் கீழ் பதுங்கிக்கொள்ளும்படி வேண்டுகிறாள். அவனும் அவ்விதமே செய்கிறான்.



இனி, கட்டிலின்மேல் ஸரஸித்துநின்ற ஆடவன் தன் கண்களைப் பொத்தியதற்குக் காரணம் கேட்கிறான். அதற்கு அவள் தனது சிறு பிராயத்துக் கண்ணாமூச்சி விளையாட்டு ஞாபகம் தோன்றித் தான் அப்படிச் செய்ததாய்க் கூறி நிகழ்ந்ததை மறைக்கின்றாள். இதையே இச்சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. இதைக் குறித்து ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளை தமது "நீதிநூ"லில் வேறொரு மாதிரியாகச் சொல்லி யிருக்கின்றார். அதுவும் இந்த சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமுள்ளதா யிருத்தலால் கீழே பதிப்பித்திருக்கிறோம்.

வண்ணமல ரமளியின்மே லிருக்கையிலோர் பரபுருடன் வரவுநோக்கிப்
பண்ணமரு மொழிமின்னாள் விளையாடல்போற் றன்கைப் பதுமத்தாலென்
கண்ணதனை மூடிவிடேனெனநகைத்தாள்; வேற்றார் கள்ளீயென்றேன்
கண்ணடிபோற் றிகழுமென் றன்கபோலமதிலுன்னுருவைக் கண்டாயென்றாள்

இதன் பொருளாவது :—அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட மெத்தையின்பேரில் நானும் என்னுடைய தாசியும் இருக்கும்பொழுது மற்றொரு பரபுருஷன் வருவதைக் கண்டு, வீணை வாத்தியத் தொனியுள்ள அந்த விலைமாதானவள், விளையாடுவதுபோலத் தன்னுடைய தாமரைப் புஷ்பத்துக் கொப்பாகிய கைகளினால் என்னுடைய கண்களை மூடிக்கொண்டு விடமாட்டேனென்று சிரித்தாள். அடி கள்ளி! இங்கு வந்த வேற்று மனிதன் யாரென்று கேட்டேன். ஒருவருமில்லை; கண்ணாடியைப்போற் பிரகாசிக்கிற என்னுடைய கன்னத்தில் உன்னுடைய ரூபத்தையே கண்டாயென்றாள்.

ஃ

---

அடியோடு கெட்டுப்போனவனுக்கு நல்ல புத்தி ஏற்படுவது அபூர்வம். அதுமுதல் அவன் நயவஞ்சகனாயும் மோசக்காரனாகவும் ஏமாற்றுகிறவனாகவும் ஆகிறான்.



மேனுட்டுக்காதல்:—லண்டன் நகரில் ஒரு ஸ்திரீ ஹோட்டல் வைத்துக் கொண்டிருந்தாள். அங்கே வந்து சில நாட்கள் தங்கிய மகம்மதியப் பிரபு ஒருவர் அவள்பேரில் காதல்கொண்டு பிரேமையுடன் நோக்க, அவள் அவரைப் பரம விசுவாசத்துடனும் பார்க்க, இருவரின் கண்களும் அழகாய்ச் சந்தித்தன. அதுமுதல் இருவருக்கும் நேசமுண்டாகி ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதிக்கொள்ளத் தொடங்கினர்.



இக்கடிதங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஹோட்டல்காரி தன்னை அம்மகம்மதிய கனவான் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அன்றேல் வாக்குத்தத்தம் செய்து தவறியதற்காகத் தனக்கு நஷ்டம் தரவேண்டியதென்றும் வியாஜ்யம் தொடர்ந்தாள். மேற்படி ஸ்திரீக்கு 125-பவுன் நஷ்டபரிகாரம் தரவேண்டுமென்று தீர்ப்பாயிற்று. மேனுட்டுக்காதலின் விபரீதம் இது.

ஃ



குலசேகர தாஸர் :— அடியேன் தாஸன். இப்போது அக்ஷயபாத்திரை எடுப்பதில் லாபமில்லை. காலையிலிருந்து அலைந்து ஒன்றரைபடி அரிசிதான்கிடைத்தது. இதை விற்ருல் இரண்டணுதான் வரும். எந்தச் செலவைச் செய்கிறது ?

அழகிரி மன்னர் தாஸர் :— பழய நாளில் ரூபாய்க்கு $2\frac{1}{2}$ படி அரிசியாயிருந்தபோது, நாம் மூன்றுபடி அரிசி கொடுத்தால் ஒருமுழு ரூபாய் தந்து தண்டம் ஸமர்ப்பித்துவாங்கிக்கொள்வார்கள். இப்போதோ முடியாது. காலம் கெட்டுவிட்டது.கலிமுற்றிவிட்டது. ஆழ்வார்எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒரு உத்தியோகஸ்தர் தன் மேல்அதிகாரியுடன் வெளியூருக்குச் சென்று அங்கு ஒரு நண்பரின் வீட்டில் தங்கியிருந்தார். இவர் இருந்த ஊரில் நடந்த உத்ஸவத்திற்காக உத்தியோகஸ்தரின் மனைவியும் இருகுழந்தைகளும் சென்றிருந்தனர். ஒரு தினம் வீதிவழியே செல்லுகையில் தன் பர்த்தா அங்கு ஒரு வீட்டில் இருப்பதைக் கண்டு ஆவலுடன் உட்சென்று கணவனைகண்டு மகிழ்ந்தாள். உத்தியோகஸ்தரும் தன் மனைவியையும் மக்களையும்கண்டு பூரித்தார் அந்த சமயம் அவரது அருகில் உட்கார்ந்திருந்த நண்பர் இக்கூட்டத்தைக் கண்டதும் இதேதடா தொல்லை இவர்களும் வீட்டில் தங்குவார்கள்போ



லிருக்கிறதே யென்று வெறுப்புடன் தன் முகத்தை வேறொரு பக்கமாய்த் திருப்பிக்கொண்டார். தன் மனைவி மக்களை அந்த நண்பருக்குக் காண்பிக்க நினைத்த உத்தியோகஸ்தர், அவர் மௌனமாய் வேறுபக்கம் திருப்பிக்கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றார். இதற்குள் மனைவி மக்களும் விடைபெற்றுச் சென்றனர். அவர்கள் போனபிறகு அந்த நண்பர் உத்தியோகஸ்தரைநோக்கி, வந்தவர்கள் யார் என, அதற்கு உத்தியோகஸ்தர் என் மனைவி மக்களென்றார். உடனே நண்பர், அப்படியா! எனக்குத் தெரியாதே, அவர்களையும் இங்கு இருக்கும்படி சொல்லி யிருக்கலாமே என்றார். உத்தியோகஸ்தர் தமது நண்பரின் போலி உபசாரச் செய்கையை நோக்கிப் புன்னகை கொண்டார்.

ஃ

மூத்தமனைவி :—அதிகம் பேசாதே தெரியுமா என் சங்கதி ? கையிலிருக்கும் சாமரத்தால் உனக்கு ஸன்மானம் தருவேன். சீ ! வாயை மூடு.



இளைய மனைவி :—அப்படியா ; உனக்கு நான் குறைந்தவளல்ல. என் கையில் திவ்ய தேஜஸுடன் அக்கி பகவான் ஜ்வலிக்கிறான். உனக்கு நல்ல அறிவு உண்டாகும்படித் தடவிக் கொடுப்பேன்.

மூத்த மனைவி:—என்னடி துள்ளுகிறாய் ? இதோ வந்தேன்.

இளைய மனைவி :—சும்மா நீட்டித் தாண்டிக் குதிக்காதே. நானும் தயாராயிருக்கிறேன். வாடி வெளியிலே!

உடனே இருவரும் நர்த்தன நாட்டியங்களுடன் சந்தித்தனர். இவ்விருவரின் கணவன் ஜன்னல் வழியாக இதை எட்டிப்பார்த்து ஏங்கலானான்.

மோசக்காரப் பாவிகள்:—உலகத்தில் கபடமும், மோசகிருத்தியமும் அதிகரித்து வருகின்றன. சில தினங்களுக்குமுன் ஒரு கிராமத்தில் ஒரு மனிதன் தெருவில் போய்க்கொண்டிருக்கையில் வேறொரு வழிப்போக்கனேடிவந்து, ஐயா, இங்கே வாரும், ஒரு விஷயம் உம்மிடம் சொல்லுகிறேனென்றான். இவன் வார்த்தைப்படி அவன் சிலதூரம் போகவே, வேறொருவனோடிவந்து ஒரு திருட்டு நகையைஅவன் சட்டைக்குள்வைத்து முதலில் வந்தவனை அழைத்துக்கொண்டோடினான். சிறிது நேரத்திற்குள் ஒரு காவற்காரன் அங்கு வந்தான். அவனோடு முன்பு வந்தவனும் கூடவந்து, ஐயா, இவன்தான் கள்வன்; இதோ பாருங்கள், எங்கள் வீட்டுக் குழந்தை யணிந்திருந்த நகை இவனிடமிருக்கிறதென்று காண்பித்தான். காவல்காரன் நிரபராதியாகிய அவனைப் பிடித்தடிக்கவே, குற்றமற்ற அம்மனிதன் இவர்களிடமிருந்து தப்ப வழிதெரியாமல் மயங்கி நின்றான்.



காவல்காரன், "என்னடா, திருடன்போல் விழிக்கிறாய்? என்ன சொல்கிறாய்? நீ திருடனாதலின் உன்னை மாஜிஸ்திரேட்டினிடம் கொண்டுபோகிறேன்" என்று பயமுறுத்தினான். அவன் அஞ்சி நடுங்கி, ஐயா, என்னை கோர்ட்டுக்கச்சேரிக்கு இழுக்க வேண்டாம், என்னை விட்டு விடுங்கள்; நீங்கள் கேட்டதைத் தருகிறேனென்றான். இவன் பயத்தைக் கண்ட அவர்கள் தைரியம்கொண்டு அவன் அணிந்திருந்த கடுக்கன், அரைஞாணைத் தரும்படி கேட்க, பயங்காளி அவைகளைக் கழற்றிக் கொடுத்துத் திரும்பிப்பாராமல் வீட்டுக்கோடினான். இவனுடைய துரதிர்ஷ்ட ரூபமான இருவரும் அவைகளை வாங்கிக்கொண்டு ஸந்தோஷத்தோடு சென்றனர். இவ்வித காரியங்கள் நகர வாஸங்களிலும் அடிக்கடி நடக்கின்றன. அனாவசியமாய்த் தெருக்களில் நம்முடன் பேச நெருங்குவோரைக் காணில் தக்ஷணமே தூரச் சென்றுவிடுவது நலம்.



ஃ

---

புதிய கௌரவம் புருஷனையும் மனைவியையும் உறவினரையும் கூடப் பிரித்துவிடுகிறது. பழைய அந்தஸ்திலே, கணவனும் கணவியும் ரயிலில் மூன்றாம் வகுப்பிற் சேர்ந்து சென்றனர். புது பதவியில் கணவன் இரண்டாம் வகுப்பில் ஏற, மனைவியும் உறவினரும் தனியாய் மூன்றாம் வகுப்பு வண்டியில் இருக்க நேர்கிறது.

# “ அமிர்த குணபோதினி ”

## ஸ்ரீமுக ஹஸ்த்திய சித்திரை மாத பஞ்சாங்கம்.

| யோகம் | இங் | தமிழ் | வார | திதி, நக்ஷத்திரம் விரதாதிகள், முதலியவை. |
|---|---|---|---|---|
| சி-பி | 13 | 1 | வியா | திரி-8-27, அநு-51-26, மேஷரவி 6-53, விஷு [வத் புண்ணியகாலம், ஸமார்க்கம். |
| ம-அ | 14 | 2 | வெ | சது-0-26, உப-52-29, கேட்-46-0, பஞ்சமி திதி. |
| சி | 15 | 3 | சனி | ஷஷ்-46-48, மூல-41-33, பெரும்பூதூர். திருநீர் [மலை, ரதம். |
| சி-அ | 16 | 4 (4—28) | ஞா | ஸப்-41-46, பூரா-38-10, திருவல்லிக்கேணி, ஸ்ரீ |
| ம-அ | 17 | 5 | திங் | அஷ்-37-57, உரா-36-6. |
| சி | 18 | 6 | செ | நவ-35-32, ஸ்ரூவ-35-25. கரிநாள். |
| பி-சி | 19 | 7 மேஷ | புத | தச-34-25, அவி-36-1. |
| ம-சி | 20 | 8 | வியா | ஏகா-34-36, சத-37-52, ரிஷபாயனம்-32-8. |
| சி | 21 | 9 | வெ | துவா-35-53, பூட்-40-52. |
| சி-பி | 22 | 10 | சனி | திர-38-15, உட்-44-48, பிரதோஷம், சிவராத்ரி. |
| அ-சி | 23 | 11 | ஞா | சசி-41-30, ரே-49-36. ஸ்ரீமுஷ்ணம் வராஹஜயந்தி |
| சி | 24 | 12 | திங் | ● 45-36, அசு-55-10, சோமவார அமாவாசை. |
| சி | 25 | 13 | செ | பிர-50-26, பர-60-0, வைசாகசுத்தம். [தரிசனம். |
| சி-அ | 26 | 14 | புத | துவி-55-56, பர-1-40, கிருத்திகா விரதம், சந்திர |
| ம-உ | 27 | 15 | வியா | திரி-60-0, கிரு-8-36, கரிநாள், மோஹரம் 1வ |
| ம-சி | 28 | 16 | வெ | திரி-1-54, ரோ-15-59, திரேதாயுகாதி. |
| சி | 29 | 17 | சனி | சது-8-5, மிரு-23-29. |
| சி | 30 | 18 | ஞா | பஞ்-14-7, ஆரு-30-45, ஸ்ரீ சங்கரஜயந்தி பிசாசு |
| அ-சி | 1 | 19 | திங் | ஷஷ்-19-34, புந-37-19, திருமுலைப்பால். |
| சி | 2 | 20 | செ | ஸப்-23-48, பூச-42-49, அப்பர்காக்ஷி. |
| சி | 3 | 21 | புத | அஷ்-27-8, ஆயி-46-43, ஆத்ம பூஜை. [ரம். |
| அ-சி | 4 | 22 | வியா | நவ-28-8, மக-48-38, திருக்கடவூர் காலன் ஸம்ஹா |
| சி | 5 மே | 23 | வெ | தச-26-36, பூர-48-37, திருவகீந்திரபுரம் கருடன். |
| உ-ம | 6 | 24 | சனி | ஏகா-23-27, உத்-46-29, திதி துவயம். |
| அ-சி | 7 | 25 | ஞா | துவா-18-19, ஹஸ்-42-28, கஞ்சிவரதர் திருநக்ஷத் திரம், பிரதோஷம். |
| பி-அ | 8 | 26 | திங் | திர-11-33, சித்-36-57, ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி. |
| சி-ம | 9 | 27 | செ | சசி-3 28, உப-○-50-53, ஸ்வா-30-19, சித்திரா பௌர்ணமி. மட ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி, நடபாவி |
| சி-அ | 10 | 28 | புத | பிர-44-50, விசா-23-4, அவமா, வைசாகபகுளம். |
| சி-பி | 11 | 29 | வியா | துவி-35-24, அநு-15-38, கஞ்சி வரதர் தோட உத் |
| ம-அ | 12 | 30 | வெ | திரி-26-28, கேட்-8-26, [ஸவம். |
| சி | 13 | 31 | சனி | சது-18-23, மூல-1-58, உப-54-43, ரிஷபரவி 59-47, மேஷ கிருஷ்ண சதுர்த்தி திதி. |

| | | | |
|---|---|---|---|
| 4 | ரவி சு | | |
| ரா | 15உ-க்கு ராசி | | |
| சனி | | | குஜ குரு கேது |
| | | | |

“அமிர்த குணபோதினி” பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.